வ.உ.சியும் தமிழும்

சுயசரிதை

முனைவர் அ. சங்கர வள்ளிநாயகம்

மெய்யறிவு

திருக்குறள்

பாடற்றிரட்டு

சிவஞானபோதம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

வ.உ.சியும் தமிழும்

முனைவர் அ. சங்கரவள்ளிநாயகம்
தலைவர், தமிழ்த்துறை
கோ. வெ. நா. கல்லூரி, கோயிற்பட்டி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
சி.ஐ.டி. வளாகம், தரமணி (அஞ்சல்), சென்னை-600113

கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார்
அறக்கட்டளைச் சொற்பொழிவு—4
(4, 5-11-92)
Kappalottiya Tamilar V.O. Chithambaranar
Endowment Lecture No. 4
Endowment Lectures Publication No—49

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Va. U. Ciyum Tamiḻum
Author	:	Dr. Sankara Vallinayagam Head, Dept. of Tamil, K.V.N. College, Kovilpatti
Publisher & Copy right	:	International Institute of Tamil Studies, CIT Campus, Taramani, Madras-600 113
Publication No	:	186
Language	:	Tamil
Date of Publication	:	June 1994
Edition	:	First
Paper used	:	Tamil nadu Creamove(m) 16 kg
Size	:	21X14 cms
Printing types	:	10 point
No. of Copies	:	1200
No. of pages	:	VIII + 96
Price	:	Rs. 18/-
Printers	:	Kavinkalai Achagam 2/141 Kandhasami Nagar, Palavakkam, Madras-600041 Ph. No. 41 71 41
Artist	:	Sathya
Subject	:	A Critical study on V.O. Chithambaranar's Tamil Works.

---

* அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

பதிப்புரை

தமிழர் பெருமையைத் தரணிக்குணர்த்திய தகைசால் தலைவர்; கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் பெயரில் அமைந்துள்ள அறக்கட்டளையின் நான்காவது சொற்பொழிவு இந்நூல்.

வ. உ. சியின் வாழ்க்கை வரலாற்றில் இதுவரை வெளிவராத சில புதிய செய்திகளை அறிவிக்கின்றது இந்நூல். வ. உ. சியின் சுயசரிதை, மெய்யறிவு, மெய்யறம், பாடற்றிரட்டு, அரசியல் பெருஞ்சொல் முதலான படைப்புகளை விரிவாக விளக்கம் செய்து, ஏனைய பிறஇலக்கியப் பணிகளையும் எடுத்துக் காட்டியுள்ளது. வ. உ. சியின் தனித்துவத்தைப் புலப்படுத்துவதில் ஆசிரியர் ஆழ்ந்த கவனம் கொண்டுள்ளார். வ. உ. சிக்குப் புகழ் சேர்க்கும் வகையில் இந்நூலையாக்கித்தந்துள்ள நூலாசிரியர் முனைவர் அ சங்கர வள்ளிநாயகம் அவர்களுக்கு நிறுவனம் நன்றி தெரிவிக்கின்றது.

நிறுவனத்தில் இவ்வறக்கட்டளை நிறுவ உதவிய அன்பர்கள்; சொற்பொழிவு நிகழவும் நூலாக்கம் பெறவும் வழிவகுத்த நிறுவன இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு அவர்கள்; முதலிரு படிவங்களின் மெய்ப்புத் திருத்தியுதவிய திரு. சு. சண்முக வேலாயுதம்; மெய்ப்புத் திருத்தியும் சொல்லகராதி தயாரித்தும் உதவிய ஆய்வாளர் திரு. பு. பாலாஜி; சிறப்புற அச்சிட்டுத் தந்துள்ள கவின்கலை அச்சகத்தார் அனைவருக்கும் நிறுவனத்தின் சார்பில் நன்றி.

ச. சிவகாமி

சென்னை-113 — அறக்கட்டளைப் பொறுப்பாளர்
22-6-94 — உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

ஆசிரியர் அறிமுகம்

முனைவர் அ. சங்கரவள்ளிநாயகம்

நெல்லை மாவட்டம் சங்கரன்கோவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1988-இல் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். 'வ.உ.சியின் வாழ்க்கை வரலாறும் இலக்கியப்பணிகளும்' எனும் இவரது ஆய்வேடு நூலாக வெளிப் போந்துள்ளது. 'திருவிளையாடற் புராணப் பொழிவுக் கட்டுரை கள்' மற்றொரு நூல். இலக்கிய உரையாளராகவும் திகழும் இவர் சில கட்டுரைகளையும் படைத்துள்ளார்.

கோவில்பட்டி, திருவள்ளுவர் மன்றத் தலைவரான இவருக்கு, 'திருக்குறள் வேள்' (2-7-89), குறள்நெறிபரப்பும் குரிசில்' (11-11-90), 'குறள் பரப்பும் செம்மல்' (13-6-92) எனும் விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன. 'குறளால் உலகாள்வோம்' என்பதைக் குறிக்கோளாகக் கொண்டவர்.

முன்னுரை

வீறிட்ட தமிழ்க்கவிதை யாத்தவரும் விண்ணிலெல்லாம் விளைந்திட்ட அமுத ஊற்றை - விடுதலையை விதைத்திட்ட முதற் கவிஞரும் கூறிட்டு மக்களையே பிளந்திட்ட வெள்ளையர் தாம் விருப்புறு வாழ்வைத் தேடுகையில் மார் தட்டி எழுந்த செம்மலும் செக்கிழுத்து விடுதலைக்கு வித்திட்டவரும் பொல்லாங்கு போர்த் திட்ட பொய்த் திமை மாய்ந்திடவே குரல் எழுப்பியவரும் பேர் கேட்ட நிலையினிலே உளங் கலங்கிப் போயொடுங்கும் வெள்ளைக் கூட்டக் கடலிலே கப்பலோட்டியவருமான சிதம்பரத்தின் செந்தமிழ்ப் பணிகளைக் குறுகிய வடிவில் நூலாய் வெளிவரத் துணைநின்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு என் நன்றி என்றும் உரியதாகும்.

தென்பாங்குத் தமிழ் பேசும் கிளிப்பிள்ளையாம் வ.உ.சி., தமிழ்ப் பகையாம் பாம்பிற்குக் கிரிப் பிள்ளையாவார்; 'தன் வரலாறு' எழுதிய தமிழ்க் கவிதைப்பிள்ளை அவராவார். குறளின் அறத்துப்பாலிற்குத் தெளிவுரை வடித்திட்ட வண்டமிழ்ப் பிள்ளை யாவார். தமிழர்க்கு 'மனம் போல் வாழ்வு' தந்த தண்டமிழ்ப் பிள்ளையாவார்.

தமிழிளைஞரை 'மெய்யறிவைக்' காணச் செய்த செந்தமிழ்ப் பிள்ளையாவார். அமிழ்தமாம் 'மெய்யறமும்' ஆக்கிய அருந் தமிழ்ப்பிள்ளையாவார். அரிய தொல்காப்பியத்தைப் பதியம் போட்ட பழந்தமிழ்ப் பிள்ளையாவார். இங்ஙனம் சீர்மிகு சிதம்பரனாரின் சிந்தை மின்னாற்றல் போல் தமிழ் கொண்டு ஒளிர்கின்றமையை ஓரளவு தெளிவுபடுத்த முயன்றதன் விளைவே இச்சிறு பனுவலாகும்.

'வ.உ.சியின் வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும்' என்பதுவே எனது அறிஞர்பட்ட ஆய்வு நூலாகும். இந்நூலின் முதற்பதிப்பினைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் 1989-இல் பெருந்தன்மையுடன் வெளியிட்டு என்னைப் பெருமைப்படுத்தியது. அவ்வாய்வு நூலும் இக்கட்டுரை நூலும் வ.உ.சியின் தமிழ் உணர்வு பற்றிய அடிப்படைச் செய்திகளிலும் அழுத்தமான செய்திகளிலும் ஓரோ இடங்களில் ஒன்றுபட்டுச் செல்கின்றன எனினும் எனது அறிஞர் பட்ட ஆய்வு நூலில் இடம்பெறாத புதிய செய்திகள் மிகுதியும் இக்கட்டுரை நூலில் பூத்துள்ளன.

எனது அறிஞர்பட்ட ஆய்வு நூலில் சுருங்கிய நிலையில் இடம் பெற்றுள்ள வ.உ.சியின் வாழ்க்கை வரலாறு இக்கட்டுரை நூலில் இடம் பெற்றிலது. வ.உ.சியின் அரசியல் ஈடுபாட்டினை - தொண்டினை - எனது அறிஞர்பட்ட ஆய்வுநூல் விரித்து விளக்க வில்லை. இக்கட்டுரை நூல் அவரது அரசியல் உலகச்சாதனை களை விரிவாகக் காட்டியுள்ளது. படைப்பு, உரை, பதிப்பு, மொழிபெயர்ப்பு ஆகிய நான்கு துறைகளிலும் வ.உ.சி. ஆற்றியுள்ள இலக்கியப் பணிகளை எனது அறிஞர்பட்ட ஆய்வு நூல் அளவால் மிகுத்து உணர்த்தியுள்ளது. இக்கட்டுரை நூலோ அவரது படைப்புப் பணிக்கு மட்டுமே முதன்மைச் சிந்தனை வழங்கியுள்ளது. எஞ்சிய மூன்று துறைகளில் அவர் நிகழ்த்தியுள்ள இலக்கியப் பணிகள் மிகக் குறைந்த அளவில் இக்கட்டுரை நூலில் தொட்டுக் காட்டப்பட்டுள்ளன,

வ.உ.சியின் படைப்பிலக்கியப் பணியினைப் பயன்படக் காட்டத் துணைபுரிந்த ஆய்வு நெறிகள், அணுகுமுறைகள், ஆகியனவற்றில் இவ்விருநூல்களும் இயைந்து போயினும் மிகப் புதிய செய்திகளை இக்கட்டுரை நூல் வளமாகவே வழங்கியுள்ளது. உவமைகள், உருவகங்கள், சொல்லாய்வு ஆகியனவற்றில் புதுமையினை இக்கட்டுரை நூல் விருந்தாக்கியுள்ளது.

நூலாக மலர்ந்துள்ள வ.உ.சியின் அரசியல் மாநாட்டுத் தலைமையுரையாகிய 'எனது அரசியல் பெருஞ்சொல்' பற்றிய திறனாய்வு இக்கட்டுரை நூல் பெற்றுள்ள புதிய செய்தியாகும்.

'வ.உ.சியின் கவிதைப்படைப்பின் சிறப்புக் கூறுகள் என்னும் தலைப்பில் வெளிப்பட்டுக்கிடக்கும் செய்திகள் அனைத்தும் இக் கட்டுரை நூல்பற்றிய எனது புதிய சிந்தனையின் - பார்வையின் விளைவுகள் ஆகும். சுருங்கக் கூறின் எனது அறிஞர்பட்ட ஆய்வு நூலாகிய பழம்வித்திலிருந்து முளைத்தெழுந்த புத்திலக்கியச் செடியே இக்கட்டுரை நூல் எனக் கூறுதல் சாலப்பொருத்த மாகும்.

அறத்தையே கட்டளைக் கல்லாக்கிக் கருத்தாய் வாழ்ந்து அரும்புகழ் ஈட்டியுள்ள அறச் செல்வர்களின் பெயரில் அறக் கட்டளை அமைத்து அன்னவரின் வாழ்க்கை முறைகளை - நெறிகளை-பணிகளை உரை வடிவத்திலும் உயர் நூல் வடிவத் திலும் வெளிப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழ்ப்பணி மேன்மேலும் தழைக்கத் தமிழன்னை அருள்வாளாகுக!

அறிஞர் அ. சங்கரவள்ளிநாயகம்

உள்ளே

	பக்கம்
நாடறிந்த வாழ்க்கை ஏடு	1
நாடறியா வாழ்க்கை ஏடு	8
படைப்புப்பணி	15
கவிதைப் படைப்பின் சிறப்புக் கூறுகள்	67
இலக்கியப் பிறபணிகள்	85
வ.உ.சியும் தமிழும்	91
முதன்மை நூல்கள்	92
துணை நூற்பட்டியல்	93
சிறப்புச் சொல்லகராதி	94

நாடறிந்த வாழ்க்கை ஏடு

விடுதலை வேட்கைச் சுடர்

வ. உ. சி. இளமையிலேயே தமிழ் மொழியில் சிறந்த இலக்கிய இலக்கணங்களில் பயிற்சியும் முதிர்ச்சியும் பெற்றிருந்தாலும் அவர் வாழ்ந்த காலக்கட்டத்தில் அரசியல் நுழைவு மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றிருந்தமையால், அவரின் அரசியல் பணிகளை அறிந்த அளவிற்கு, அவர்தம் இலக்கியப் பணிகள் மக்கள் நினைவில் நில்லாமல் போனமை வியப்பிற்குரியதன்று. நாட்டாரி வத்தில் தலைநிமிர்ந்து நின்ற வ. உ. சி யின் அரசியல் துறைத் தொடர்பான ஈடுபாடு நான்காண்டுகளே உயிர்ப்புப் பெற் றிருந்தது. ஆனாலும் நான்கு ஆண்டுகளாகிய அக் குறுகிய காலக்கட்டத்தில் அவர் ஆற்றிய அரசியல் தொண்டு ஈடு இணை யில்லாதது. 1905 முதல் 1908 வரையிலான நான்கு ஆண்டுகளில் முளைவிடத் தொடங்கிய வ. உ. சி யின் அரசியல் ஈடுபாடு இவ் வாண்டுகளுக்குள்ளேயே முதிர்ந்து முடிந்து விட்டது எனக் கூறலாம்.

கப்பல் குழுவின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்

கப்பல் குழு அமைக்கப்பட வேண்டிய இன்றியமையாமை யினை வ. உ. சி. பின்வருமாறு விளக்குகிறார் :

''நாடு விடுதலை பெற வேண்டுமெனில் ஆங்கில நாட்டைச் சார்ந்த வணிகர்களை நம் நாட்டை விட்டு அகற்றுதல் வேண்டும். அகற்ற வேண்டுமெனில் கடல் மேலாண்மையை நாம் பெறுதல் வேண்டும். பண்டைக் காலத்தில் தமிழர் உரோமபுரியுடனும் சாவா, சுமத்திரா ஆகியவற்றுடனும் கடல் வணிக உறவு கொண் டிருந்தனர். அன்றைய தமிழரின் வணிகம் மிகப் பெரும் வருவாயை ஈட்டித் தந்தது'' ''பொருள் வளம் பெற்றிருந்ததால் பண்டைத்

தமிழர் எவர்க்கும் அடிமைப்படாதிருந்தனர். எனவே கப்பல் குழு அமைத்துக் கப்பல் போக்குவரத்தை மிகச் சிறப்பாக்க நான் திட்டமிட்டேன்''. வ. உ. சி. திட்டமிட்டபடி 1906இல் சுதேசிக் கப்பல் குழு அவர் துணையால் தொடங்கப்பட்டது.

தமிழர்க்கென்று கப்பலைக் பெறுவதற்குள் வ. உ. சி. பட்ட பாடு சொல்லும் தரமன்று. பம்பாயிலிருந்த சாலயனுடன் தொடர்பு கொண்டார். சாலயன் ஒப்புக் கொண்டவாறு கலம் தர மறுத்தான். வ. உ. சியின் அரிய முயற்சிக்குப் பின் சாலயன் கலம் தர இசைந்தான். ஆனால் நாவாய்ச் சங்கத்தினர் பின் வாங்கத் தொடங்கினர். அவர்களையும் ஒப்புமாறு செய்து, கப்பல் அனுப்புதல் தொடர்பான உறுதிமொழி எழுதப்பட்டது. எழுதிய பின்னரும் நாவாய்ச் சங்கத்தினர் தொலைவரி கொடுத்துத் தடுத்தனர். வ. உ. சி. விடாமல் முயன்றதால், சாலயன் கொழும்புக்குக் கலம் அனுப்பி வைத்தான். கலத்தில் வந்தவனோ மீண்டும் சொல்லை மாற்றினான். சிதம்பரம் வந்தாலன்றிக் கலம் தருவதில்லை என அவன் கூறச் சிதம்பரம் கொழும்பு சென்றுரைத்துக் கலம் கொணர்ந்தார். வருவாய் மிக வந்தது. ஆனால் சாலயன் கொழும்பு சென்ற கப்பலை வேறொரு துறைக்கு அனுப்பினான். ஆதலால், கொழும்பிலிருந்து வேறொரு கப்பல் தருவிக்கப்பட்டது. அதன் வாடகையோ வருவாயையும் விழுங்கியது. அதன் பின்னர்தான் பம்பாய் சென்று படாத பாடுபட்டுக் காலியா, இலாவோ என்ற இரு கப்பல்களையும் தமிழர்களின் சொந்தப் பயனிற்காக வ. உ. சி. விலை கொடுத்து வாங்கினார்.

வ. உ. சி. சிறைப்பட்ட பின் சுதேசிக் கப்பல் குழு ஆட்டம் கண்டது. அதற்கு நிதி திரட்ட வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. அப்போது தமது 'இந்தியா' இதழில் பாரதியார் எழுதியது வருமாறு :

> 'சிதம்பரம் பிள்ளை யார் பொருட்டு இரவு பகலாக உழைத்தாரோ அவர்கள் கூட பயத்தினாலே அல்லது சோம்பலினாலோ மூச்சுக் காட்டாமல் பின் வாங்கி நிற்கிறார்கள். சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்குச் சிதம்பரம் பிள்ளையே பிதாவென்று கூறுதல் தகும். ஆனால் அவர்கள் சிதம்பரம் பிள்ளைக்குத் தக்கவாறு நன்றிக்கடனைச் செலுத்தா விட்டால் இவர்களது முயற்சிகளின் மீது தர்ம தேவதைக்குச்

சினம் பிறக்கும். மேற்படி கம்பெனி பங்காளிகளில் ஒவ்வொரு வரும் தலைக்கு நாலணா வீதம் போட்டால் எவ்வளவு பெரிய நிதி சேர்க்கலாம்."

வ. உ. சி. அரும்பாடுபட்டு அமைத்த சுதேசிக் கப்பல் குழுப் பொறுப்பாளர்களுக்கு அதைத் தொடர்ந்து நடத்தத் துணிவில்லை. எதிர்பார்த்த நிதி உதவியும் பொதுமக்களிடமிருந்து கிடைக்க வில்லை. எனவே, குழு கலைக்கப்பட்டது. இது கூடப் பெரிதன்று. வ. உ. சி. பம்பாய்க்கே சென்று அங்கு எந்தக் கப்பலை விலைக்கு வாங்கி, அதிலே தூத்துக்குடி துறைமுகம் வரை பயணம் செய்து இலட்சக்கணக்கான மக்களால் அந்த வெற்றி வீரர் வரவேற்கப் பட்டாரோ அக்கப்பல் விலைக்கு விற்கப்பட்டது. யாருக்கோ அல்ல. சுதேசிக் கப்பல் குழுவை அழிக்கவும் சிதம்பரனாரைச் சிறையில் தள்ளவும் காரணமாக இருந்த ஆங்கிலக் குழுவிற்கே விற்கப்பட்டு விட்டது.

சிறையிலிருந்து விடுதலை பெற்ற வ. உ. சி. புதுவை சென்று பாரதியாரைச் சந்தித்தார். அப்போது கப்பல் குழு கவிழ்ந்தது பற்றித் தங்களுக்குள் நடந்த பேச்சு வார்த்தையை வ. உ. சி யே கூறுவதைக் கேட்போம் :

"நான் தோற்றுவித்த கப்பல் கம்பெனி நசித்த பின் எங்கள் கம்பெனியைச் சேர்ந்த ஒரு கப்பலை எங்கள் எதிரியான பி. ஐ. எஸ். என். கம்பெனியாரிடமே, அப்போதிருந்த சுதேசிக் கப்பல் கம்பெனி அதிகாரிகள் விற்று விட்டது, எனது உடைந்த மனத்தில் உதிரம் பெருகச் செய்தது. இது பற்றிப் பாரதியாரிடம் பிரஸ்தாபித்த போது, அவர் ஆவேசம் கொண்டு சொல்லிய சொற்கள் நான் புதுவையில் பிரியும் போது உள்ளத்தில் உருத்திக் கொண்டிருந்தன. அவை : 'சிதம்பரம், மானம் பெரிது! ஒரு சில ஓட்டைக் காசுகளுக்காக எதிரியிடமே அக்கப்பலை விற்று விட்டார்களே! பாவிகள்! அதைச் சுக்கல் சுக்கலாக நொறுக்கி வங்காளக் குடாக் கடலில் மிதக்க விட்டாலாவது என் மனம் ஆறுமே! இந்தச் சில காசுகள் போய் விட்டாலா தமிழ் நாடு அழிந்து விடும்? பேடிகள்!' என்று எவ்வளவோ கடுஞ் சொற்கள் கூறினார். என்ன செய்வது? தமிழ்நாடு உயரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்."

சுதேசிக் கப்பல் குழு கவிழ்ந்த உடன் தமிழ்நாடு அரசியலிலே வ. உ. சி யின் காலக்கட்டம் முடிந்தது எனலாம். இதற்கிடையில்

1907இல் சூரத் நகரில் நிகழ்ந்த காங்கிரசுக் கூட்டத்தில் அவர் ஆற்றிய தொண்டு கருதத்தக்கது. 1908இல் நெல்லையில் 'தேசாபிமான சங்கம்' அமைய வ. உ. சி. துணை நின்றார். அதே ஆண்டில் 'கோரல் ஆலை'த் தொழிலாளர்கள் நடத்திய பணி நிறுத்தத்திற்கு ஆதரவு தந்து, தொழிலாளர்களின் தேவைகள் நிறைவேற அவர் தொண்டாற்றினார்.

சிந்தனையாளருக்குச் சிறை வாழ்வு

1908 பிப்ரவரி 8 முதல் மார்ச் 9 வரையிலும், சுப்பிரமணிய சிவாவுடன் இணைந்து வ. உ. சி. ஆற்றிய தொடர்பொழிவுகள் தமிழக அரசியலில் புதுத் திருப்பத்தினையும் புது வேகத்தினையும் உருவாக்கின. 1908 மார்ச் 9இல் அரசாங்கத் தடையினை மீறிப் பிபின் சந்திரபாலின் விடுதலையைப் பாராட்டிப் பேசியமைக்காக அவ்வாண்டில் மார்ச் 12இல் அரசாங்கத்தினர் அவரைச் சிறைப் படுத்தினர்.

"அன்று இராமநாதபுரத்தில் கட்டபொம்மனுக்கு நேர்ந்ததே' 1908இல் நெல்லையில் கப்பலோட்டிய தமிழருக்கும் நிகழ்ந்தது. காலம் வேறுபட்டாலும் காட்சி ஒன்று தான். பாரதப் பெருநாடே உன்னை விடுவிக்க என்னென்ன துன்பங்களையெல்லாம் ஏற்க வேண்டியதிருந்தது." என்று சிலம்புச் செல்வர் வ. உ. சி. சிறைப் பட்டமை குறித்துக் குறிப்பிடுகிறார். வ. உ. சி. சிறைப்பட்ட செய்தி நெல்லை நகரில் பரவியதும் நகரம் முழுதும் கடைகள் அடைக்கப்பட்டன. பள்ளி, கல்லூரி மாணவர்கள் கண்டன ஊர்வலம் நடத்தினர். தொழிலாளர்கள் ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். பல கட்டிடங்களை மக்கள் தீக்கு இரையாக்கினர். நகரவைவிளக்குகள் எல்லாம் மண்ணில் சாய்க்கப் பட்டன. நகரவை மண்ணெண்ணெய்க் கிடங்கு தீயின் நாவிற்கு உணவாகியது. நகரவை அலுவலகத்தில் இருந்து மரச் சாமான் களையும் ஆவணங்களையும் வீதியில் கொணர்ந்து, அவற்றையும் தீயில் இட்டுப் பொசுக்கினர். நெல்லை நகரில் உள்ள வெள்ளையரி களை மக்கள் தேடிப் பிடித்து அவர்களை வீதியில் நிறுத்தி, 'வந்தே மாதரம்' என்று ஒலித்திடச் செய்தனர். வெறி பிடித்த கூட்டம் ஒன்று காவல் நிலையத்தினுள் புகுந்து கருவிகளைக் கைப்பற்றிய தோடு கட்டிடத்திற்கும் தீ மூட்டியது.

வ. உ. சிக்குத் தண்டனை வழங்கிய நடுவர் பின்சே தனது தீர்ப்பிலே, "சிதம்பரம் பிள்ளை மிகப் பெரிய இராஜ துரோகி,

பிள்ளையினுடைய எலும்புக்கூடும் இராஜ துரோகமானது" என்று சொல்லி நாவீறு படைத்த வ. உ. சி யின் நாட்டுப் பற்றினை உலகுக்கு உணர்த்தினார். சிதம்பரம் பிள்ளையின் கையில் அகப் பட்ட ஒரு கோலாகச் சிவாவைப் பின்சே குறிப்பிட்டார். சிதம்பரம் பிள்ளையின் பேச்சைக் கேட்டால் செத்த பிணமும் உயிர்த்தெழும் என்றும் கூறினார்.

வாதாடும் வல்லமை பெற்ற வழக்கறிஞருக்கு—சைவ சித்தாந்த வித்தகருக்கு—வேதாந்த சாத்திர விற்பன்னருக்கு—ஆங்கிலேயக் கப்பலுக்கு எதிர்க் கப்பலோட்டிய கடமை வீரர்க்கு இரண்டாயுள் சிறைத் தண்டனையைப் பின்சே விதித்தார். இந்தக் கொடுமை நிகழ்ந்து பல தலைமுறைகளுக்குப் பின்னே இன்று நினைத்தாலும் நெஞ்சு பதறுகிறது.

சீராளருக்குச் சிறைக் கொடுமைகள்

கோவைச் சிறையில் அடைபட்ட சிதம்பரனார் மேல் அதிகாரி களால் நாளும் பழி வாங்கப்பட்டார். அடிக்கடித் தனியறையே அவர் தங்கும் இடமாகத் தரப்பட்டது. கோவையிலிருந்து கண்ணனூர் மத்திய சிறைச்சாலைக்கு வ. உ. சி. அனுப்பப் பட்டார். அங்கும் அவர் பட்ட பாடு பகர ஒண்ணாதது. சிறையில் தரப்பட்ட கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியாதவராகித் தமக்கு விதித்த தண்டனைக்கு ஏற்பத் தம்மை அந்தமான் தீவுக்கே அனுப்பி விடுமாறு சிதம்பரனார் வைசிராயிடம் விண்ணப்பித்தார். தமிழ் நாட்டுச் சிறையில் இருக்கச் செய்து தம் கணவரைத் கடுமைக்கு உட்படுத்துவதை விட அவரை அந்தமான் தீவுக்கு அனுப்பி விடுவது நலம் என்று இங்கிலாந்து நாட்டின் மன்னருக்கு வ. உ. சி. யின் துணைவியார் வேண்டுகோள் விடுத்தார். சிறைச் சாலையில் சிதம்பரனார் பெற்று வந்த அல்லல்களைக் கேட்டுப் பாரதி,

"மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ"

என்று பாடினார்.

நாட்டு விடுதலைப் போரிலே ஈடுபட்டு நாமக்கல் கவிஞரும் சிறை சென்றவர் ஆவார். விடுதலைப் போரில் சிறை புகுந்த நூற்றுக்கணக்கான தலைவர்களையும், ஆயிரக்கணக்கான தொண்டர்களையும் நாமக்கல்லார் அறிந்தவர் ஆவார். இருப்பினும்,

"எல்லோரும் தேசபக்தர் இந்த நாளில்
எத்தனையோ சிறைவாசம் இனிதாய்க் காண்பார்
சொல்லாலும் எழுத்தாலும் விளக்க வொண்ணாத்
துன்பமெல்லாம் சிறைவாசம் அந்த நாளில்
வல்லாளர் சிதம்பரனார் சிறையில் பட்ட
வருத்த மெலாம் விரித்துரைத்தால் வாய்விட் டேங்கிக்
கல்லான மனத்தவரும் கண்ணீர் கொட்டிக்
கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும்"

என்று சிறையில் பட்ட துன்பத்தை நாமக்கல்லார் கவிதை வரிகளில் சித்தரித்துக் காட்டியுள்ளார்.

சிறை மீண்டவரைச் சிந்தையிற் போற்றாமை

சிறைக்குள் செல்லத் துணிந்தவர்களெல்லாம் உடல் மெலிவு, உள்ளச் சிதைவு, உயிர் நலிவு யாவற்றுக்கும் துணிந்தே சென்றனர். தொழு நோயொடு வெளிவந்தார் சுப்பிரமணிய சிவா. தொழுது போற்றியவர்களெல்லாம் தொலைவில் மறைந்து விலகும் படியான "மரியாதையுடன்" வெளிவந்து உலவினார் சிதம்பரனார். சிறை சென்று மீள்பவரெல்லாம் ஆரவாரமான வரவேற்பிற்கு உரியவர் ஆகின்றனர். கப்பலோட்டிய செல்வராய், சமுதாயம் வாழ்த்தி வணங்கும் சதுரப்பாடு உடையவராய், எவரும் மதிக்கும் இணையற்ற செல்வாக்குடையவராய் வாழ்ந்த சிதம்பரனார் சிறையிலிருந்து மீண்ட பின்னர் அவரை நம் பாரத சமுதாயமும் கன்னித் தமிழினமும் புறக்கணித்து ஒதுக்கின. ஏறத்தாழ ஐந்து ஆண்டுக் காலம் சிறை வாழ்வு தந்த துன்பத் தழும்புகளைச் சுமந்து வெளிவந்த வ. உ. சி யை வரவேற்க யாருமிலர். மீண்டும் விடுதலைப் போரைத் தொடர யாரும் அவருக்குத் துணை நின்றிலர். தம் இதயத்தில் இடம் பெற்றிருந்த, தேய்ந்த—நைந்த விடுதலைக் கொடியினை நிலை நாட்ட எவரும் இடம் தந்திலர். வ. உ. சி. யின் அரசியல் துடிப்பு மிகுந்திருந்த அளவிற்கு அத்துடிப்பு நிலை பெற்ற ஆண்டுகள் மிகுந்ததாயில்லை. அக் குறுகிய காலக் கட்டத்திலும் அவர் சந்தித்த சோதனைகளும் அவற்றையும் மீறி நிகழ்ந்த அவரின் சாதனைகளும் வரலாற்றில் பொறிக்கத் தகுந்த தரமுடையனவாகும். அவர் வாழ்ந்த காலத்தில் உரிய சிறப்பினை அவர் உற்றதாகத் தெரியவில்லை. அவரின் அருஞ் செயல்கள் மக்களின் பாராட்டைப் பெறவில்லை. வளமெலாம் இழந்து வறுமை உற்ற போதிலும் அவரின் அவல வாழ்விற்காக எவரும் தண்ணீர் வடித்திலர், அவர் மறைந்த பின்பும் நெடு நாள் வரையி

மக்கள் நினைவில் அவர் சிறந்து விளங்கவில்லை என அறிகின்ற போது ஆறாத் துயர் நம்மை ஆட்கொள்கின்றது. பிள்ளைத் தமிழ் கேட்கையிலே பெற்றோர்க்குப் பேரின்பம் பெருகி வரும். இப் பிள்ளையின் தமிழ் கேட்கையிலே நாட்டுப் பற்று நம்மை நாடிவரும் என்பதனை நாட்டவர் எண்ணிப் பார்த்திலர். எனவே, வ. உ. சி. அரசியல் துறவினைப் பூணத் தொடங்கி, இலக்கிய வாயிலினுள் நுழையத் தொடங்கினார்.

1920இல் கல்கத்தாவில் நிகழ்ந்த காங்கிரசுப் பேரவைக் கூட்டத்தில் காந்தியடிகள் கொணர்ந்த ஒத்துழையாமைத் தீர்மானம் வெற்றி பெற்றது. அப்பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்ட வ. உ. சி. அத் தீர்மானத்தை ஏற்க உடன்படவில்லை. அதனால் கல்கத்தாவிலிருந்து திரும்பும் வழியில் தாம் காங்கிரசில் இருந்து விலகிக் கொள்வதாக அறிக்கை வெளியிட்டார்; அவர் ஒத்துழையாமை இயக்கத்தை ஏற்க மறுத்துக் காங்கிரசில் இருந்து வெளியேறினார் என்றாலும் நாட்டுப்பற்றுக் காரணமாக வழக்கறிஞர் தொழிலில் ஈடுபடாமல் இலக்கியப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

சங்க இலக்கியங்கள், ஐம்பெருங்காப்பியங்கள், புராண இதிகாசங்கள், நீதி நூல்கள், வேதாந்த நூல்கள் ஆகியவற்றில் ஆழ்ந்த அறிவினராய் விளங்கிய காலக்கட்டத்தில் வ. உ. சி. அரசியல் காரணத்திற்காகச் சிறைப்பட்டார். விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறை சென்ற அருந்தலைவர்களிலே வேறெவரும் இத் தகுதிகளைப் பெற்றிருக்கவில்லை. விடுதலைப் போரில் கலந்து சிறை செல்லத் தமிழ்ப் புலவர்களிலே மிகுதியானவர்கள் முன் வரவில்லை ஒரு சிலரே, அப்பேற்றினைத் தமிழ் மொழிக்குச் தேடித் தந்தனர். அவர்களிலே முதன்மையானவர் வ. உ. சி. ஆவார்.

நாடறியா வாழ்க்கை ஏடு

தமிழ் உணர்ச்சியால் வ. உ. சி. உந்தப்பட்டமையை உணர் வதற்கு முன்னர் இன்றைய நாளில் தமிழரிடம் காணப்படும் தமிழ் உணர்ச்சியின் தன்மை பற்றிச் சிந்தித்தல் நலம் பயப்பதாகும். ''தமிழ் வாழ்க! வளர்க! வெல்க!'' என்று மேடைதோறும் எழுந்து வரும் முழக்கம் முனைப்பான தமிழ் உணர்ச்சியாகாது. முழக்கம் உள்ளத்திலிருந்து எழாது வெறும் உதட்டசைவிலே நின்று விடு கின்றது. எனவே, பாரதியின் பார்வையில் வெறும் முழக்கமும் வெற்றுக் கூச்சலும் இடுகின்றவர்கள் வாய்ச் சொல்லில் வீரர்கள் ஆவர்; கூட்டத்தில் பிதற்றுதல் அன்றிக் கொள்கை நாட்டம் இல்லாதவர் ஆவர். தமிழர் இன்றும் ஆங்கிலத்தில் கையெழுத்திடு கின்றனர். தமிழில் கையொப்பம் இடத் தெரியாமல் அவர்கள் ஆங்கிலத்தில் இடவில்லை. காலம் காலமாகப் பழகி வந்துள்ள பழக்கத்தாலும் தாய்மொழிக்கு முதன்மை தரும் வழக்கமின்மை யாலும் தமிழில் கையொப்பம் இடாமல் ஆங்கிலத்தில் அவர்கள் இட்டு வருகின்றனர். தமிழ் ஆசிரியர்கள், தமிழ்ப் புலவர்கள், தமிழ் எழுத்தாளர்கள், தமிழ்க் கவிஞர்கள், இதழாசிரியர்கள் இவர்களில் சிலர் தமிழில் அஞ்சல்களை எழுதி, ஆங்கிலத்தில் கையெழுத்திடும் பழக்கமுள்ளவர்களாய் உள்ளனர்.

உலகத்தில் உள்ள சீர் திருந்திய மொழிகளைப் பேசும் மக்கள் தமிழரைப் போலத் தம் மொழிகளில் பிற மொழிகளில் எழுத்துக் களைக் கலந்து எழுதுவதில்லை. பிரெஞ்சு நாடு தன் மொழியைப் பாதுகாப்பதில் மிக விழிப்பாய் உள்ளது. பிரெஞ்சு மொழியுடன், ஆங்கிலத்தை அல்லது வேறு பிற மொழிகளைக் கலந்து எழுதக் கூடாது என்று விதிக்கும் பிரெஞ்சு நாட்டுச் சட்டமே மொழியைப் பாதுகாக்கிறது. பிரெஞ்சு மொழியின் தூய்மையைக் காக்க 1975ஆம் ஆண்டில் இச் சட்டத்தைப் பிரெஞ்சு அரசாங்கம்

கொணர்ந்தது. சில வழக்கறிஞர்களை உள்ளடக்கி அமைக்கப் பட்டுள்ள 'மொழிப் பாதுகாப்புக்குழு' என்ற ஒரு குழு, இச் சட்டத்தின் நடைமுறையைக் கண்காணிக்கிறது. சட்டத்தை மீறி யாராவது ஆங்கிலத்தை அல்லது பிற மொழிச் சொற்களைக் கலந்து எழுதினால் அவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை மேற் கொள்ளட்டும் என்று இக்குழு பொறுத்திராமல் இக்குழுவே அவர்கள் மீது வழக்குத் தொடர்கிறது. கடந்த ஐந்து ஆண்டு களில் இக்குழு நாற்பத்து நால்வர் மீது வழக்குத் தொடுத்துள்ளது. அவர்களுக்கு அற மன்றத்தில் ஒறுப்புத் தண்டம் விதிக்கப் பட்டுள்ளது. ஏன் இப்படி ஆங்கிலத்தை அவர்கள் வெறுக் கிறார்கள்? மொழியிருந்தால் தான் மக்களும் நாடும் என்ற உணர்வினை உடையவர்கள் பிரெஞ்சு நாட்டினர் ஆவர். பிரெஞ்சு மொழி அழிந்து போனால் பிரெஞ்சு மக்களும் இல்லை; பிரெஞ்சு மொழியைக் கலப்படம் இல்லாமல் தூய்மையாகக் காப்பாற்ற அவர்கள் விரும்புகிறார்கள். தமிழையும் பாதுகாக்கத் தமிழ் நாட்டிற்குப் பிரெஞ்சு நாடு வழி காட்டுகிறதல்லவா?

தமிழர்கள் இன்றளவும் கிரந்த எழுத்துக்களை மட்டுமின்றி ஆங்கில எழுத்துக்களையும் கலந்து எழுதும் பழக்கத்தில் பற்றுடைய வராய் உள்ளனர். அங்கொன்றும், இங்கொன்றுமாய் எழுதப்படும் தமிழும் பிழையின்றி எழுதப்படவில்லை. 'பேசுவது போல் எழுதுகிறோம்' என்று கூறித் தமது அறியாமையைத் திரையிடவும் முயலுகிறார்கள். தமிழ் எழுத்தாளர்கள் சிலருடைய எழுத்திலும் தமிழ் இதழ்கள் சிலவற்றிலும் இக்காலப்பாடல்கள் பலவற்றிலும் காணப்படும் எழுத்துச் சொற்பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் பிறமொழியினரின் பாட்டுக்களிலும் எழுத்துக் களிலும் இதழ்களிலும் காண்பதரிது. இல்லங்களிலும் பொதுவிடங்களிலும் தனித்தமிழ்ப் பெயர்களைக். காண்டலே முயற் கொம்பாயுள்ளது. 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி யிலும் தமிழ்நாட்டில் தோன்றிய நளமன்னன், தருமன், தமிழ்ப் பெண்மணிகளில் சீதை, பாஞ்சாலி. அனுசூயை சிறந்தவர் கள் என்று தம் மேடைப் பேச்சில் குறிப்பிடும் வரலாறு தெரியாத் தமிழறிஞர்களும் உள்ளனர். இத்தகைய அறியாமை தமிழறிஞர் களிடையே நிலவினால் பொது மக்களின் நிலைமை மிகுதியும் பரிதாபத்திற்குரியது. தமிழர் தமிழுக்குத் தம் வாழ்வின் துறை அனைத்திலும் முதன்மை தருதல் வேண்டும். இது தாய்க்குச் சேய் செய்யும் கடமையாகும். வ. உ. சி. என்னும் தமிழ்ச் சேய் தமிழ்த்

தாய்க்கு ஆற்றிய கடமைகளை முறைமையாகச் சிந்திப்பதற்கு முன்னர் தமிழ்நாட்டைச் சார்ந்த வழக்குரைஞர்களில் மிகப் பலர், வண்டமிழ்ப் பற்றினராக வளமார் தமிழிற்குப் பணியாற்றியவர் களாக விளங்கி நின்றமையை எண்ணுவது நெஞ்சிற்கு இனிமையும் இறும்பூதும் ஊட்டுகின்றது.

சங்கம் வளர்த்த தமிழில் சட்டத்துறை அறிஞர்கள்

சட்டக்கலை பயின்று அறமன்றங்களில் வழக்காட வேண்டிய வழக்கறிஞர்கள் தங்கள்துறையில் ஒரு கால் வழுக்கி விழுந்தால் வளமான தமிழ்த்துறையில்தான் விழுந்துள்ளார்கள். 20ஆம் நூற்றாண்டில் தாகூர்ச் சட்ட விரிவுரையாளராய் அமைந்து, தமிழ்த் துறையில் பேரையும் புகழையும் நிலை நாட்டியுள்ள கா. சு. அவர்கள் அந்நூற்றாண்டின் முதல் வழிகாட்டியாய் விளங்குகிறார்கள். குற்றாலச் சித்தர் என்றும், 20ஆம் நூற்றாண்டின் கம்பர் என்றும் பாராட்டப்படுகின்ற டி. கே. சி. உயர் அறமன்ற வழக்கறிஞராக ஒரு சில ஆண்டுகள் பணி யாற்றியவர் ஆவார். மனித வம்புகளுக்குத் தீர்ப்பு உரைத்து வந்த இவர் கம்பரின் கவியமுதப் பெருங்கடலில் மூழ்கித் தமிழ் முத்தினைக் கொணர்ந்தவர் ஆவார். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறையில் பணியாற்றிய வையாபுரியாரும் ஒரு வழக்கறிஞரே. அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியராகப் பீடு நடையிட்ட பெருமைக்குரிய நாவலர் சோம சுந்தர பாரதியார் வழக்கறிஞராவார். கோவைச் சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணியனார் என்னும் சீர் பெற்ற வழக்கறிஞர் பெரிய புராணத்திற்கு அரியதொரு விரிவுரை எழுதிச் சைவ உலகின் பாராட்டைப் பெற்றார். சாத்தூரில் தமிழ்ச்சங்கம் ஒன்று அமைத்து அருமையான தமிழ்ப் பணியாற்றிய துரா. க. கந்தசாமி யாரும் ஒரு வழக்கறிஞர் ஆவார். சொல்லின் செல்வர் செந்தமிழ் நாவலர் இரா. பி. சேதுவும் ஒரு வழக்கறிஞரே. மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராய் வீற்றிருந்த தெ. பொ. மீனாட்சி சுந்தரமும், தமிழறிஞர் கோ. சுப்பிரமணியனாரும் முன்னாள் வழக்கறிஞர்களேயாவர். இவர்களுக்கெல்லாம் மிக முன்னோடியாய் விளங்கியவரே வ. உ. சி. என்னும் வழக்கறிஞர் ஆவார்.

நாணயத்தின் மற்றொரு பக்கம்

சிறந்த இந்திய விடுதலைப் போராட்டவீரர்; அப் போராட்டக் காலத்தில் சிறை சென்று செக்கிழுத்த செம்மல்; ஆங்கிலேயருக்கு

எதிராகக் கப்பலோட்டிய தீரத் தமிழன் எனத்தான் வ. உ. சி யை நாட்டு மக்கள் அறிவர். ஆயினும், அவர் தம் அரசியல் வாழ்க்கையில் இடையே சிறந்த இலக்கியப் பணியும் செய்த அறிஞராகவும் இலங்கியுள்ளார் என்பது பலரும் அறியாதது. வ. உ. சி யின் தமிழ்ப்பணி நால்வகைத் துறைகளின் வளர்ச்சிக்கு நல்வித்திட்டது. படைப்பு, உரை, பதிப்பு, மொழிபெயர்ப்பு ஆகிய நால்வகைத் துறைகள் அவரின் பணியினால் நனி வளம் பெற்றன. இளமையில் அரும்பத் தொடங்கிய அவரின் தமிழ்ப் பணி சிறை வாழ்வில் போதாகிச் சிறை வாழ்விற்குப் பின் மலர்ந்து மணம் பரப்பியது.

படைப்புப் பணி

வ. உ. சி. யின் படைப்பாக அமையும் நூல்கள் நான்காகும். அவை : (1) சுயசரிதை (2) மெய்யறிவு (3) மெய்யறம் (4) பாடற்றிரட்டு என்பனவாம். இந்நூல்கள் நான்கும் செய்யுள் வடிவில் அமைந்துள்ளன.

உரைவளப் பணி

இன்னிலை. திருக்குறளின் அறத்துப்பால், சிவஞானபோதம் ஆகிய மூன்றிற்கும் வ. உ. சி வண்டமிழ் உரை வடித்துள்ளார்.

பதிப்புப் பணி

திருக்குறள் அறத்துப்பாலிற்கு மணக் குடவர் உரையினையும் தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரம், பொருளதிகாரம் ஆகியவற்றிற்கு இளம்பூரணர் உரையினையும் வ. உ. சி. பதிப்பித்துள்ளார்.

மொழிபெயர்ப்புப் பணி

வ. உ. சி. மொழி பெயர்த்துள்ள நூல்கள் நான்காகும். அவை : (1) மனம் போல வாழ்வு (2) அகமே புறம் (3) வலிமைக்கு மார்க்கம் (4) சாந்திக்கு மார்க்கம் என்பனவாகும்.

இங்ஙனமாக நால்வேறு துறைகளில் வ. உ. சி. ஆற்றிய நற்றமிழ்ப்பணி கற்றவராலும் மற்றவராலும் பாராட்டத் தக்க பாங்கினை உடையது.

வாழ் நாளிலெல்லாம் வண்டமிழ் உணர்வே

விளையும் பயிர் முளையிலே

இளமையில் வ. உ. சிக்குக் கல்விப் பணி பயிற்சியினை வழங்கிய ஆசிரியர்கள் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் தேர்ச்சி பெற்றவர்கள் ஆவர். எனவே, இயல்பாக இலக்கிய நூல்களைப் பயிலும் வாய்ப்பினை அவர் பெற்றார். ஆத்திசூடி, உலக நீதி, முதலிய ஒழுக்க நூல்களைப் பல முறை கேட்டுப் பயின்றதுடன் கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, நளவெண்பா, மூதுரை ஆகிய நூல்களை அந் நூலாசிரியர் எண்ணிய பொருளுடன் பயின்றார். பாட்டனுடன் சென்று, சுப்பிரமணியரால் படிக்கப் பட்ட பாரத வாசகத்தினைத் தொடர்ந்து செவி மடுத்தார். பாட்டி மொழிந்த திருவிளையாடல் முதலிய நீதிக் கதைகளையும், பாட்டன் பகர்ந்த இராகவன் கதையினையும் தம் மனத்தில் இருத்திக் கொண்டார். இங்ஙனம் இளமையிலேயே அவர் பெற்ற இலக்கிய அறிவு, பிற்காலத்தில் அவரை இணையற்ற இலக்கிய வல்லுநராகத் துணை புரிந்தது. அற நூல்களில் அவருக்கிருந்த இளமைக் காலப் பிடிப்பே பின்பு அறம் பற்றியும் ஒழுக்கம் பற்றியும் நூல்கள் எழுத அடிப்படையாய் அமைந்தது.

ஓய்வுப்பொழுதிலும் ஓயா நூற்சிந்தனை

ஓய்வுப்பொழுதிலும் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை வ. உ. சி. தாமாகவே பயின்றார். தத்துவநூல், இலக்கிய நூல்களைக் கருத்தூன்றிச் சிந்தித்தார். அவற்றிற்குப் புலவரும் உரையாத அரும் பொருள்களைத் தாமே கண்டு உரைத்துள்ளார். எதற்கும் புதுப்பொருள் காணும் இவ்வுணர்வே அவர் எழுதிய நூல்களில் புத்தறம், புதுச் செய்திகள் ஆகியவற்றைச் சுட்டத் தூண்டியது, குறளுக்குப் பரிமேலழகர் உரைத்துள்ள பொருள்களுடன் வேறுபட்டுப் புதுப்பொருள் காணும் கருத்தை அவருக்கு ஈந்துள்ளது. தத்துவ நூல்களில் தவழ்ந்த அவர் ஆர்வமே தத்துவ அறிஞரான சேம்சு ஆலன் நூல்களை மொழிபெயர்ப்பதற்கும் சித்தாந்த நூலான சிவஞானபோதத்திற்குச் சிறப்பான உரையைத் தருவதற்கும் அவருக்குத் துணை நின்றது.

வ. உ. சியின் தமிழ் நூற் பயிற்சியே, 1905இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பொறுப்பாளர்களில் ஒருவராக அவரை நிலை நிறுத்தத் தகுதி தந்தது. இத் தமிழ்ச் சங்க உறவே பின்னாளில்

அவரைப் பெருங் கவிஞராக மலரச் செய்தது. திருக்குறளைப் பன்முறை தாம் பயின்றும் பிறர்க்குப் பயிற்றுவித்தும் அவர் தமிழ்ப் பணியாற்றினார். அங்ஙனம் பயிலும் பொழுதும் பயிற்றுவிக்கும் பொழுதும், குறளுக்கு எழுந்துள்ள பல உரைகளைக் கண்டு ஆய்ந்ததில் மணக்குடவர் உரையே தமிழ் மரபுரையாக அவருக்கு மணந்ததால் மணக்குடவர் உரையைப் பதிப்பிக்கும் பணியில் அவர் ஈடுபட்டார். சோழவந்தான், அரசன் சண்முகனாரிடம். தொல்காப்பியத்தைப் படிறின்றிப் பயின்ற பொழுது தொல் காப்பிய உரைகளுள் இளம்பூரணர் உரையே தமிழ் தழீஇய உரையென இவர் கண்டதால் அவ்வுரையினைப் பதிப்பிக்க வ. உ. சி. பெரு விருப்பம் கொண்டார்.

சிறைப்படுவதற்கு முன்பே வ. உ. சி. கவி பாடும் திறமை பெற்றிருந்ததால் தம் முதல் துணைவி வள்ளியம்மை இறந்தமை குறித்துப் பாடிய பாடல்களும் நல்லொழுக்கம், அறங்கள் ஆகியவை பற்றிப் பாடிய பாடல்களும் மெய்ப் பொருளாம் இறைவன் தொடர்பாகப் பாடிய பாடல்களும் உறவினர், நண்பர் களுக்கு அஞ்சல் வடிவில் ஆக்கிய பாடல்களும் அவர் நூலாகிய பாடற்றிரட்டில் இடம் பெற்றுள்ளன.

சிறையிலும் செந்தமிழ்ப் பணி

சீரிய நூல்கள் எழுதுவதற்கும் சிறந்த கவிதைகளை யாப்பதற்கும் சிறை நாள்களை வ. உ. சி. பயன்படுத்தினார். பாலகங்காதர திலகர் மாண்டலே சிறையில் இருந்த பொழுது தான் 'கீதை இரகசியம்' என்னும் பெருநூலை அவர் எழுதினார். நேருவும் தாம் சிறையில் இருந்த பொழுது தமது வரலாற்றை எழுதினார். வ. உ. சி யும் தாம் எழுதிய 'தன் வரலாற்றின்' முதற் பாகத்தினைச் சிறையிலிருந்தே எழுதினார். சிறைக்கொடுமை யினைக் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் உணர்த்த அவர் தரமான கவிதைகளையே பயன்படுத்தியுள்ளார். சேம்சு ஆலன் நூல் களையும் சிறையில் தான் அவர் மொழிபெயர்க்கத் தொடங்கினார். அவற்றுள் 'மனம் போல வாழ்வு' என்னும் நூலினைச் சிறையில் முற்றுப் பெறச் செய்தார். கண்ணனூர்ச் சிறையில் கைதிகள் மறம் விடுத்து, அறம் உணர 'மெய்யறிவு' 'மெய்யறம்' ஆகிய இரு நூல்களையும் இயற்றினார்.

விடுதலைக்குப் பின்னும் விடுதல் அறியாத் தமிழ்ப்பணி

சிறையிலிருந்து விடுதலை பெற்ற வ. உ. சி யின் அரசியல் தொண்டினை ஏறெடுத்தும் பார்க்கவில்லை; ஏற்றிப் போற்றவும்

இல்லை. எனவே அவர், அரசியல் துறவினை மெதுவாக மேற் கொள்ளத் தொடங்கினார்; அரசியல் துறவுணர்வு இவரது இலக்கிய ஈடுபாட்டினையும் தமிழ்த் தொண்டினையும் தழைக்கச் செய்தது. அவர் சென்னையில் வாழ்ந்த பொழுது, திரு. வி. க., செல்வ கேசவராயர் ஆகிய தமிழறிஞர்களின் கேண்மை அவர்க்குக் கிட்டியதால் தமிழில் சிறந்த நூல்களை அவர் வெளியிட லானார். தொல்காப்பியம், திருக்குறள் ஆகியவற்றில் பதிப்புப் பணியைத் தொடர்ந்தார்.

அவர் சென்னையில் உறைந்த பொழுது 'அகமே புறம்' 'வலிமைக்கு மார்க்கம்' ஆகிய அவரது மொழிபெயர்ப்பு நூல் களும் 'மெய்யறிவு' என்னும் அறநூலும் வெளியாயின. சிறை செல்லும் முன்னும் சிறையில் இருந்த பொழுதும் அவர் பாடிய தனிப்பாடல்கள் 'பாடற்றிரட்டு' என்னும் நூலாக 1915 ஆம் ஆண்டில் உருப்பெற்றன. வ.உ.சி யின் 'மெய்யறமும்' அவர் உரையெழுதிய 'இன்னிலையும்' அவர் பதிப்பித்த 'திருக்குறள் மணக்குடவர் உரையும்' 1917 ஆம் ஆண்டில் தமிழ் உலகத்திற்கு வரவாயின. தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கும் பொருளதி காரத்தின் 'அகத்திணை', புறத்திணை' ஆகிய இரு இயல்களுக்கும் உரிய இளம்பூரணர் உரையினைப் பதிப்பித்து 1918இல் தமிழ் உலகில் பரவச் செய்தார். 1934ஆம் ஆண்டில் திருச்செந்தூரில் அரங்கேறிய 'திருக்குறள் அறத்துப்பால் விருத்தி உரையை' 1935 இல் நூலாக வெளிவரச் செய்தார். சிவஞானபோதம் என்னும் சைவ சித்தாந்த நூலிற்கு இவர் ஆக்கிய உரையும் அவ்வாண்டி லேயே அழகிய நூல் உருவத்தைத் தாங்கியது.

வ.உ.சி யிடம் வெளிப்பட்ட அரசியல் துடிப்பு சூழலால் உயிர்ப் படங்கத் தொடங்கவே, அவரது உள்ளத்தில் கரந்திருந்த இலக்கிய ஆர்வம் கருவாகி உருவாகியது. ஏறத்தாழ 28 ஆண்டுகள் (1908-1936) வெளிப்படையாகவும் அதற்கு முன்னர் அடக்கமாகவும் வ.உ.சி. ஆற்றியுள்ள தமிழ்ப் பணியினைக் கருதும் பொழுது வ,உ.சி. தமிழையே நினைத்துள்ளார்; தமிழ் வாழ்வையே புனைந் துள்ளார்; 'வ.உ.சியே தமிழ்; தமிழே வ.உ.சி.' என்று சொல்லும் அளவில் தமிழில் தம்மைக் கலக்கச் செய்து கரைத்துக் கொண்டார். இனி, வ.உ.சி. யின் படைப்புப் பணி பற்றி விரிவாக விளக்கம் செய்குவாம்.

படைப்புப் பணி

சுயசரிதை

சுயசரிதை 1946 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. பரலி.சு. நெல்லையப்பரின் வேண்டுகோளையேற்ற வ.உ.சி. தம் வரலாற்றின் முதற் பகுதியினை எழுதினார். சிறைக் கோட்டத்தை விட்டு வெளிப்போந்தவுடன் தெ.ச. சொக்கலிங்கம், வ.உ.சி யை வேண்ட இரண்டாம் பகுதியை எழுதி முதற் பகுதியுடன் இணைத்தார். இந்நூல் ஆசிரியப்பாவில் அமைந்துள்ள தன் வரலாற்று இலக்கியமாகும். இந்நூலில் காணப்பெறும் தலைப்பு களை அவர் மைந்தர் வ.உ.சி. சுப்பிரமணியம் முதற்பதிப்பில் எழுதிச் சேர்த்தார்.

நூல் உணர்த்தும் செய்திகள்

வ.உ.சி. தம் வரலாற்றின் முதற்பகுதியில் தம் இளமைப்பருவம், தமக்காகத் தந்தை ஒரு பள்ளியையே கட்டிய சிறப்பு, தேர்வில் தாம் தோற்றமை, தேர்வில் மீண்டும் தாம் வென்றமை, எழுத்தராகத் தாம் பணியாற்றியமை, தமக்கையின் கணவரால் கோள் செல்லப்பட்டுத் தந்தை தம்மைத் தண்டித்தமை, இடை யிடையே தாம் துறவியானமை, வள்ளியம்மையுடன் தமது திருமணம், விவேகபானு என்னும் தமது இதழாசிரியப் பங்கு, இலாவோ, காலியோ ஆகிய கப்பல்களைத் தாம் வாங்கியமை, நெல்லைக் கலகம், கலெக்டர் ஆசுவின் கொடுமைகள் ஆகிய இன்றியமையாத நிகழ்ச்சிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் பகுதியில் தாம் பட்டுணர்ந்த சிறை வாழ்வு, செக்கிழுத்த வேதனை, கல்லுடைத்த கடுமை, கண்ணனூர்ச் சிறை மாற்றம், ஆசு சுடப்பட்டமை, தமது விடுதலை ஆகிய குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன.

அமைப்பு

வ.உ.சி யின் 'தன் வரலாறு' தன் முகத்தைத் தானே கண்ணாடியில் பார்ப்பது போன்று அகநோக்கில் அமைந்துள்ளது.

அவையடக்கம்

தன் வரலாற்று நூலில் அவையடக்கம் இன்றியமையாது இடம் பெறும்.

"நினைவொடு நிற்கும் நெல்லை யப்பநீ
கனிவொடு கேட்டவென் கதைக்குறிப் பிஃதே"

என்று பரலி சு. நெல்லையப்பன் வேண்டியதால் இந்நூலை எழுதியதாக வ.உ.சி. அவையடக்கத்துடன் குறிப்பிடுகின்றார். இறந்த அவரின் பெரிய தந்தையாரே மீண்டும் பிறந்து வந்ததாகக் கருதும் படியும், அவரது பெயரையே சிதம்பரம் என்று இடும் படியும் பாட்டன், பாட்டியிடம் தம் தந்தை கூறியதாகக் குறிப்பிடும் இடத்தில் அவர்-தம் அடக்கம் வெளியாகின்றது.

"எளியேன் பிறந்தபின் இயன்றன பற்பல
களியேன் கூறி; காரணம் தற்புகழ்."

எனத் தாம் பிறந்ததை அறிமுகப்படுத்தும் பொழுது மிகுந்த அவையடக்கத்துடன் வ.உ சி. உணர்த்துவதை நாம் உணரலாம்.

குறைகளை மறைக்காமை

தம் வரலாறு எழுதுவோர் தமக்கு விருப்பம் இல்லாத செய்திகளையும் இழுக்குத் தரும் செய்திகளையும் மறைப்பர். இதற்கு விதிவிலக்காக அண்ணல் காந்தியடிகள் தமது 'சத்திய சோதனையில்' தம்முடைய அனைத்துக் குற்றங்களையும்' தவறு களையும் சுட்டிக்காட்டுகின்றார்.

வ. உ. சியும் தம் வரலாற்றில்,

"என்னுடைக் குறையால் இடறினேன் பரீட்சையில்"

என்றும்,

"அடிபிடி சண்டை அளவில் புரிந்தேன்"

என்றும்,

"மறுவிலா என்னுயர் மனத்தில் என்றும்
சிறுமையும் வெகுளியும் செறிவுறக் கொண்டேன்"

என்றும் தம் குறைபாடுகளை வெளிப்படையாகவே கூறுகிறார்.

தன் வரலாறு-வாழ்க்கை வரலாறு-செய்திகள் முரண்பாடு

தம் வரலாறு எழுதுபவர் செய்திகளை உண்மைக்குப் புறம்பாகத் தருவதில்லை. ஆனால்பிறர் எழுதும் வரலாற்று நூல்களில் செய்திகள் சரியாகக் கிட்டாததாலும் செய்தி தருவோர் முறை மாற்றிச் சொல்லக் கூடுமாதலாலும் உண்மையிலிருந்து விலகிய செய்திகள் இடம் பெறக் கூடும்.

வ.உ.சி., தாம் துறவியாக வீட்டைத் துறந்து போன நிகழ்ச்சி பற்றிக் குறித்திருப்பதற்கும் அவர் வரலாற்றினை எழுதியோர் குறித்திருப்பதற்கும் இடையே வேறுபாடு உள்ளது.

''சிதம்பரம் தமது பள்ளிப் பருவத்தில் கட்டுக்கடங்காத காளையாகத் திரிந்து வந்தார். அவரிடமிருந்த துடுக்குத்தனங்கள் சொல்லி முடியாதன. தந்தை உலகநாத பிள்ளை, சிதம்பரத்திடம் வைத்த பேரன்பு காரணமாக அவரது பிழைகள் அனைத்தையும் சகித்துக் கொள்வார். ஆனால் சகித்துக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் நையப் புடைத்து விடுவார். தந்தையார் அடிக்கும் போதெல்லாம் காளை சிதம்பரம் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமலேயே வீட்டை விட்டு ஓட்டம் பிடிப்பார். ஒரு நாள் ஏதோ தவறு செய்தமைக்காகச் சிதம்பரத்தை அவரது தந்தையார் கடுமையாக அடித்து விட்டார். மறு கணமே மொட்டையடித்துக் கொண்டு உடுத்தியிருந்த பட்டாடைகள் அனைத்தையும் களைந்தெறிந்து, பருத்தி உடைக் கோவணத்துடன் பட்டினத்தார் போல் வேடம் பூண்டார்'' என வ. உ. சி. யைத் துடுக்கானவர் என்றும் அதனால் தந்தை அவரை அடித்தார் என்றும் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. குறிப்பிட்டுள்ளார். ஆனால் இச் செய்தி உண்மைக்குப் புறம்பான செய்தியாகத் தோன்றுகின்றது. ஏனெனில் வ. உ. சி.,

''தகுதியில் கணவனையென் தமக்கைக் களித்தென்
வீட்டுடன் இருக்க விளம்பினன் தந்தையான்
காட்டினிற் சென்றிடுங் கதியினை அடைந்தேன்
பொறாமை மேற்கொடு புறத்திருந் துற்றவன்
அரும்பல பழிகளை ஆக்கிக் கூறுவன்.
தந்தை என்னைத் தாறுமா றாக
நிந்தை புரிந்து நினைத்தற் கரிதா
அடிப்பன்; மிதிப்பன், யானுடன் ஓட்டம்

பிடிப்பன். அவன்பின் தொடர்ந்து கொணர்வன்.
எண்ணிலாத் தடவை இப்படி நேர்ந்தன.
கண்ணிலா தொருநாள் கணக்கிலா தடித்தான்.
நினைந்தேன் துறவினை; நீக்கினேன் சிகையினை
புனைந்தேன் கௌபீனம்; பொள்ளென நடந்தேன்.''

எனத் தமக்கையார் கணவர் பொறாமையினால் தூண்டிய தாலேயே தந்தை தம்மை அடித்ததாகத் தம் வரலாற்றில் குறிப்பிடுகின்றார்.

''சிதம்பரத்தின் துடுக்குத்தனத்தை அடக்க எண்ணித் தந்தை உலகநாத பிள்ளை அவரை ஒட்டபிடாரம் தாலுகா அலுவலகத்தில் குமஸ்தா வேலையில் அமர்த்தினார். இந்த வேலையில் ஈடுபடச் சிதம்பரத்திற்கு விருப்பம் இல்லையென்றாலும் தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்.'' என்ற ம. பொ. சி. யின் செய்திக்கும்.

''ஓதிப் பற்பல உயர்ந்து தாசிலாய்
நீதி புரிந்த நெல்லை யப்பன்
தருவித் தென்னைத் தாலுகா விடத்தினை
மருவிக் கிளார்க்கா வரைந்திடச் சொல்லினன்
தந்தை அவன்சொல் தட்டமாட் டாமல்
அந்த வேலையில் அமர்ந்திடச் செய்தனன்''.

என்ற செய்திக்கும் இடையிலுள்ள உண்மை நழுவலை உணரலாம்.

வழக்கறிஞர் தொழிலை முதன் முதவில் ஒட்டப்பிடாரத்தி லேயே வ. உ. சி. தொடங்கினார் என்று ம. பொ. சி. குறிப்பிடு கிறார்.

''என்னுளம் மதிக்கும் ஏசுவின் வருடம்
தொண்ணூற் றைந்தினிற் சொல்லிய பரீட்சையில்
தெளிந்ததற் குரிய சீட்டினைப் பெற்றுத்
தெளிந்தவர் தங்கும் திருமந் திரத்தில்
'சிவில்' 'கிரிமினல்' என்றே செப்பிடும்
தாவா வழக்கும் தண்டமும் புரியும்
இருதிறக் கோர்ட்டினும் இயல்பொடு சென்று.''

என வரும் வ. உ. சி. யின் கவிதை வரிகளோ திருமந்திரம் எனப் படும் தூத்துக்குடி நகரில் தான் அவர் தொழிலைத் தொடங்கினார் என்று சுட்டுகின்றன.

அகல் விளக்காய்த் தோன்றும் அகவெளிப்பாடுகள்

தம் அக வெளிப்பாட்டை உணர்த்தும் வ. உ. சி. யின் பாடல்கள் சில, அவரை அகல் விளக்கென விளக்கிக் காட்டுவதைக் காணலாம்.

விளையாட்டில் விருப்பம்

"சுவர்மேல் நடத்தல், தொன்மரம் ஏறுதல்
கவண்கொடுங் கைகொடுங் கல்லெறி பழகுதல்
கண்ணினைப் பொத்திக் காட்டில் விடுதல்
எண்ணினைச் சுவாசம் இழுக்காதி யம்பல்
குதிலட் டாடுதல், கோலி தெறித்தல்
குதிரைமீ தூர்தல், கோலேறி நடத்தல்
காற்றிரி எறிதல், கான்மாறி யோடுதல்
மேற்றிரி பந்தின் விளையாட்டுப் பற்பல
சடுகுடு, கிளியந் தட்டு, பல்லி
நெடுகடு மோட்டம், நீர்விளை யாட்டம்
கம்பு சுற்றுதல், கத்தி வீசுதல்
தம்மினை அடக்கித் தலைகீழ் நடத்தல்
கசரத்து, பஸ்கி, கலப்புறு குஸ்தி
நிசத்துச் சண்டையில் நிற்கும் முறைகள்
தாயம், சோவி, சதுரங்கம், சொக்கட்டான்
காயிதச் சீட்டுக் கரந்திருந் தாடுதல்
வெடிகொடு சுடுதல், வில்கொடு தெறித்தல்
அடிபிடி சண்டை அளவில புரிந்தேன்."

எனத் தம் விளையாட்டுத் திறத்தையும் தம் அக உணர்வினையும் வ. உ. சி. வெளிப்படுத்தினார்.

கொள்கை விளக்கம்

விருதுநகரைச் சார்ந்த இராமையா தேசிகர் என்பவரைத் தம் இல்லத்தில் இருத்தி வ. உ. சி. காப்பாற்றி வந்தார். இதை அறிந்த அயலார் இழிகுலத்தோனை இல்லத்தில் இருக்கச் செய்து உணவளித்து வருகிறார் எனப் பழிச்சொல் பகர்வாராயினர். தம் மனைவி வள்ளியம்மையாரிடம் அவர் இது பற்றிக் கலந்துரையாடினார்.

"எல்லாம் உணர்ந்த என்னுயிர் நாத!
எல்லாம் கடவுளா யிருக்கக் கண்டும்

உருவம் முதலிய ஒன்றினும் பேதம்
மருவுத லிலாமை மலைபோல் கண்டும்
கற்பனை யாகக் காணும் குலத்தின்
சொற்பிழை கொள்ளலெனச் சொல்லிய தூய!
துறந்தவர் தமையும் தொடருமோ குலம்இவண்''

என்ற வள்ளியம்மையாரின் கூற்றில் வ. உ. சி. தம் கொள்கையை விளக்கம் செய்கிறார்.

பண்புப் படிமம்

''அறத்தினை என்றும் ஆற்றுவேன்; சொல்வேன்;
புறத்தினில் ஒன்றும் புகலேன்; கேளேன்;
சிந்தையைத் திருப்பிச் செலுத்துவேன் சிலதினம்;
சிந்தைபின் திரும்பிச் செல்லுவேன் சிலதினம்;
பெருமித மின்மையே பெருமையெனக் கொள்வேன்;
அருமை யுடையவே ஆற்றுதல் புரிவேன்;
நீதியில் என்றும் நிலையுற நிற்பேன்:''

என வரும் இவ்வரிகளில் வ.உ.சி. தம் பண்பு நலன்களை அடுக்கடுக்காகக் குறிப்பிடுகிறார்,

நாட்டுப்பற்றில் நாட்டம்

கப்பல் குழுமத்திலிருந்து வ.உ.சி. விலக்கப்பட்ட பின் அருணாசலம், ஆறுமுகம் என்னும் அன்பர்கள் வற்புறுத்தி வேண்டிய பின்னரே, மீண்டும் முகவராகப் பணியாற்ற உடன் பட்டார். அப்போது,

''நன்றென மொழிந்தேன் நாணம் விடுத்தே!''

என்று கூறும் வ.உ.சி. தம் மதிப்பு, மரியாதையை விட நாடே பெரிதெனக் கருதி, மறுப்பேதும் கூறாமல் பணியில் சேர்ந்ததாகக் குறிப்பிடுகிறார். கப்பற் குழுமத்தினர் முதலில் அவரை முகவர் எனக் கூறிப் பின்னர்க் கண்காணிப்பாளராக ஆக்கிய போதும் சிறிதும் வருந்தாத வ.உ.சி..

''காப்பதெப் பெயரொடும் கடனெனக் கொண்டேன்''

என உறுதி கொண்டு, தம்மைப் புண்படுத்தியதையும் பொருட் படுத்தாது செயல்பட்டமைக்கு அவர் நெஞ்சில் அழியாமல் அரசாண்ட நாட்டுப்பற்று என்னும் நல்லுணர்வே காரணமாகும்.

"சுதேசியம் வளர்க்குக, தொல்லுயிர் நீங்கினும்
இதேயென் பிரார்த்தனை"

என நாட்டுணர்வில் தாம் கொண்டிருந்த அழுத்தமான பற்றினை விளக்குகின்றார்.

வீர நெஞ்சில் ஈரநினைவு

சிறையில் இருந்த பொழுது, தம் மூத்த மகன் தம்மைக் காண வந்தது பற்றி,

"என்னுயிர் முதல்மகன் ஏகினன் சேற்றுள்
என்னுயிர் பதைத்தது: என்னுள்ளம் அழிந்தது',
எடுத்தேன்; முத்தினேன்; என்மடியில் வைத்தேன்:
கொடுத்தேன் தின்பன; கூறினேன் சிலசொல்"

எனக் குறிப்பிடும் வ.உ.சி. தம் மைந்தனைத் தழுவ,

"ஐயா, அம்மையின் றழுகிறாள்! என்றான்"

என்று செல்ல மகன் உரைத்ததாகக் கூறுகிறார்

"ஐயா, நீயும் அழுதையோ?"

என்று தம் மகனை வினவ, அழவில்லை என மகன் விடையிறுக்க,

"..............பெருகிய தென்கணீர்
பரிந்தவன் என்முகம் பார்த்துப் பார்த்துக்
கண்ணீர் துடைத்தான், கருத்தழிந் தேன்பின்
மடமையை உணர்ந்தேன்; மதியுடன் வந்தது"

எனக் குறிக்கும் வ. உ. சி.,

"யாரழு தாலுநீ அழாதே என்றேன்"

என்று தாம் அழுதவாறே தம் மகனையும் 'அழாதே' எனக்கூறிப் படிப்பவர்களையும் அழ வைக்கிறார். அவர் தம் வீர நெஞ்சின் ஈர, இனிய நினைவுகளை இவ்வரிகள் எடுத்தியம்புகின்றன.

அஞ்சாநெஞ்சம்

அரசு வழக்கறிஞர் வ. உ. சியிடம் சிறை வாழ்க்கை எத் தன்மையதாய் உள்ளது எனக் கேட்ட போது,

"சிலநாள் நீயவண் சென்றமர்ந் திருந்தால்
நலமெலாம் காண்பாய் நன்றா யென்றேன்"

என்று கூறுவதும்,

சிறைக் கண்காணிப்பாளர் அச்சுறுத்தக் கருதி,

''..............சொன்னாய் சாக்ஷியம்
ஏற்படுவனவெலாம் இனிக்காண் என்றான்.''

என்று கூறியதற்கு

''காணவே வந்துள்ளேன்; காண்கிறேன் என்றேன்''

என்று பதிலிறுப்பதும்,

''கக்கூஸ் வேலையும் செயச்சொலு கிறாயா?
செய்யேன் எதுநீ செய்யினும் என்றேன்''

என்று சிறை அலுவலர்க்கு மறுமொழி உரைப்பதும் அவரின் அஞ்சா நெஞ்சினை அடையாளம் காட்டுகின்றன.

சிறையிலிருந்த வ. உ. சிக்கு அவர் துணைவியார் எழுதிய ஓர் அஞ்சலில் தனக்கு அஞ்சல் வந்து சேர்ந்ததாக அவர் மனைவி குறிப்பிட்டிருந்ததைக் கண்ட சிறைக் கண்காணிப்பாளர் அது பற்றி வினவ,

''என்னுடைய நிருபம் மன்னிய தாக
என்மனை பெயரால் எவனும் எழுதலாம்
எப்படி யான்இதற் குத்தர வாதி''

என்று பதில் அளிக்கின்றார். உடனே, கண்காணிப்பாளர் கனன்று,

''உன்னைத் தூக்க இஃதொன்றே போதும்
என்னுடை முடிவிதே'' எனக் கூற,
''பாக்கிய வசத்தால் தூக்கநீ ஜட்ஜலை
என்று மொழிந்தேன்; நின்றவன் போயினான்''

என்று மறுமொழி கூறி வாயடைக்கும் வ. உ. சியின் வரிகள் அஞ்சா நெஞ்சின் அறிகுறிகள் ஆகும். மிச்சேல் என்ற சிறையதிகாரி அவர்க்கு அறிவுரை வழங்கிய பொழுது,

''நீயோ புத்தி நிகழ்த்து கின்றவன்?
வாயை மூடடா மதியிலி உனக்கும்
உன்னப் பனுக்கும் உன்சூப் பிரண்டெண்டு
உன்னையாள் கவர்னர் மன்னா தியர்க்கும்
புத்திகள் கூறும் பெற்றிமை யுடையேன்''

எனப் பதிலிறுத்ததாக வ. உ. சி. எழுதியுள்ளார்.

இப் பாடல்கள் அவரின் அஞ்சா நெஞ்சினைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

உணர்த்தும் முறை

வ. உ. சி. தம் வரலாற்றைக் கவிதை நடையில் அகவற்பாவில் எழுதியுள்ளார். அதில் உவமை, உருவகம், முரண், தொடை, சிலேடை, தற்குறிப்பேற்ற அணி ஆகியன காணப்படுகின்றன. இவற்றின் துணை கொண்டு செய்திகளை விளக்கும் பொழுது வ. உ. சி. யின் கவிப்புலமை புலனாகின்றது.

வ. உ. சி. கையாண்டுள்ள உவமைகள்

'சாலயன்' கப்பல் சொந்தக்காரனின் சொல்லின் இனிமையை,

"பலாவின் கனியின் பண்புறு சொல்"

எனப் பலாக்கனிக்கு ஒப்பிடுவார்.

தம் சிந்தையுள் நிற்கும் குருநாதனுக்கும் தமக்கும் இடையே, யிருந்த நட்பினை,

"தேன்கனி என்னவென் சிந்தையுள் நிற்கும்"

எனத் தேனில் தோய்ந்த கனிக்கு உவமைப்படுத்துகிறார்.

காணவந்ததம்மை மறுநாள் வரும்படி, விஞ்சு சொல்லிய பொழுது,

"தெறுவாள் போன்ற சிவந்த முகம்" என்றும்,

சிவா, பத்மநாபன் ஆகியோருடன் தாம் சிறையுள் நுழைந்தமையை,

"தந்தையும் மகனும் சாத்தனும் என்றிட",

என்பன போன்ற பொருத்தமான உவமைகளை வ. உ. சி. கையாண்டுள்ளார்.

உருவகம்

வ. உ. சி யின் தன் வரலாற்றில் உருவகங்கள் இடையிடையே அழகுற அமைந்துள்ளன. தம் ஆசிரியர் வீரப்பெருமாளின் பண்பினை விளக்குமிடத்து,

"ஒழுக்கம் பலவும் உடையாப் புனைந்தோன்"

என்று குறிப்பிடுகையில் ஒழுக்கம் உடையாக உருவகிக்கப் பட்டுள்ளது.

காவல் துறையினரை, வழக்கறிஞராய் வ. உ. சி. தொடுக்கும் வினா அச்சுறுத்தும் கோலாக உருவகமாகியுள்ளது. தம்மைப் பாதுகாத்துக் கூட்டிச் செல்லும் காவல் துறையினரை வைரவர் களாக உருவகித்துள்ளார்.

சுதேசியம் வரை வ. உ. சி. ஆற்றிய பணியினைக் குறிக்கு மிடத்து முற்றுருவகத்தைப் பயன்படுத்தியுள்ளார். சென்னையில் சந்தித்த இராமகிருட்டினானந்தன் கூறிய உரை வித்தாகிறது. வ. உ. சி யின் உள்ளம் வித்தினை ஏற்கும் நிலமாகிறது. அருணம் (சப்பான்) செல்வழி வந்த இருவங்கர் மேகமாகவும் மின்னலாகவும் உருவகிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கூறிய இதோபதேசம் இன் மழையாகிறது. தூத்துக்குடிக் கைத்தொழிலாளர் சங்கமும், தரும சங்கமும் இரட்டை இலைகளாகக் காட்சிதருகின்றன. வந்தே மாதரமும், சுதேசியமும் கால்களாகவும் வரிச்சிகளாகவும் சொந்த தேசம் சுகம் பெறக்கருதும் எண்ணம் கயிற்று வேலியாகவும் திகழ் கின்றன. போலிச் சுதேசியம் அழிக்க வந்த மிருகமாகத் தோன்று கிறது. தர்க்கம் மண் வெட்டியாகிறது, அகம் கேணியாகிறது. அருள் நீராகிறது, நாக்கு துலாக்கோலாகிறது. 'தா' என்னும் இன்சொல் தகளியாகவும் பல சங்கங்கள் கிளைகளாகவும் உருவகிக் கப்பட்டுள்ளன. அபேதானந்தன், பிரமானந்தன் ஆகியோர் இள வேனிலாகவும் தென்றலாகவும் சுட்டப்பட்டுள்ளனர். தரும சங்க நெசவுச்சாலை, சுதேசிய நாவாய்ச் சங்கம், சுதேசியப் பண்டகசாலை ஆகிய மூன்றும் மும்மலர்களாக விளங்குகின்றன. மேற்றிசையால் அனற் காற்றாகின்றனர். தம்மை வ. உ. சி. அடிவேராக உருவகித் துள்ளார். அறிவுநிலை தூணாகவும் நண்பர் பொருள் நல்ல எருவாகவும் முயற்சி பிஞ்சாகவும் மிகை வருவாய் கனியாகவும் உருவகிக்கப்பட்டுள்ளன. இத்தகைய நெடிய உருவகத்தைப் பிற கவிதைகளில் காண்பது மிக அரிதாகும்.

முரண்தொடை

வ. உ. சி. தன் வரலாற்றில்,

> "ஒழுக்கம் பலவும் உடையாப் புனைந்தோன்
> "இழுக்கம் ஒன்றே என்றும் இல்லோன்"

எனவும்,

> "பொய்யுரை என்றும் புகலேன், ஆனால்
> மெய்யுரை என்றும் விளம்பேன் பகைபால்"

எனவும்,

> "என்னுயர் குணமும் என்னுறு குற்றமும்"

எனவும்,

> "கீழ்க்கோ டுயர்ந்தென்! மேல்கோ டுயர்ந்தென்!"

எனவும்,

''இருநெடு வாரம் அபராதம் என்றான்
ஒருசிறு வாரத் துத்தர வடுத்தது''

எனவும் தகுந்த முரண்களைப் பயன்படுத்தித் தாம் கூறும் செய்திக்குச் சுவையினை வழங்கியுள்ளார்.

சிலேடை

வ. உ. சி. தமது நூலில் சிறப்பான சிலேடைகளைப் பயன்படுத்தியுள்ளார். 'இளையான்' என்ற சொல்,

''அவனுக் கிளையோன் அருமையொடு வளர்ந்தோன்
எவனுக்கும் இளையான்,''

என இளையவனென்றும் இளையானென்றும் இரு பொருள்படச் சிலேடையாகின்றது.

''ஆறாம் வயதினில் அறிவை வளர்த்திடும்
ஆறாம் பள்ளியில் அமர்த்தினன் தந்தை''
''எமனவர் போல என்மேல் வந்தனர்''
''குலமா ணிக்கபுரம் கோவிலை நண்ணிக்
குலமா ணிக்கமெனக் கூறிட நின்றனர்''
''செவ்வகனில் யாவும் சித்தப் படுத்திப்பின்
செவ்வாய் திறந்து செப்பிய சிறையினன்''
''நகையும் உவகையும் நண்ணிலன் என்னிரு
நகையை உவகையோடு நல்கினேன்''
''ராஜ்ஜியக் கைதியை நயமா நடாத்தின்
ராஜியாய் நம்மொடு நன்றா நடப்பர்''

என ஆறாம் (ஆறுவயது, நெறியாம்)
எமனவா (எம்மவர், எமன் போன்றவர்)
குலமாணிக்கம் (ஊர், உயர்ந்த பண்பினர்)
நகை (மகிழ்ச்சி, மழலை)
இராஜி (நிலப்பரப்பு, சமாதானம்) என்ற சொற்களில் சிலேடைகள் கையாளப்பட்டுள்ளன.

தற்குறிப்பேற்ற அணி

வ. உ. சி. தமது விரலிலிருந்து மோதிரம் கழற்றப்பட்ட செய்தியினை

"ஐவிரல் கஞமோன் றாகும் வகையிலென்
கைவிரல் மோதிரம் கழற்றி வாங்கி"

எனக் குறிப்பிடும் பொழுது தற்குறிப்பேற்றம் தலைதூக்கி நிற்கிறது.

வ. உ. சி யின் சொல்லாட்சி

வ. உ. சி. இந்நூலில் மரபு வழிப்பட்ட சொற்களைக் கையாண்டுள்ளார். வடமொழிச் சொற்களையும் வழக்குச் சொற் களையும் பயன்படுத்தியுள்ளார். புணர்ச்சி இலக்கணம் சிறந்து விளங்கும் அரும்பதங்களைக் கையாண்டுள்ளார்,

ஒலிக்குறிப்புச் சொற்கள் இடையிடையே இடம் பெற்றுள்ளன. இரட்டைக்கிளவியும் இன்னிசையளபெடையும் வ. உ. சி யின் சொற்களில் ஆட்சி செய் துள்ளன. எனினும் ஆங்கிலச் சொற்களை இழுத்துப் பிடித்துப் பொருத்திப் பூட்டும் பெருங்குறை இந்நூலில் மீண்டும் மீண்டும் காணப்படுகிறது.

மரபு வழிச் சொற்கள்

கடிது - விரைவு

"காற்றென்னக் கடிது கொட்பவும்"

என மதுரைக் காஞ்சி 'கடிது' என்னும் சொல்லினை விரைதல் என்ற பொருளில் பயன்படுத்தியுள்ளது.

வ. உ. சி. யும் கடிது என்ற சொல்லினை அது வழங்கப்பட்ட மரபு குன்றாமல் தம் பாடலில் பயன்படுத்தியுள்ளார்.

"கடிதினிற் கல்லெனக் கட்டளை யிட்டனன்"

அமயம்—பொழுது

"கதிர்சினம் தணிந்த அமயம்"

என மலைபடுகடாம் 'அமயம்' என்ற சொல்லைப் பொழுது என்னும் பொருள் தரப் பயன்படுத்தியுள்ளது.

இம் மரபுச் சொல்லை,

"அமையம் வந்தபோ தாஜராய் நின்றேன்."

என வழங்கியுள்ளார்.

கோறுதல் - சொல்லுதல்

"இகழ்தலின் கோறல் இனிதே."

என நாலடியார் 'கோறுதல்' என்ற சொல்லைப் பயன்படுத்திய பொருளில்,

"கோறுதல் புரிந்ததாக் கொணர்ந்த வழக்கு"

என்று பயன்படுத்தியுள்ளார்.

செப்பன்மின் - சொல்லற்க

இச் சொல்லை அகநானூறு,

"காம நோயெனச் செப்பா தீமே"

எனப் பயன்படுத்தியுள்ளதைப் போன்று,

"சிறுமைச் சொற்களைச் செப்பன்மின்"

எனப் பயன்படுத்தியுள்ளமை கருதத்தக்கது.

செயிர்தீர் கேண்மை - குற்றம் நீங்கிய நட்பு,

"உயிர்கலந் தொன்றிய செயிர்தீர் கேண்மை"

என ஐங்குறுநூறு ஒரே சொற்றொடராகப் பயன்படுத்தியிருக்க வ.உ.சி.,

"செயிரிலா மனத்தன்"
"கேண்மை புரிந்தேன்"

என ஒரே சொற்றொடரை இரு சொற்களாக்கி இரு வேறு இடங்களில் பயன்படுத்தியுள்ளார்.

தொல்லை - பழமை

"தொல்லைக்கண் நின்றார் தொடர்பு"

எனக்குறள் தொல்லை எனும் சொல்லைப் பழைமை என்னும் பொருளில் கையாண்டிருப்பதைப் போன்று இவரும்,

"தொல்லை நூலினும் தொல்லை நெறியினும்"

எனப் பயன்படுத்தியுள்ளார்.

கேண்மோ - கேட்டல்

'ஏதந் தருவன யாங்கும்பல கேண்மோ"

எனச் சிலம்பு 'கேண்மோ' என்ற சொல்லைப் பயன்படுத்தி யிருப்பதை,

"உன்னாது சுட்டுயிர் உண்டனன் கேண்மோ"

எனத்தாமும் பயன்படுத்தியுள்ளார்.

நெருநல் - நேற்று

"நெருநல் உளனொருவன் இன்றில்லை"

எனக் குறளில் 'நெருநல், எனும் சொல் பயில்வதைப் போன்று,

"நெருநல் ஆர்டரை நிகழ்த்திய பின்"

என்ற வ.உ.சி.யின் வரியிலும் 'நெருநல்' என்னும் சொல்லின் ஆட்சியைக் காணலாம்.

கரி - சான்று

"போயொரு வன்கரி புகலான்"

என்ற இவ்வரியில் வ.உ.சி. பயன்படுத்தியுள்ள,

"கரி" எனும் இலக்கியச் சொல்லின் முன்னையவழக்கினை,

"இந்திரனே சாலுங் கரி"

என்ற குறளடியில் உணரலாம்.

பூசல் - ஆரவாரம்

"புன்கணீர் பூசல் தரும்"

என்ற குறளடியில் பயின்றுள்ள 'பூசல்' என்னும் இலக்கியச் சொல்லாட்சி,

"பூசல் எங்கும் பொங்கி எழுந்தது"

என்ற வ.உ சி.யின் வரியிலும் தொனிப்பதைக் காணலாம்.

மாண்ட - சிறந்த

இச் சொல்லின் இன்றைய பொருள் முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றது. 'இறந்த' என்ற பொருளினை இன்று பெற்றுள்ள இச்சொல் சங்க காலத்தில் 'சிறந்த' என்ற பொருளினைப் பெற்றுச்சிறந்துள்ளது.

"மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்"

எனப் புறநானூறு குறிக்கும் பொருள் நிலையிலேயே,

"மக்களொடு வந்துநம் மாண்ட சண்முகன்"

என வ.உ.சி. 'மாண்ட' என்ற சொல்லினைக் கையாண்டுள்ளார்.

வட சொல்லாட்சி

வடசொற்களை மூன்றுநிலைகளில் வ.உ.சி. பயன்படுத்தியுள்ளார்.

வட சொற்கள் அம்மொழியில் எங்ஙனம் வழங்குகின்றனவோ அங்ஙனமே வடிவு மாற்றமின்றி வ.உ.சியால் வழங்கப்பட்டுள்ளன.

பிரசங்கம், பிரசங்கி, அபாத்திரம், உபாத்தியாயன், பரீட்சை, விவாகம் போன்ற வட மொழிச் சொற்களைச் சான்றாகக் காட்டலாம்.

ஒரே சொல்லை ஓரிடத்தில் வடமொழி வடிவத்திலும் அதே சொல்லைப் பிறிதோரிடத்தில் தமிழ்மொழி வடிவத்திலும் வழங்கியுள்ளார்.

தினம் - நாள்
நாமம் - பெயர்
பிதா - தந்தை

போன்ற சொற்களைக் காட்டலாம்.

வட சொற்கள் சிலவற்றிற்குத் தமிழ் வடிவம் தந்து தமிழ் மயப் படுத்தியுள்ளார்.

வருடம் (வருஷம்)
துட்டன் (துஷ்டன்)
பட்சம் (பக்ஷம்)
விடம் (விஷம்)

போன்ற சொற்களைக் காட்டலாம்.

பிறவகைச் சொற் பயன்பாடு

'பொள்ளென', 'கோவென்றலறி' எனப் பல ஒலிக் குறிப்புச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

'குடு குடு' 'மட மட' எனப்படும் இரட்டைக்கிளவிகளும் இல்லாமலில்லை.

உண்முகம் (உள் + முகம்)
உடனான் (உடன் + நான்)
நற்றுணை (நல் + துணை)
மாணிறை (மாண் + நிறை)

போன்ற அரும்புணர்ச்சி பெற்றுள்ள சொற்றொடர்களையும் வ.உ.சி. பயன்படுத்தியுள்ளார்.

'இந்த மத்தியில்' 'பொழுதன்டைய' போன்ற வழக்குச் சொற்களும் இவரின் பயன்பாட்டிற்குரியதாகியுள்ளன.

உள்ளத்தை உறுத்தும் ஆங்கிலச் சொற்கள்

'மெற்றிக்குலேஷன், காலேஜ், கிளார்க், கேஸ், கமிஷன், போலீஸ், மிமோ, ஏஜண்ட், மீற்றிங், சாரீட்டரி, ரிஜிஸ்டார், பீச், ஸ்டேஷன், கான்விக்டு வார்டர், போன்ற எண்ணற்ற ஆங்கிலச் சொற்கள் இடம் பெற்றுள்ளதை நினைக்கும் பொழுது தமிழும்

'கான்விக்டு, வார்டரெனும், ஆங்கிலச் சொற்களால் அடித்து வருத்தப்படும் உணர்வு தான் நமக்கு ஏற்படுகிறது.

மெய்யறிவு

நூல் பற்றிய செய்திகள்

சிறை வாழ்க்கையின் போது அவருடன்இருந்த குற்றவாளிகள் திருந்தும் பொருட்டு வ. உ. சி. வழங்கிய அறிவுரையே இந் நூலாகும். சிறைக் கைதிகளே இந்நூலைக் கேட்போராய் அமையினும் சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலுமுள்ள மக்களும் உணரும் பொருட்டு இந்நூல் எழுதப்பட்டதென அறிய முடிகிறது. அறம், பொருள், வீடு என்பவற்றைப் பற்றித் தற்காலத்து மாந்தரிற் பலர் கொண்டுள்ள பொய்யறிவைப் போக்குகின்றமை யால் இந்நூல் மெய்யறிவு என்னும் பெயரைக் கொண்டுள்ளது. அறத்தைச் சரியாகப் புரிதலும் பொருளை நியாயமாக ஈட்டலும் வீட்டை நேராக அடைதலும் இந்நூலைக் கேட்போர் பெறும் பயன்களாகும். இந்நூல் வெண்பா யாப்பினைப் பெற்றுள்ளது. இந்நூலில் பத்து அதிகாரங்களும் அதிகாரம் ஒன்றிற்குப் பத்துப் பாடல்களாக மொத்தம் நூறு பாடல்களும் உள்ளன. இந்நூலில் மருத்துவக் கருத்துக்கள், சமுதாய அறங்கள் ஆகியன சிறந்து காணப்படுகின்றன.

மருத்துவக் கருத்துக்கள்

''மன்னுமிந்தப் பூவுலகின் மாண்புற்ற பல்பொருளு
ளுன்னுடம்பிற் கொப்பிலையா லூக்கியதைப்—பன்னும்
பிணியெஃதுஞ் சாராது பேணிவளர்த் தென்றும்
பணியுமா றாள்வாய் பரிந்து.''

என்ற பாடலில் பிணி வராது காக்கும் இன்றியமையாமையினை வ. உ. சி., வலியுறுத்துகின்றார்.

''பார்த்துநன்கு பின்னர்ப் பதார்த்தகுண மேற்பவற்றை
யோர்த்துணர்ந்து கொள்ளென்று முன்னலத்தைப்—
பேர்க்கும்
பிறபொருள்கள் கொள்ளாய் பிணியுற்றாற் கொள்வாய்
பலபிணிகள் தீர்த்தானைப் பார்த்து.''

என்ற பாடலில் பிணியுற்றால் பல பிணிகளைத் தீர்த்தானைப் (மருத்துவர்) பார்த்துக் கொள்ளுமாறு வேண்டுகிறார்.

உடலியற் கருத்துக்கள்

'உடம்பை வளர்த்தல்' என்னும் அதிகாரத்தில் உடலோம்பல் வழிகளை வ. உ. சி. அடுக்கடுக்காக விளக்கிக் காட்டுகின்றார். வைகறையில் கண்விழித்து, உடம்பில் மாசொழித்து, ஈசனை நினைந்து, மெய்யறங்கள் பெற்றுப் பின் நூல்களை நன்கு ஆய்ந்து, மையல் அறுத்து. உரம் உடம்பில் உறுவதற்காக நற் சிலம்பம் செய்யுமாறு வேண்டுகிறார். காலையிலே மாமேல் (குதிரை) ஏறிக் காதவழி சென்று வந்து, சோலையில் சற்று இருந்து, சோர்வை அகற்றிப் பாலிலோ, நெய்யிலோ அட்ட உணவைக் கதிரவன் தோன்றும் நேரத்தில் உண்டு பின்பு திட்ட மிடப்பட்ட பணிகளை நன்கு ஆற்றுமாறு அறிவுறுத்துகிறார். மதியம் வருமுன்னர் வாழ்நீரில் குளித்துப் புதிய நெய்யொடும் தயிரொடும் நெல் பொங்கலைப் பசியளவிற்கு உண்டிருந்து, வெற்றிலைப் பாக்கில் ஊறு நீரில் முதல் இரண்டு முறை ஊறிய நீரை விலக்கி, மூன்றாம் முறை ஊறிய நீரை உட்கொண்ட பின், பிறபணிகளை இயற்றுமாறு வேண்டுகிறார். மாலையில் மலம் கழித்து, மாண்புடைய ஈசனின் தாளைத் தொழுது, நன்கு அட்ட கோதுமையை நெய்யொடும் பாலொடும் கலந்து, நாலைந்து நாழிகைக்குள் உண்டு, பின் குறுநடை கொண்டு துயிலுமாறும் மதிக்கு ஓர் கால் மாதை மருவுமாறும் பணிக்கின்றார். இங்ஙனம் துயில் நீங்கிய காலைப் பொழுதிலிருந்து துயில் கொள்ளும் இரவுக் கால வரையிலான உடலோம்பற் செயல்களை வ. உ. சி. உணர்த்து கிறார்.

சமுதாய அறங்கள்

"காலைவரு முன்னெழுந்து கைகால்கள் சுத்திசெய்து
சீலைதனை மாற்றியுயர் சிற்பொருளை—ஞாலமுள
நல்லுயிரு மேர்த்தொழிலு நல்லரசும் வாணிகமும்
தொல்லறமும் வாழத் தொழு."

என்ற பாடல்ல் தனக்காக மட்டுமல்லாமல் உலகத்து உயிரும் ஏர்த் தொழிலும் நல்லரசும் வாணிகமும் தொல்லறமும் சிறக்க இறைவனை வணங்குமாறு வ. உ. சி. விடுத்துள்ள வேண்டுகோளில் அவரின் சமுதாய அறம் பற்றிய சரியான சிந்தனையை அறிய முடிகிறது. கொலை, களவு, கள், காமம், பொய் முதலிய ஐவகைக் குற்றங்களை நீக்கியோரே இறைவனைக் காண்பர் என்பது அவரின் கருத்தாகும்.

''கள்ளுண்ணக் காசளித்தல் கள்விற்றல் கள்ளாக்கல்
கள்ளுண்ணுந் தீயாரைக் காதலித்த—லுள்ளறிவை
மாய்க்குமதன் றன்மையுள மற்றவற்றை யுட்கொள்ளல்
தாய்க்குமடுங் கள்ளருந்தல் தான்.''

எனக் கள்ளை உண்ணுதல் மாத்திரம் கட்குடிப்பாவம் என்று கருதாது, கள் விற்றல், கள்ளுண்ணக் காசளித்தல், கள்ளுண்பவரைக் காதலிப்பதும் கள்குடித்தலுக்குச் சமமாகும் என விளக்குகின்றார்.

காமம் என்பதற்கு வ. உ. சி. தரும் விளக்கம் எண்ணற்பாலதாகும்.

''கொண்டதுணை யல்லாரைக் கூடிடுத லஃதுன்ன
லண்டிவரு மேதிலரை யந்நினைவாற்—கண்டிடுத
லச்செயல்கள் போன்றவற்றை யாள்தலவை யாதரித்த
லிச்செயலெல் லாங்காம மே.

என்ற பாடலில் வாழ்க்கைத் துணையினைத் தவிரப் பிற மகளிரைக் கூடுதலும் கூட நினைத்தலும் பிற மகளிரை அந்நினைவால் காணுதலும் காமமாகும் எனக் காமக் கொடுமையினை விளக்குகின்றார். இச் செய்திகள் ஒழுக்கமான சமுதாயம் அமைவதில் அவருக்கிருந்த ஆர்வப் பெருக்கினை எடுத்துக் காட்டுவனவாய் உள்ளன.

சமுதாய ஒழுக்க மேம்பாட்டை ஒழிப்பதில் முதன்மை பெறும் சமுதாயக் குற்றச் செயல்களைக் குறிப்பிட்டுள்ள வ. உ. சி. சமுதாயச் செம்மைக்குத் துணைபுரியும் அறச்செயல்களையும் அறிவுறுத்தியுள்ளார்.

'அருள், ஈகை, உண்மை, அறிவு, ஆசையின்மை, வாய்மை என்ற ஐந்தும் பொருள், இன்பம், அறிவின் தெளிவு, வீடு, சிறப்பு, வலிமை முதலிய ஆறையும் வழங்குவதால் அவ்வைந்தையும் பேணுமாறு வேண்டுகிறார். எனினும், அருள், ஈகை, உண்மையறிவு, வாய்மை ஆகிய நான்கினையும் தீமைகளை விளைவிக்கும் உயிர்களிடத்துப் பயன்படுத்துதல் மடமையாகுமென்றும் மெய்ஞ்ஞானத்திலும் அறத்திலும் சிறப்பிலும் ஆசையில்லாதிருத்தல் குற்றமென்றும் உணர்த்தித் தாம் மேற்கூறியவற்றிற்கு விதிவிலக்கினையும் வழங்கியுள்ளார்.

துயில் நீங்கிய காலம் முதல், துயில் கொள்ளச் செல்லும் காலம் வரை நம் பார்வையிற் படும் எல்லைக்குள் காணப்படும் உயிர்களை நம் செயல்களாலாவது, வேறு உயிர்களாலாவது, உணவு இல்லாமையாலாவது பகை உயிர்களாலாவது வருந்துமாறு விடுதல் கூடாது எனக் குறிப்பதன் வாயிலாக உயிர்கள்பால் தாம் கொண்டிருந்த பேரன்பினை வ. உ. சி, விளக்கியுள்ளார். மனம் போன போக்கில் போகாமல், தீக்குணமில்லாதவற்றைச் செப்பி, வாக்கு, மனம் காயம், ஆகிய மூன்றின் ஒத்திசைவுடன் நடத்தும் வாழ்க்கையே சமுதாயக் கோணலை நிமிர்த்தும் தன்மையதாகும் எனச் சமுதாயச் செம்மைக்கு நெறி காட்டியுள்ளார்.

புதுமை அறம்

''ஏர்த்தொழிலுங் கைத்தொழிலு மெங்கும் பெருகிவர
பார்த்தொழிலுங் காப்பும் படைநலனுஞ்—சேர்த்து
நகரரண்கல் விச்சாலை நற்சமயக் கோவி
னிகரற வாங் காக்கு நினைத்து.''

என்பதால் நீர்த்தொழிலும் கைத்தொழிலும் எங்கும் பெருகி வரப் பார்த்து, எழிலும் காப்பும் படை நலனும் சேர்த்து, நகரும் அரணும், கல்விச் சாலையும் நல் சமயக் கோவிலும் நிகர் அற நினைத்து ஆக்குதலும் அறமே எனப் பிற அற நூல்களில் காணப் படாத சமுதாயச் செழிப்பிற்கு உதவும் புதுமை அறத்தினை வ. உ. சி. புலப்படுத்தியுள்ளார்.

தம் கால அறம்

''சாதியெனும் பொய்கொண்டுந் தன்சமயப் பேய்கொண்டு
மாதினது நோய்கொண்டும் வாழுயிர்க—ளாதி
மகவென்று நோக்காது மாணாத செய்வர்
தகவென்றும் பேணா தவர்.

என்பதால் சாதி எனும் பொய் கொண்டும் தன் சமயமாகிய பேய் கொண்டும் காம நோயைக் கொண்டும் வாழ்கின்ற உயிர்களை மெய்ப் பொருளின் குழந்தைகளென்று கருதாது, துன்பங்களைப் புரிகின்றவர்கள் தகவை என்றும் பேணாதவர்கள் எனக் குறிப்பிடு வதன் வாயிலாக, வ. உ. சி. தம் கால அறக்கேடுகளைச் சுட்டிக் காட்டி, அவை நீங்கப் பெற்ற சமுதாயமே சிறப்பிற்குரியதாகும் எனத் தம் காலத்திற்குத் தேவைப்படும் அறங்களை விளக்கி யுள்ளார்.

பன்னூற் பயிற்சி

திருக்குறள், சிறுபஞ்சமூலம், ஏலாதி, ஆசாரக்கோவை ஆகிய நூல்களின் கருத்துத் தாக்கமும் சித்தர் பாடல்களின் கருத்துச் சாயலும் இந்நூலில் அமைந்துள்ளன. முன்னைய கால அறநூல் களில் வ. உ. சிக்கு இருந்த பற்றினைப் பறை சாற்ற இது பயன் படுகிறது.

திருக்குறள்

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்''

என்ற வள்ளுவரின் கருத்தை அடியொற்றி,

''விதிதன்னி னிங்கு மிகுவலிய தில்லைச்
சதிசெயினும் வந்ததுதான் றாக்கும்''

என விதியின் வல்லமையை வ. உ. சி. விளக்குகிறார்,

''தீநெறியை விட்டுத் திருப்பி மனமதனை
ஆநெறியிற் சேர்த்திங் கறஞ்செய்து''

என்ற வ. உ. சியின் கருத்து;

''சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு''

என்ற குறட் கருத்துடன் ஒன்றிச் செல்கிறது

''தவஞ்செய்த லொன்றேதான் நன்கருமஞ் செய்த
லவஞ்செய்தன் மற்றையன வாமே''

எனத் தவத்திற்கு வ.உ.சி இலக்கணம் சுட்டுகிறார். இவ்வறம் வள்ளுவர் விளக்கும்.

''தவஞ்செய்வார் தம்கருமம் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு''

என்னும் கருத்தில் உருவானதாகும்.

சிறுபஞ்சமூலம்

''ஒத்த ஒழுக்கம் கொலைபொய் புலால்களவோ(டு)
ஒத்த வினையல வோர்நாலிட்(டு)—ஒத்த
உறுபஞ்ச மூலம்தீர் மாரிபோல் கூறீர்
சிறுபஞ்ச மூலஞ் சிறந்து.''

என்ற சிறுபஞ்சமூலக் கருத்துடன்,

"கொலைகளவு கள்காமம் பொய்யெள் ளளவு
மிலையுளத்து மென்றக்கா லென்று—மலையளவு
நோயும் பனிபோல நொந்தழியு மெய்ப்பொருளை
யாயு மறிவு மிகும்,"

என்ற மெய்யறிவின் கருத்தும் ஒன்றுபட்டிருத்தலை அறியலாம்.

ஏலாதி

"பொய்யுரைத்த லாக்கல் புறங்கூற னிந்தித்தல்
மெய்மறைத்தல்"

என்ற மெய்யறிவின் கருத்து,

"பொய்யுரையான் வையான் புறங்கூறான் யாவரையும்
மெய்யுரையான் உள்ளளவும் விட்டுரையான்"

என்ற ஏலாதி நூற் கருத்தின் தாக்கத்தினால் எழுந்ததாக எண்ணலாம்.

ஆசாரக்கோவை

"உண்ணுதற்கு முன்னு முறங்குதற்கு முன்னுமெய்யை
யுண்ணினைந்து போற்றி"

என்ற மெய்யறிவின் கருத்து,

"நாளந்தி கோறின்று கண்கழீஇத் தெய்வத்தைத்
தானறிவு மாற்றால் தொழுதெழுக அல்கந்தி
நின்று தொழுதல் பழி,"

என்ற ஆசாரக் கோவையின் கருத்துடன் இயைந்துள்ளமையை உணரலாம்.

சித்தர் பாடல்

"மனத்தின்பின் செல்லாத மாணறங்கள் சார்ந்த
புனத்தின்பி னித்தமதைப் போக்கின்—றனத்தும்
பிறவற்றுஞ் சால்பெய்திப் பேரின்பவெள்ளத்
திறவற்று வாழ்வா யிவண்.

என்ற வ.உ.சியின் இக் கருத்து.

"மனமென்னும் மாடடங்கில் தாண்டவக்கோனே முத்தி
வாய்த்ததென்று எண்ணேடா தாண்டவக் கோனே"

என்ற இடைக்காட்டுச் சித்தரின் பாட்டுக் கருத்துடன் இணைந்து செல்வதை அறியலாம்,

அறம் உணர்த்தும் உத்தி முறைகள்

விளி உத்தி, முரண் உத்தி, அணிகளின் பயன்பாட்டு உத்தி ஆகிய உத்திகளையும் அறம் உணர்த்த வ.உ.சி. பயன்படுத்தியுள்ளார்.

விளி

தாம் கூற விரும்பும் கருத்தினை ஒருவரை முன்னிலைப்படுத்தி அவரிடம் கூறுவதைப் போன்று எடுத்துரைக்கும் முறையினையும் ஒரு பெண்ணையோ தம்மை ஆதரிக்கும் தலைவனையோ விளித்துக் கூறும் முறைமையினையும் தம்முடைய நெஞ்சை நோக்கிக் கூறும் முறைமையினையும் அற இலக்கியத்தில் ஆள்வது மரபாகும்' ஆணை முன்னிலைப்படுத்திக் கூறுவதை 'ஆடூஉ' முன்னிலை எனவும் பெண்ணை முன்னிலைப்படுத்திக் கூறுவதை 'மகடூஉ முன்னிலை எனவும் கூறுவர். இவ்விலக்கியத்திறன் நாலடியாரிலும் ஏலாதியிலும் பழமொழியிலும் சித்தர் பாடல்களிலும் இடம் பெற்றுள்ளது.

அற இலக்கியத்தில் ஆட்சி செய்யும் இத்தகைய விளி மரபினை வ.உ.சியும் பின்பற்றித் தம் அறங்களைக் கூறுகின்றார். இவர் பயன்படுத்தியுள்ள விளி ஆடூஉ முன்னிலையாகும்.

"இன்றுமறஞ் செய்கின்றோ ரெண்ணரிய துன்பங்க
ளென்றுமிவண் கொண்டுதுய ரீர்நரகுட்—சென்றிடுவ
ரென்றுமிவ ணின்பமுற விச்சித்தா வின்றுமுத
லன்றுதரு நல்வினையை நாடு."

என வரும் பாடல் இவ்விளி உத்தியை விளக்கம் செய்கின்றது.

முரண் உத்தி

ஒன்றற்கொன்று முரணாகத் தோன்றுபவற்றைக் கூறிப் பின்னர் அவற்றின் தொடர்பை இணைத்து நயம் படக் கூறுவது கவிஞர்கள் போற்றும் ஒரு முறையாகும். முரணை, எதுகை நிலையிலும் அமைக்கலாம்; வெறும் சொல்லளவிலும் காட்டலாம்.

"அறம்புரிய முற்படா தைம்பொறியிற் சென்று
மறம் புரியுஞ் சக்தி மனம்."

என அறம், மறம் என எதுகை முரணமைத்து மனத்தின் இயல்பினை வ.உ.சி. விளக்கியுள்ளார்.

"வெய்யனவுந் தண்ணியவும் வேண்டுங்காண்"

என வெய்யன, தண்ணியன என்ற இரு வகை உணவுகளை முரண் பாட்டுச் சொற்களால் விளக்குகிறார்.

''கடிந்தவற்றை நீக்கி, கடியாத செய்யின்''

என்ற அடியில் சொல் முரண் காட்டி விடுக்கவேண்டியவற்றையும் விடுக்கக் கூடாதவற்றையும் உணர்த்துகின்றார்.

அணிகளின் பயன்பாட்டு உத்தி

உவமை

''மான்மா நிகர்த்து மனத்தையிழந்து''

என்ற அடியில் ஆன்மா தீய வழிகளில் செல்லும் மனத்துடன் சேர்ந்து உடம்பில் நின்று துயருறும் என்ற கருத்தினை விளக்க மயிரைஇழந்து வாழாத மானை மரபு வழி உவமையாக் காட்டி யுள்ளார்.

''மண்ணாதி வித்தை மரனாகச் செய்துபல்
னண்ணிடநாம் செய்தல்போல்''

என்ற அடிகளில், மெய்ப்பொருள் வினைகளை விதிகளாக்கி அவற்றின் நேரான பயன்களை நல்கும் என்னும் கருத்தினை உணர்த்த மண் முதலியன வித்துக்களை மரங்களாக்கி அவற்றின் கனிகளை நல்கும் என்ற உலகியல் உவமை வழியில் வ.உ.சி, விளக்கி யுள்ளார்.

''பாரினையாண் மன்னன்றன் பார்காண வெண்ணியொரு
தேரினையாண் மாவோடு சேர்தல் போல்''

என்ற அடிகளில், ஆன்மாவானது உடலை ஆள்கின்ற மனத்துடன் தொடர்பு கொள்வது அறத்தைப் புரிதற்கேயாம் என்ற கருத்தினை ''பாரினை ஆளும் மன்னன் தன் பாரைக் காண எண்ணி ஒரு தேரினை ஆள்கின்ற மாவுடன் (குதிரை) சேர்தல் போல்; என்ற புத்துவமை கொண்டு புலப்படுத்துகின்றார். உருவகமும் நிரல் நிறையும் எண் அலங்காரமும் இடை இடையே பாடல்களில் இடம் பெற்றுப் பாட்டிற்கு அணி சேர்க்கின்றன.

சொற்பயன்பாட்டு முறை

வ.உ.சி, இந்நூலில் மரபு வழிப்பட்ட சொற்களைக் கையாண் டுள்ளார். வடமொழிச் சொற்களையும் அவர் கால வழக்குச் சொற்களையும் பயன்படுத்தியுள்ளார்.

மரபு வழிப்பட்ட சொற்கள்

செற்று - சினந்து

"முரண் செய்த புலிசெற்று"

என்று கலித்தொகை காட்டியுள்ள 'செற்று' என்னும் மரபுச் சொல்லின் ஆட்சியை,

"திடனுடைந்த வம்மனத்தைச் செற்றடக்கி"

என்ற வ.உ.சியின் பாடல் வரியில் உணரலாம்.

உயல் - தவறல்

"உயற்பால தன்றிக் கெடும்"

என்று வள்ளுவர் பயன்படுத்தியுள்ள 'உயல்' என்னும் மரபுவழிச் சொல்லை,

"உயல்தானோ விசற்குவப்பு?"

என்ற அடியில் பயன்படுத்தியுள்ளார்.

அடல் - வெல்லுதல்

"அடல் கூடாதென் றான்றோ ருரைத்த

என்ற அடியில் வ.உ.சி, காட்டியுள்ள அடல் என்னும் மரபுச் சொல்லின் பயன்பாடு,

"தன்னை அடல் வேண்டாதான்"

என்ற குறள் வரியின் தாக்கத்தால் எழுந்ததாகும்.

மாணாப்பகை - மாண்பில்லாத பகை

"இல்லவள் மாணாக்கடை"

என்ற குறளடியைப் பயின்ற வ.உ.சி. 'மாணா' என்ற சொல்லை மட்டும் தேர்ந்து, அதனைப் பகை என்னும் சொல்லுடன் இணைத்து மாணாப்பகை என்ற சொல்லாட்சியை,

"மனந்தா னுனைக்கெடுக்கு மாணாப் பகை"

என்ற அடியில் கையாண்டுள்ளார்.

கடிதல் - நீக்குதல்

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்"

என்ற வள்ளுவ வரியில் காணப்படும் 'கடிதல்' எனப்படும் மரபு வழிச் சொல்லைக் குறட் பயிற்சி பெற்ற வ.உ.சி;

"கடிந்தவற்றை நீக்கி கடியாத செய்யின்"

என உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் பயன்படுத்திக் காட்டியுள்ளார்,

பீடு - வலிமை

"பீடியு மென்றுமிலை பேண்"

என்ற அடியில் பயன்படுத்தியுள்ள 'பீடு' என்னும் மரபுச் சொல்.

"ஏறுபோல் பீடு நடை"

என்ற குறள் ஆட்சி அவருக்குக் கொடுத்த நன்கொடையாகும்.

வடசொற்கள்

வ.உ.சி. வடசொற்களைச் சற்று மிகுதியாகவே இந்நூலில் பயன்படுத்தியுள்ளார்.

பாரதம், இரத்தம், நியதி, ஆகாயம், வனம், தினம், நிந்தித்தல், தோடம் (தோஷம்), காரியம் போல்வன இந்நூலில் காணப்படும் வடசொற்களில் சிலவாகும்.

ஆயுத எழுத்துச் சொற்களை மிகுதியும் பயன்படுத்துவதில் வ.உ.சி. ஆர்வம் மிகக் கொண்டிருந்தார் என்பதை அறிய முடிகின்றது.

சொற்பொருள் விளக்கம்

"அருளென்ப தெவ்வுயிர்க்கு மன்புபா ராட்டல்
தெருளொன்றி நிற்பாரைச் சேர்தல்—மருளொன்றிக்
காய்வார்க்கு நல்லறிவு காட்டிடுதல் மெய்ப்பொருளை
யாய்வார்க் கனைத்துமளித் தல்."

(அருள் என்பது பல உயிர்களிடத்தும் அன்பு பாராட்டுதல் மாத்திரமன்று. அறிஞரோடு நட்புச் செய்தலும் அறிவில்லார்க்கு அறிவை அளித்தலும் கடவுளை விசாரிப்பார் வேண்டும் உதவிகளை எல்லாம் செய்தலும் அருளின்பால் படும்.)

"ஈகையென்ப தெவ்வுயிர்க்கு மில்லாத கண்டளித்த
வீகையொன்றி நிற்பாரை யிவ்வுலகில்—வாகைபுனை
மன்னர்க்கு மன்னரென வாக்கானு மேத்தியவர்
சொன்னபணி செய்தல் தொழுது."

(ஈகை என்பது எவ்வுயிர்க்கும் வேண்டுவனவற்றைத் தானே அறிந்து கொடுத்தலும் அவ்வாறு கொடுப்பார் சக்கரவர்த்திகளென மதித்து அவர் சொல்லிய ஊழியங்களைச் செய்தலுமாம்.)

''உண்மையறி வென்ப துலகத்து நன்னூலின்
திண்மையறிந் தவ்வழியே சென்றிடுதல்—வண்மைத்
தொழிலெல்லாஞ் செய்தறிதல் தூலத்தைச் சார்ந்த
இழிவெல்லாம் பாழுக் கிடல்.

(உண்மையறிவு என்பது. நல்ல நூல்களின் சாரத்தை அறிந்து அவ்வாறு ஒழுகுதலும் பொருளை மிகுதியாகத் தரும் தொழில் களை யெல்லாம் செய்தறிதலும் சரீரத்தினது கெட்ட பழக்கங்களை யெல்லாம் விடுதலுமாம்.)

''ஆசையின்மை யென்பதுள மைம்பொறிவா யின்மூல
மாசைகொளுந் தீயவற்றை யாளாது—மீசையுள
வாண்பிள்ளை யென்னவிருந் தப்பொறியா னுள்ளத்தை
நாண்பிள்ளை யாக்கி நகல்.

(ஆசையின்மை என்பது, மனமானது ஐம்பொறிகளின் வழி யாக அடைய விரும்பும் தீய பொருள்களைக் கொள்ளாது, அம் மனம் தனக்குக் கீழ்ப்படியுமாறு செய்தலாம்.)

''வாய்மையென்ப தென்று மனம்வாக்குக் காயத்திற்
றூய்மையொன்றி நிற்றலுண்மை சொல்லலிவண்
சேய்மையினுந்
தீமை தருபவற்றைச் செப்பாமை நன்மைதரு
நீர்மையன சொல்ல னினைத்து.''

(வாய்மையானது நல்ல நினைப்பையும் நல்ல சொல்லையும் நல்ல செயலையும் பொருந்துதலும், உள்ளதை உள்ளவாறு கூறுதலும் உயிர்களுக்குத் துன்பங்களை விளைக்கும் சொற்களைச் சொல்லாமையும் உயிர்களுக்கு இன்பங்களை விளைக்கும் சொற் களைச் சொல்லுதலுமாம்.)

என்ற பாடல்களில் அருள், ஈகை, உண்மை, ஆசையின்மை, வாய்மை என்ற சொற்களுக்கு வ. உ. சி. சொற்பொருள் விளக்கம் தருகின்றார்.

''நல்லுயிரை நல்வினையை நற்பொருளைக் காத்ததற்குச்
சொல்லியவெல் லாஞ்செயினுந் தோடமிலை-யல்லாமல்
தீயுயிரைத் தீவினையைத் தீப்பொருளைக் காத்தற்காங்
காயமெலாம் பாவ மறி.''

எனப் புண்ணிய பாவத்திற்கும் புறநடை விளக்கம் தந்துள்ளார்,

மெய்யறம்

மக்கள் அல்லலைக் கடிந்து, நல்லவை பெற உதவும் நிலையில் குறளின் அடிப்படையில் மெய்யறம் என்ற அற நூலை வ. உ. சி, இயற்றினார்.

நூற் செய்திகள்

மெய்யறம் ஐந்தியல்களைக் கொண்டது. அவை :

1) மாணவரியல்
2) இல்வாழ்வியல்
3) அரசியல்
4) அந்தணவியல்
5) மெய்யியல்

நூற்றி இருபத்தி ஐந்து அதிகாரங்களைக் கொண்ட இந்நூல், மானுடப் பிறவி பெற்ற ஒவ்வொருவரும் முறையே மாணவர், இல்வாழ்வார், அரசர், அந்தணர், எனப் படிப்படியாய் வாழ்க்கை முறையில் வளர்ந்து இறுதியில் மெய்ந்நிலையை அடையலாம் என்ற கோட்பாட்டினை விளக்குகின்றது. இந்நூலில் மரபுவழிச் சிந்தனைகள், புதிய சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன. அறத்தினை உணர்த்த வ. உ. சி. சிறந்த உத்திகளைப் பயன்படுத்தியுள்ளார்.

மரபு வழிச் சிந்தனைகள்

திருக்குறள் பாடல்களில் இருந்து வடிக்கப்பட்ட ஆற்றல் மிகு சாறே மெய்யறமாகும். மெய்யறத்தின் அதிகாரங்கள் பல குறளதிகாரங்களின் தலைப்பினையே பெற்றுள்ளன. குறளைப் போன்று மெய்யறத்திலும் ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துப் பாடல்கள் அமைந்திருக்கின்றன. திருக்குறள் தவிர மிகக் குறைந்த இடங்களில் பிற நூற் கருத்துக்களின் தாக்கமும் இந்நூலில் இல்லாமல் இல்லை.

மெய்யறமும் வள்ளுவமும்

குறட்பாக்கள் மெய்யறத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள முறை கள் பலவாகும். குறட் சொற்களையும், குறட் சொற்றொடர் களையும் இந்நூலின் பல பாக்கள் பெற்றுள்ளன. குறட்பாடல் களில் கருத்தளவில் ஒத்துப்போகும் பாக்கள் இந்நூலில் மிக உண்டு. ஒரு குறளின் கருத்தினை வ. உ. சி. பல அடிகளில் விளக்கியுள்ளார். பாவளவில் குறுகி நிற்கும் குறளை விடக் குறுகிய அளவினதான

ஓரடியிலேயே குறட் கருத்துக்கள் சிலவற்றை வழங்கியுள்ளார். மரபு வழிப்பட்ட அறங்கள் சிலவற்றை விரிந்த நிலையில் விளக்கியுள்ளார்.

குறட் சொல், தொடரின் ஆட்சி

வ. உ. சியின் கவிதைப் பெட்டகத்தில் குறள் மணிகள் ஒளி செய்கின்றன.

எண்ணும் எழுத்தும்

"எண்ணு மெழுத்துங் கண்ணெனை மொழிப."

இது.

"எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு."

என்னும் குறளிடைக் காணப்படும், எண், எழுத்து ஆகிய சொற்களை நினைவூட்டுகின்றன.

எதிரதாக் காத்தல்

"எதிரதாக் காத்தெவ் வின்பமுமடைதல்,"

என இவர் கையாண்டுள்ள 'எதிரதாக் காத்தல்' என்னும் சொற்றொடரின் ஆட்சி,

"எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்."

என்ற குறளின் பயிற்சியில் விளைந்ததாகும்.

இல்லறமும் வேளாண்மையும்

"இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு,"

என்ற குறளில் பயன்பட்டுள்ள வேளாண்மை என்னும் சொல்,

"என்றும்வே ளாண்மை யியற்றலே யில்லறம்,"

என்ற வ. உ. சியின் பாடலிலும் இடம் பெற்றுள்ளமையை அறியலாம்.

இடுக்கண்ணும் நகுதலும்

"இடுக்க ணுற்றுழி நகினது தான்கெடும்,"

என்ற பாடல்,

''இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்,''

என்ற குறளின் சொல்லாட்சியினைப் பெற்றுள்ளது.

மரமும் பண்பில்லாமையும்

''அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்,''

என்ற குறட்பாச் சொற்களின் தாக்கம் பெற்றதால்

''மக்களுட் பண்பிலாரி மரமெனப் படுவரி,''

எனக் குறட் சொற்களையே தம் பாடலிலும் பயிலச் செய்துள்ளார்.

அழிவும் அன்புஅறாமையும்

''அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.''

என்ற குறட்பாவிடைக் காணப்படும் 'அழிவு' 'அன்பு அறாமை. ஆகிய சொற்களின் பயனறிந்த இவர்

''அழிவந்த செய்யினு மன்பறா ராகுக.''

என அச்சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

கடலும் கால்வல் நெடுந்தேரும்

''கால்வ னெடுந்தேர் கடலோ டாதே.''

என்ற பாடலில் பயன்படுத்தியுள்ள, 'கால்வல் நெடுந்தேர்' என்ற சொற்றொடர்,

''கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து,''

என்னும் குறளினை நினைந்தே எழுந்தது எனலாம். இங்ஙனம் வ. உ. சி. இந்நூலில் பயன்படுத்தியுள்ள குறட் சொற்களும் சொற்றொடர்களும் எண்ணிலவாகும்.

குறளிற்கு விளக்கமாய் விளங்குபவை

எண்ணும் எழுத்தும்

''எண்ணெனப் படுவ தெண்ணுநற் கணிதம்.''
''எழுத்தெனப் படுவ திலக்கிய மிலக்கணம்.''
''எண்ணு மெழுத்துங் கண்ணென மொழிப.''

ஆகிய இம் மூன்று பாடல்கள்,

''எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு.''

என்னும் குறளிற்கு விளக்கமாய் அமைந்தவை ஆகும். வள்ளுவர் பயன்படுத்தியுள்ள எண்ணும் எழுத்தும் எவையாகும் என்பதை வ. உ. சியின் விளக்கம் சுட்டிக் காட்டுகின்றது.

ஈத்துவக்கும் இன்பம்

''இல்லார்க் கீவதே யீகை யென்ப.''
''மற்றையோர்க் கீதன் மாற்றிலா மடமை,''
''இல்லாருள்ளு நல்லார்க் கீக,''
''பிறருக் கீதல் பிழையென வறிக,''
''மடையரே மடியரே பிணியரே யில்லார்,''

இங்ஙனம் ஈகை பற்றி விளக்கமாகக் கூறியுள்ளதால்,

''வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து,''

என்ற குறளிடைக் காணப்படும் 'வறியார்' என்னும் சொல் மேலும் பொருள் விளக்கம் பெற்றுள்ளது.

தூதும் ஆராய்ந்த சொல்வன்மையும்

''தூதொரு வர்க்குச் சொலச்சொலுஞ் சொல்லே,''
''எதிரியை யிணைத்தற் கெண்ணிய சொல்லே,''
''அறவர சமர்முன ரதுவிடல் வழக்கே,''
''அமையு மிடத்தெலா மதுவிடல் கடனே,''
''அறியாப் பகைக்கறி வளித்தலுங் கடனே.''

இங்ஙனம் தூது செல்வாரின் சொல்வன்மை பற்றி வ. உ. சி விளக்கமாகக் கூறியுள்ளதால்,

''அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று.''

என்ற குறளில் இடம் பெற்றுள்ள ஆராய்ந்த சொல்வன்மை எது வாகும் என்பதன் விளக்கமாக நாம் உணர்கிறோம்.

குறுகிய வடிவிலமைந்த குறட் கருத்துக்கள்

வள்ளுவர் சுருங்கிய அளவில் கூறியுள்ள கருத்துக்களை வ. உ. சி. ஓரடியில் மேலும் சுருக்கித் தந்துள்ளமை அவரின் நுண்மாண் நுழைபுலத்தை எடுத்துக் காட்டுவதாகும்,

"அதுபொரு டருதல்போ லனைத்தையும் போக்கும்,"

என்னும் சூதின்திமை பற்றிய பாடல்,

"ஒன்று எய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு."

என்னும் குறளின் குறுகிய வடிவமாகும்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்."

என்ற குறட் கருத்தினை.

"இரந்திடப் படைத்தவன் பரந்தழி கென்ப."

எனச் சுருங்கிய வடிவில் வழங்கியுள்ளார்.

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்."

என்ற குறுகத்தரித்த குறளே,

"புறஞ்சொலி வாழ்தலிற் பொன்றனன் றென்ப,"

என வ. உ. சியின் புலமை நுணுக்கத்தால் மேலும் குறுகி நிற்கின்றது.

"அழுக்கா றுடையார்க் காக்கமின் றாகும்."

என்ற பாடல்,

"அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்
பேணாது அழுக்குஅறுப் பான்."

என்ற குறட்பாவின் சுருங்கிய வடிவமாகும்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்."

என்னும் குறளே,

"முயற்சி யூழையு முதுகிடச் செய்யும்,"

என இவர் பாடலில் மிகச் சுருங்கக் காணப்படுகின்றது.

விளக்கம் பெற்றுள்ள மரபறங்கள்

தென்புலத்தாரைப் பேணல், அன்பு, ஒப்புரவு, பண்பு ஆகிய மரபு வழியமைந்த அறங்கள் பற்றி வள்ளுவர் விளக்காத கருத்துக் களையும் வ. உ. சி, விளக்கிக் காட்டியுள்ளார்.

இல்வாழ்வான் போற்ற வேண்டியவருள் தென்புலத்தாரும் அடங்குவர் என வள்ளுவர் குறித்திருக்க, இவர் அத்தென்புலத் தாரைப் போற்ற வேண்டிய வழிமுறையினையும் விளக்கிக் காட்டியுள்ளார்.

''அவர்தொடங் கியவறந் தவறுறா தாற்றல்,''
''அவர்செய வெண்ணிய வறங்களு மியற்றல்,''
''அவர்நற் குணமெலா மறிந்துகைக் கொள்ளல்,''
''அவர்நற் செயலெலா மழியாது நிறுத்தல்,''
''அவர்நற் பெயர்தம தருமகார்க் களித்தல்,''
''அவர்பெயர் விளங்கிட வறம்பல புரிதல்,''
''அவர்க்குறும் பிறவு மன்பொடு செய்தல்,''

என்று தம் முன்னோர் தொடங்கியவற்றைத்தொடர்ந்து ஆற்றுதல் அவர் எண்ணிய அறங்களை இயற்றுதல், அவர் நற்பண்பை மேற் கொள்ளல், அவர் நற்செயலை நிலைநிறுத்துதல், அவர் நற்பெயரைத் தம் மகவுகளுக்கு இடுதல், அவர் பெயரால் அறம் பல புரிதல் ஆகியவற்றை நிகழ்த்திக் காட்டுதலே தென்புலத்தாரைப் பேணும் நெறியாகும் எனக் குறிக்கின்றார். அன்பின் சிறப்பையும் அன்பின்மையின் இழிவையுமே குறள் காட்டுகின்றது. ஆனால் வ.உ.சி.,

''தன்னுயிர்த் துணையே தன்னரும் புதல்வரே,''
''தன்பெற் றோரே தன்சகோ தரரே,''
''தன்னா சிரியரே தன்னுற வினரே.''
''தன்னூ ராரே தன்னாட் டினரே,''
''மனிதர் சமூகமே மன்னுயி ரனைத்துமே.''

என அன்பினைப்பெறுதற்குரியாரைப் பட்டியலிட்டுக்காட்டுகிறார், ஒப்புரவு என்னும் அறத்தின் உயர்வினை மட்டுமே வள்ளுவர் வகுத்துக் காட்டியிருக்க,

''அறிஞரி னொப்புர வறவோர்க் குதவல்,''
''துறந்தா ரிறந்தார் துவ்வார்க் குதவல்.''
''ஊர்ப்பொது நன்மைக் குழைத்தெலாஞ் செய்தல்.''
''ஊரார் நன்மை தீமைக் குதவல்,''
''ஊரார் வேண்டுவ வுவந்துட னளித்தல்,''
''ஊரா ராணைக் குட்பட் டொழுகல்,''

என எவையெவை ஒப்புரவுச் செயல்களாகும் என்பவற்றை வ.உ.சி. வகுத்துத் தந்துள்ளார்,

பண்பின் சிறப்பையும் பண்பின்மையின் சிறப்பின்மையினையும் வள்ளுவன் எடுத்துக் காட்டியிருக்க,

"பெரியார்க் கடங்கி யுரியவை வழங்குக,"
"சிறியரை யடக்கிச் செய்வன செய்க,"
"மெல்லியன் மகளிருண் மென்மைபா ராட்டுக,"
"நண்பருள் ளுவப்புற நண்ணிநின் றொழுகுக,"
"பகைவருள் ளுட்கமே னகைபுரிந் தொழுகுக
சலவருட் சாலச் சலஞ்செய் தொழுகுக."

எனப் பண்புடைமைச் செயல்களை வ.உ.சி. விரிவாகச் சுட்டு கிறார்,

நல்லன ஆற்றுதல் அறமாவதைப் போன்று, அல்லன அகற்று தலும் அறச் செயலேயாகும். பேதைமை, வெண்மை, நெடுநீர். மறவி, மடி, துயில் ஆகியன நீங்கப் பெறுதலும் வள்ளுவர் கருத்தில் அறத்தின் பாற்பட்டதேயாகும். இவற்றினின்று நீங்கப் பெறுதலின் இன்றியமையாமையினை வலியுறுத்திய வள்ளுவர் அவை நீங்கப் பெறுதற்குத் துணை நிற்கும் வழிவகைகளைச் சுட்டவில்லை. ஆனால் வ.உ.சி, அவை நீங்குதற்குரிய வழிவகைகளையும் வகுத்துக் காட்டியுள்ளார்.

பெரியார் நூல் கொண்டு பேதைமையைக் களையவும் ஒண்மை சால் நூல் கொண்டு வெண்மையைக் களையவும் வ.உ.சி. வேண்டுகிறார்,

"எக்கணத் தெஃதுறு மக்கணத் ததைச் செயல்,"
"உறுவது பெரிதென வுற்றதை வைத்திடேல்,"
"உற்றதைச் செய்துபி னுறுவதை யெண்ணுக,"

என்பன நெடுநீர் ஒழிய இவர் காட்டும் வழிமுறைகளாகும்.

"காலையு மாலையுங் கடவுளைத் தொழுக,"
"மாணுயர் நூல்சில மனனஞ் செய்க,"
"விடிந்தபின் செய்பவை விடியுமு னுள்ளுக."
"பகலிற் செய்தவை யிரவினன் காய்க."

இங்ஙனம் நடப்பின், மறதி நம்மை அணுகாது என உணர்த்து கிறார்.

"காலைமெய்ப் பயிற்சி சோலைநீர்க் குளிகொளல்,"
"இளம்பக லுணவரை யிராவுண வரைகொளல்,"

"இரவினல் யாமத் தென்று முறங்குக."
"பயனுள சிலசொற் பார்த்துப் பேசுக,"

என மடி ஒழியச் செய்ய வேண்டுவனவற்றையும்,

"மற்றைய பொழுதெலா மாண்டொழில் புரிக,"
"தொழில்செயும் பொழுது துயில்வரி னுலாவுக,"
"கைத்தொழில் முதலிய மெய்த்தொழில் செய்க,"
"அவசிய மெனினுண வரையினுஞ் சுருக்குக,"

எனத் துயில் ஒழிய இயற்ற வேண்டுவனவற்றையும் வ.உ.சி. விளக்கியுள்ளார்.

புதுமை அதிகாரங்கள்

"மாணவர் கடமை. தாய் தந்தையரைத் தொழுதல், ஆசிரியரை அடைதல், உடம்பை வளர்த்தல். மயக்குவ விலக்கல், தொழிலறிதல், இல்லமைத்தல், உயிர்த்துணை ஆளுதல். இன்பந் துய்த்தல், பரத்தமை விலக்கல் போன்ற புதுமை அதிகாரங்கள் பல வற்றை வ.உ,சி. தம் நூலில் இடம்பெறச் செய்துள்ளார்.

மாணவர் கடமை

அறநூல்களில் எந்நூலும் கூறாத மாணவர் கடமை என்னும் அதிகாரத்தில்

"அன்னைதந் தையரை யாதியைத் தொழுதல்,"
"தீயினம் விளக்கி நல்லினஞ் சேர்தல்,"
"தக்கவா சிரியராற் றன்னிய லறிதல்."
"ஒழுக்கமுங் கல்வியு மொருங்குகைக் கொள்ளல்."
"இறைவ னிலையினை யெய்திட முயறல்."

என்று இன்றும் பொருந்தும் மாணவர் கடமைகளை வ.உ.சி. அறிவுறுத்துகிறார்.

மயக்குவ விலக்கல்

இவ்வதிகாரம் மட்டும் புதுமையன்று.

"மயக்குவ வறிவினை மயக்கும் பொருள்கள்."
"அவைகள் கஞ்சா வபின்முத லாயின."

என அதிகாரச் செய்திகளும் புதுமையாகவே உள்ளன.

தொழிலறிதல்

இவ்வதிகாரமும் வ.உ.சி.யின் காலத்திற்கேற்ற புதிய அதிகார மாகும்.

"படைக்கல மனைத்தும் பண்பொடு பயில்க."
"படைவகுத் தமர்செயு நடையெலா மறிக,"
"புவிகடல் விண்மிசை போவவூர்ந் தறிக,"
"எவ்வகை யுருவு மெடுத்திடப் பழகுக."

எனத் தம் காலத்தில் நிலவிய புதுமைத் தொழில்களையும் கற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறார். இவற்றைப் போன்றே பிற புத்ததி காரங்களும் புத்துணர்வூட்டும் செய்திகளால் பொலிவுற்றுள்ளன.

புதிய அறங்கள்

"மாணவர் தமைத்தம் மகாரெனப் பேணல்."

என மாணவர்களைத் தம் மகவு போலப் பேணச் சொல்லி ஆசிரியர்க்குப் புதிய வழியினை வ.உ.சி. காட்டுகின்றார்.

தொழுநோய், வறுமை, அழுநோய் ஆகியவற்றைக் கொலைச் செயல் விளைவிக்கும் எனக் கொலையின் கொடுமையினை அவர் எடுத்துக்காட்டும் முறை புதியதாகும்.

"விலங்குளு மழுக்கா றிலங்குத லில்லை;"

என விலங்குகளிடையே அழுக்காறு விளங்குதல் இல்லை எனப் புதிய செய்தியினை வழங்குகிறார்,

"துணையழத் துறந்துமெய் யிணைதலன் பிலாவறம்."

எனத்துணையழத் துறந்து, மெய்யினை அடைய விரும்புதல் அன்பிலா அறமாகும் எனத் துறவிற்குப் புத்திலக்கணம் வ.உ.சி காட்டுகின்றார்.

"வாய்க்கா லனைய மாந்தரை நட்டல்,"
"சூட்டுக் கோனிகர் துணைவரைக் கொள்க."

எனத் தூய நண்பர்க்கு வாய்க்காலையும் இடித்துரைக்கும் நண்பர்க்குச் சூட்டுக்கோலையும் புத்துவமையால் காட்டுகின்றார். இத் தகைய புதிய அறங்களை நூலுள் விரிவாகக் காணலாம்.

தம் கால அறங்கள்

இடைக்காலத்தில் பெண்டிர் அடிமைப்படுத்தப்பட்டிருந்த அவல நிலையை உணர்ந்த வ.உ.சி. ஆடவரைப் போன்றே பெண்டிரும் அனைத்து உரிமைகளையும் பெற வேண்டும் என்று அவர் காலத்தில் எழுந்த பெண் இன எழுச்சியை உணர்த்த,

"இருவரு ளறிவிற் பெரியவ ராக்க,"
"ஆண்பா லுயர்வெனல் வீண்பேச் செனக,"
"தானறிந் தவையெலாந் தன்றுணைக் குணர்த்துக,"
"தனதுநன் னெறிதுணை சார்ந்திடச் செய்க,"
"உண்பன துணையோ டுடனிருந் துண்ணுக,"

என ஆண் பெண்ணின் சரி நிகர் சமன் வாழ்வைப் படைத்துக் காட்டுகின்றார்.

அஞ்சிக் கிடந்த தம் காலத்து மக்கள் அஞ்சா நெஞ்சம் பெற,

"சிலம்பமெய்ப் பயிற்சிக ளெந்நாளும் செய்க,"

எனச் சிலம்ப மெய்ப் பயிற்சிகளை மக்கள் மேற்கொள்ள வேண்டும் எனக் கருதுகிறார்.

"கொள்ளு மறிவெலாங் கொண்டுபின் றுணை கொளல்"
"கொளுமுன் கொண்டிடிற் குற்றம் பலவாம்,"

என அவர் காலத்தில் வழக்கில் இருந்த மிக இளமைத் திருமணத்தை வ.உ.சி. குறிப்பாகச் சாடுகிறார். இங்ஙனம் தம் கால அறங்களாக இவர் கூட்டியிருப்பன அளவிறந்தன ஆகும்.

அறம் உணர்த்தும் முறை

உவமை, உருவக வழி உணர்த்தும் அறங்கள்

அறத்தினைத் தெளிவாக உணர்த்துவதில் தக்க உவமைகள், உருவகங்கள் வ.உ.சிக்குத் துணை நிற்கின்றன.

"கண்டுநஞ் சுணல்கரை கடந்தகண் ணோட்டம்,"

என்ற உவமையின் வாயிலாகக் கரை கடந்த கண்ணோட்டத்தின் கேட்டினைச் சுட்டுகிறார்.

"அவையொருங் கெய்தின்வா யமிழ்துடைந் தற்றே."

என்று அரியவை பெற்றார்க்கு வாயிடை வந்துற்ற அமிழ்தத்தை உவமையாக்குகிறார்,

"பழமையை மறப்போர் பாம்பிற்கு ஒப்பாவார்"

என்றும் நல் அமைச்சன் பட்டி போல்வான் என்றும் நல்லரசன் விக்கிரமாதித்தன் போல்வான் என்றும் உருக்குறைந்தார் உளி போல்வர் என்றும் வ.உ.சி. எளிய உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். நூலில் ஒரே இடத்தில் முற்றுருவகத்தைப் பயன்படுத்தி உள்ளார். காமமும் களவும் தழையாகவும் இலையாகவும் கொலையும் பொய்யும் கொம்பாகவும் அதன் வழித்தோன்றும்

கிளையாகவும் மரங்களை அரும்பாகவும் பழியும் கேடும் கீர்பாகவும் நரகம் கனியாகவும், வ.உ.சியால் உருவகம் செய்யப்பட்டுள்ளன.

உடன்பாட்டு அறங்கள்

திருக்குறளில் சில கருத்துக்கள் உடன்பாடாகவும் சில எதிர் மறையாகவும் விளக்கப்பட்டுள்ளன, சிற்சில அதிகாரங்கள் கூட இவ்வடிப்படையில் அமைந்துள்ளன. வ.உ,சியும் வள்ளுவரைப் போன்று உடன்பாட்டு அறங்களை அதிகாரத் தலைப்புக்களாக்கி உள்ளார். உடன்பாட்டு அறங்களை உடன்பாட்டு முறையில் உணர்த்துவதுடன் அவற்றை எதிர்மறையாலும் விளக்கித் தாம் காட்டும் அறத்திற்கு வலுவூட்டியுள்ளார்.

''அடக்கநன் னெறியி னடக்கச் செய்யும்,''
''அடக்கமில் லாமை யதைக்கடக் கச்செய்யும்,''

அடக்கம் நன்னெறியில் நடக்கச் செய்யும் என வ.உ,சி. சுட்டியிருப்பதைக் கொண்டே அடக்கம் இல்லாமை பிழை நெறி நடக்கச் செய்யும் என உய்த்துணர முடியினும் அடக்கமிலாமை நன்னெறி கடக்கச் செய்யும் என எதிர்மறையாலும் கருத்தை எடுத்து மொழிந்து, அடக்கமுடைமையின் சிறப்பினை வலியுறுத்தியுள்ளார்.

எதிர்மறை அறங்கள்

வ.உ,சி, எதிர்மறை அறங்களையும் வள்ளுவரின் அடிஒற்றி அதிகாரத் தலைப்புக்களாக ஆண்டுள்ளார். எதிர்மறை அறங்களைக் கூறும் போது அவற்றைக் கைவிடுவதால் நிகழும் பயனை உடன்பாட்டில் உணர்த்துவதுடன், அவற்றைக் கைவிடாமையால் வரவிருக்கும் தீமையினை எதிர்மறையினாலும் விளக்கி உள்ளார்.

''பொய்ம்மையை யாள்பவர் புன்னர காழ்வர்,''
''பொய்ம்மை யொரீஇயவர் புகழ்வீ டடைவர்''

பொய்மையைப் போக்கினார் பெறக் கூடிய பயனை இரண்டாம் பாடலில் உடன்பாட்டில் உணர்த்தி அதனைப் போக்காதார் பெறும் கேட்டினை முதலாம் பாடலில் எதிர்மறையில் கூறித் தாம் கூறவந்தஅறத்தின் சிறப்பை மிகுவிக்கிறார். மெய்யறம் பழமைக்குப் பழமையாகவும் விளங்குகின்ற அறநூலாகும்.

மெய்யறத்தில் பிற நூல்களின் தாக்கம்

திருக்குறள் தவிர மிகக் குறைந்த இடங்களில் பிற நூற்கருத்துக்களின் அடிப்படையிலும் வ,உ.சி, தமது கருத்துக்களை வழங்கியுள்ளார்.

ஆத்திசூடி

"இளமைப் பருவ மியைந்த தற்கே"

என இளமையில் பயில்வதை மாணவர் கடமையாகச் சுட்டி யிருப்பதை,

"இளமையில் கல்,"

எனத் தாம் யாத்த ஆத்திசூடி என்னும் அறநூலில் ஒளவை மூதாட்டி மிக முன்னரே சுட்டியுள்ளார்.

"சேரிடம் அறிந்து சேர்,"

என்ற ஒளவையின் ஆத்திசூடி குறித்திருப்பதைப் போன்றே,

"தினமு நல்லினந் தெரிந்து சேர்ந்திடுக,"

என நல்லினம் சேர்தல் என்னும் அதிகாரத்தில் நல்லினச் சேர்க் கையை வ.உ.சி. அறிவுறுத்தியுள்ளார்.

கொன்றைவேந்தன்

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்,"
"இல்லற மல்லது நல்லற மன்று,"
"குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை,"

எனக் கொன்றைவேந்தன் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை

"தாயுந் தந்தையுந் தம்முதற் தெய்வம்,"
"இன்னிலை எவற்றினு நன்னிலை யென்ப,"
"குற்றம் விடுதலாற் சுற்றுறுஞ் சுற்றம்,"

என்ற பாக்களில் வ.உ.சி. இடம் பெறச் செய்துள்ளார்.

கலித்தொகை

"பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்"

என்ற கலித்தொகை வரியினை,

"பாடறிந் தொழுகலே பண்பென மொழிப,"

என்று சிறிதும் பொருள் மாற்றமின்றிக் கையாண்டுள்ளார்.

தொல்காப்பியம்

"முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே."

என்று தொல்காப்பியர் நானிலத்தை வகுத்துக் காட்டிய நெறி நின்று,

''மலைகாடு வயல்கடல் மருவிய நானிலம்,''
''அவை குறிஞ்சி முல்லை மருத நெய்தல்,''

என வ.உ.சியும் நானிலப்பாகுபாடு காட்டியுள்ளார்,

புறப்பொருள் வெண்பாமாலை

'வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்
சென்றி கன்முனை ஆதந் தன்று'

எனப்புறப்பொருள்வெண்பாமாலை விளக்கும்வெட்சித்திணையை,

' வெட்சிநல் லுயிர்களை விரோதிபாற் கவர்தல்,''

என்றும்,

''வாடாவஞ்சி தலைமலைந்து
கூடார்மண் கொளல் குறித்தன்று,''

எனப்புறப்பொருள் வெண்பாமாலை வஞ்சித்திணையை விளக்கு வதைப்போன்று,

''வஞ்சிமண் ணசைமன் னஞ்சவடல் குறித்தல்.''

எனவும்,

''முடிமிசை உழிஞை சூடி ஒன்னார்
கொடிநுடங் காரெயில் கொளக் கருதின்று,''

எனப் புறப்பொருள் வெண்பாமாலை உழிஞைக்கு இலக்கணம் உணர்த்தியதைப் போன்று,

''உழிஞையரண் முற்றி யுரத்தினாற் கோடல்,''

எனவும்,

''செங்களத்து மறங்கருதிப்
பைந்தும்பை தலைமலைந் தன்று''

எனப் புறப்பொருள் வெண்பாமாலை தும்பைக்கு விளக்கம்காட்டிய வாறு,

''தும்பைமுன் வந்தமன் மைந்துதலை யழித்தல்,''

எனவும் வ. உ. சி. வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை ஆகிய புறத்திணைகளை விளக்கியுள்ளார்,

பாடற்றிரட்டு

இனிய செந்தமிழில் இயற்றப்பட்டுள்ள பல பாக்களின் தொகுப்பாகிய 'பாடற்றிரட்டு' என்னும் கவிதை நூல் மிகுதியான அரிய செய்திகளை மிகத் தெளிவாக விளக்குகின்றது. வ. உ. சி. குடும்பத்திற்குப் பரம்பரையாகவே "கவிராயர்" என்ற பட்டம் உண்டென்பது அனைவரும் அறிந்த செய்தியாகும். வ. உ. சி. கவிராயர் என்பதை இப்பாடல் திரட்டு உறுதிப்படுத்தியுள்ளது. பள்ளிகளின் பயனிற்கு மட்டும் பண்டிதர்கள் பெருகி வருகின்ற இக்காலத்தில் புதுமை நாகரிகமும் ஆங்கிலக் கல்வியும் நன்கு பெற்ற இவர் தொன்மைக் காலத்துப் புலவர்களைப் போன்று இன்புற்ற பொழுதும் துன்புற்ற பொழுதும் கவி பாடுவதிலேயே காலத்தைக் கழித்திருப்பது கருதத்தக்கதாகும்.

நூல் பற்றிய செய்திகள்

1915-இல் இந்நூல் வெளியிடப்பட்டது. முன்னூற்று எண்பது பாக்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. இவற்றுள் கடவுளைப் பற்றியன நூறு பாக்களாகும். ஒழுக்கம் முதலியன பற்றி உரைப்பன மற்றொரு நூறு பாக்களாகும். உறவினர்க்கும் நண்பர்களுக்கும் எழுதப்பட்ட பாடல்கள் நூற்றி எண்பது பாக்களாகும். சிறை செல்லு முன் பாடிய தொன்னூற்று ஏழு பாடல்கள் முதல் பகுதியாகவும், சிறைப்பட்டிருந்த காலத்தில் பாடிய இருநூற்று எண்பத்தி நான்கு பாடல்கள் இரண்டாம் பகுதியாகவும் இந்நூலில் அமைந்துள்ளன. முன்னூற்று ஐம்பது வெண்பாக்களும் மூன்று விருத்தங்களும் பதினைந்து கட்டளைக் கலித்துறைகளும் நானூற்று நாற்பத்து மூன்று வரிகள் கொண்ட பதினொரு நிலை மண்டில ஆசிரியப்பாக்களும் இந்நூலில் இடம் பெற்றிருப்பதைக் கருதின், பல்வகை யாப்பில் வ. உ. சி. பயிற்சி பெற்றிருந்தார் என அறிகிறோம்.

இந்நூலில் சில பாடல்கள் அறநெறியை உணர்த்துகின்றன; சில இறைநெறியை இயம்புகின்றன. தன்னிலை விளக்கப் பாடல்களாகச் சில காணப்படுகின்றன. வாழ்த்து வடிவில் அமைந்த பாடல்கள், பல்சுவை நறுக்குகளை நயமாகச் சுட்டும் பாடல்கள், தன் ஆற்றலைப் புலப்படுத்தும் பாடல்கள் ஆகியன இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

அறநெறிப் பாடல்கள்

அறநெறிப் பாடல்களின் கருத்துக்கள் மிகுதியும் மரபு வழியில் அமைந்தவை எனினும் வ. உ. சி. யின் புதிய எண்ணத்தில் மலர்ந்த கருத்துக்களும் இடையிடையே மணக்கின்றன. ஈகை பற்றி முன்னோர் குறித்த நெறியில் விளக்கினாலும் ஈதலினால் பற்றின்மை நம்மைச் சாரும் என்ற புதிய செய்தியை இவர் உணர்த்துகிறார். மண், பெண், பொன் ஆகியவை ஈதற்குரிய பொருள்கள் ஆதலால் அவற்றை ஈயும் பொழுது மூவாசையும் நம்மைப் பற்றாது விட்டு விலகும் எனக் கருதுகிறார். கீர்த்தியை நாடிக் கிளர் விலையை நல்குதல் போல் எதனை ஈயினும் எவ்விதப் பயனும் நம்மை அணுகாது என உணர்த்தும் வ. உ. சி. இன்றைய விளம்பர ஈகையை மறைமுகமாகச் சாடுகின்றார்.

அன்பு பற்றிய செய்திகள் வழிவழியாய் வரப்பெற்ற செய்திகளாயினும் இவர் வழிப் பெறும் விளக்கம் புதுமையானதாகும். சாகும் வரையிலும் நம்மை விரும்பும் தாய் தந்தையர் மேலரிய பெண்டு, பிள்ளை, சுற்றத்தினர் ஆகியோரை மட்டும் விரும்புதல் அன்புடைமையாகாது. அனைத்துயிரையும் தன்னுயிர் என்று எண்ணி நட்டலே உண்மை அன்பாகும் என்பது வ. உ. சியின் கருத்தாகும். அன்னை, தந்தை ஆதியரை ஆதரித்தல் பாசமாகும்; தேவர், ஞானியர், சில குணமுடையவர் ஆகியோரை ஆதரித்தல் பக்தியாகும்; யாவரையும் ஆதரித்தலே அன்பாகும்; அன்பு, பாசத்தையும் பக்தியையும் விட மேன்மை உடையது என எண்ணுகிறார். ஏனெனில் பாசம் மேன்மேலும் பந்தத்தையே நல்கும்' பக்தியோ அன்பின் ஒரு கூறேயாகும். எனவே, முத்தி பெற அன்பே முதன்மையாகும்.

உண்மை உயர் வீட்டினை வழங்கும் எனத் தம் முன்னோர் கூறியதை ஒத்துக் கொள்ளும் வ. உ. சி. காமம், களவாடல்; கள்ளுண்ணல் ஆகியன நற்பொருள் வளத்தை நலியச் செய்யும் முப்படைகளாகும் எனக் குறிப்பிட்டு, மெய்யுரைக்க இம் முக்கேடுகளும் நம்மை விட்டு நீங்கி நாளும் செல்வம் பெருகும் என்று உணர்த்தும் செய்தி இதுவரை பிறரால் உணர்த்தப்படாத புதுச் செய்தியாகும்.

உயிர்களைக் கொல்லுதல் மட்டும் கொலையாகாது. ஓர் உயிர்க்கு இட வேண்டிய உணவை இடாது வறுமையால் அவ்வுயிரைச் சாக விடுவோமாயின் அச்செயலும் கொலையின்

பாற்படும் என்பது வள்ளுவர் கருத்தாகும். உயிர்களை மட்டும் கொல்லுதல் கொலை என எண்ணற்க. நிழலையும் காற்றையும் தருகின்ற நல் மரங்களை அழிப்பதுவும் கொலையின் பாற்படும் என்பது வ. உ. சியின் கருத்தாகும்.

இறைநெறிப் பாடல்கள்

பொறிவாயில் மூலமாகக் காணாத மொய்ம்பால் கடவுள் இல்லையென்று சாதிப்பவர்க்குச் சரியான செய்தி ஒன்றைச் சுட்டிக் கடவுள் உண்மையை வ. உ. சி. நிலை நாட்டுகின்றார். பொறி காணா எப்பொருளும் பொய்யென்று கூறுதல் அறிவாகுமோ? பொறிகாணா ஆற்றல் மனமும் ஆன்மாவும் நம்முள் செறிவாக இருப்பதனை உணர்வது போல் பொருள்கள் தம்முள்ளும் இருப்பது மெய்ச்சத்தான இறைவனே என்று இறை உளதாகும் தன்மையை விளக்குகிறார்.

இறைவன் ஒடுங்கித் தோன்றும் ஒரு பொருளாகான், ஒடுங்குதலும் தோன்றுதலும் இறைவனின் வினைகள் எனக் கூறின் அவன் ஒடுங்குவதற்கும் தோன்றுவதற்கும் இடமும் பொழுதும் தேவையன்றோ! இடமும் பொழுதும் இறைவனை அண்டா எனக் கருதுவதே அறிவுடைமையாகும் எனக் குறிப்பதன் வாயிலாக ஆதியும் அந்தமும் இலாதவனாக இறைவனை வ. உ. சி. காட்டுகின்றார்.

ஆதியும் அந்தமும் இல்லாத அவ் இறைவனின் அருளினை நாட்டின் மேம்பாட்டிற்காகவும், பிறரின் நலத்துக்காகவும் வேண்டுகிறார்.

> "ஏமமில் லாதிவ ணின்னலே துய்த்துள வேழையனைச்
> சேமமே நல்குமென் சீருயர் நாட்டொடு சேர்த்தருளே,"

என்ற வரிகளில் வ. உ. சி. தன் நாட்டுப் பற்றினை நன்கு வெளிப்படுத்தியுள்ளார்.

> "மனமென்றும் பற்றிநிற்கு மைத்துனனோய் தீர்த்துத்
> தினமின்பம் பெற்றிருக்கச் செய்."

என நோய்வாய்ப்பட்ட மைத்துனனைக் காக்குமாறு இறைவனை வேண்டுகிறார்.

''அநுமனெனும் பேர்பெற் றநுதினமு மிராமன்
றநுவினலம் போற்றுந் தகைமை—யநுசரித்த
வல்லவனை யாட்கொண்ட மாலே,''

என மைத்துனன் நலம் பெறத் திருமாலினை வேண்டும் பொழுது இத்தகைய இதிகாசக் கதைகளையும் இடையிடையே காட்டுகின்றார்.

தன்னிலை விளக்கப்பாடல்கள்

வ. உ. சி. யாத்துள்ள இறைநெறிப் பாடல்கள், சடித வடிலப் பாடல்கள், இரங்கற் பாடல்கள், புலம்பற் பாடல்கள் ஆகியவை அவரது தன்னிலை விளக்கப் பாடல்களாக விளங்குகின்றன.

இறைநெறிப் பாடல்கள்

''சிறை நின்று நீங்காத துன்பமுறும்
பாங்கென்ன செய்தேன் பகர்.''

எனத் தாம் சிறைப்பட்டமை எவ்வகையிலும் பொருந்தாது என இறைவனிடம் வ. உ. சி. முறையிடுகிறார். தூய மனையைச் சேர்ந்திருக்கும் இன்பத்தை இன்னும் நல்காத காரணத்தைக் கடவுளிடமே வினவுகிறார். சிறை நீங்கி நாட்டினை நண்ணிட இறைவன் அருளையே நம்புகிறார்.

கடிதப்பாடல்கள்

கடிதப்பாடல்களின் வழியாக வ. உ. சியின் குடும்பநலச் சிந்தனை, அவரின் பரந்துபட்ட எண்ணம், நன்றி பாராட்டும் நல்லியல்பு, இலக்கிய இலக்கண நூல்களில் அவருக்கிருந்த ஈடுபாடு, அவருக்கு எழுந்த நெருக்கடிச் சூழ்நிலைகள் ஆகியன புலனாகின்றன.

குடும்பநலச் சிந்தனை

''ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் என்றிங்—கான்ற

புலவன் உரைத்தபடி பூரணமாக் கற்று
வலவனென வாழ்ந்திலனே மற்று.''

என வள்ளுவ நெறியில் தாம் வாழ முடியா நிலைமைக்கு வருந்துவதை வ. உ. சி. தம் தாய்க்கு எழுதிய கடிதம் விளக்குகிறது.

''நினக்குதவி செய்யாது நீயுவப்பக் கல்லா
தெனக்குதவி செய்ததந்தைக் கீயா —துனக்குதவி

ஒன்றும் புரியா துயிர்த்துணையைப் பேணாது
நன்றுபுரி யாதிருந்தேன் நான்."

என்ற பாடல் தம் குடும்பத்தாருக்குத் தாம் பயன்படாதிருக்கும் நிலைமை குறித்து அவர் நெஞ்சம் நெகிழ்வதை உணர்த்துகிறது.

"மன்னன் மனையும் மயங்குதல் உண்டெனில்
பின்னர் மயங்காரோ பேதையார்—நன்னுதால்
இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு."

எனத் தமது சிறைப் பிரிவிற்காகச் சிந்தை நோகும் தம் துணைவியைக் குறள் நெறி நின்று ஆற்றுவிக்கின்றார்.

திருமந்திரநகரில் செல்வ நனி ஈட்டி, நாளும் அறம் புரிந்த வ. உ. சி. தாம் சிறைச்சாலையில் இருந்தமையால், தம் அருமந்த பிள்ளைகள் ஒன்னார் எள்ளும்படியாக மெலிந்து வருவதை நினைந்து எழுதுகிறார். தமக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையைச் செவிமடுத்து, அறிவுச் செம்மையில் பிறழ்ந்த தம் தம்பிக்காக வருந்தி எழுதும் பொழுது, நல்லறிவுற்று இனிது வாழுமாறு தம்பியை வாழ்த்துகிறார்.

பரந்துப்பட்ட எண்ணம்

வீட்டு நலம் பேணுவதுடன் நிறைவு கொள்ளாது, வ. உ. சி நாட்டு நலம் பேணுவதிலும் நாட்டமுற்றிருந்தார். தம் சிறை வாழ்க்கை பல விதத்திலும் தம்மை இன்புறுத்துவதாகத் தம் தந்தைக்கு உணர்த்துகிறார். சிறை வாழ்க்கை பற்றிச் சிறிதும் தாம் துன்புறவில்லை எனத் தன் அன்புத் தந்தைக்கு அறிவிக்கிறார். ஆன்றாண்மை கொண்டு தந்நாட்டினை ஆளும் பேற்றைத் தாம் பெறப்போகும் உறுதியினைத் தம் தாய்க்கு உணர்த்துகிறார்.

வெஞ்சிறைப்பட்ட பொழுது, நாளும் தமிழ் நூல்களாம் கனிகளை வாங்கி, நன்குண்டு மகிழ்வதால் முதுமை நீங்கி. இளமை உற்றதாகத் தம் வாழ்க்கைத் துணைவியார்க்கு வருத்தம் வராத வாறு தம் சிறை அனுபவத்தைச் சுட்டுகின்றார், தமது வீடு, பிள்ளை, பெண்டுகளை மட்டும் கருதும் கடுகுள்ளம் கொள்ளாமல் நாட்டு நலம் நாடும் தாயுள்ளத்துடன் சிறை நாள்களை வ. உ. சி. கழித்துள்ளமை கருதத் தக்கது.

நன்றி பாராட்டல்

தம் வாழ்வின் மேம்பாட்டுக்காகக் காலத்தினால் துணை நின்றவர்களையெல்லாம் ஞாலத்தின்மாண, வ. உ. சி. பாராட்டு கின்றார்.

''நின்னையன்றி மெய்யாய தெய்வம் உண்டோ வேறு.''

எனத் தமக்கு உதவி நின்ற அறம் வளர்த்த சுந்தரம்பிள்ளையினை ஆண்டவனாகக் கருதி வழிபடுகிறார்.

தாயினும் பரிந்தூட்டிய கோ. கா. சுப்பிரமணிய முதலியாரின் குடியினர்க்குத் தாமும் தம் குடியினரும் ஏவல் புரிந்து ஒழுகுவதாக உரைக்கின்றார்.

''அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழி வந்த கேண்மை யவர்.''

என்ற குறட்பாவைத் தமது இல்லம் நீங்கிய வள்ளி நாயக சுவாமி களுக்கு எடுத்துரைத்து மீண்டும் தமது இல்லம் சாருமாறு அவரை வேண்டுகிறார்.

குற்றால புராணம், நன்னூல், தொல்காப்பியம், நிகண்டு, குறள், அகராதி ஆகியவற்றை வ. உ. சி. சிறையிலிருந்த பொழுது பயின்றமை இலக்கண இலக்கிய நூல்களில் அவர்க்கிருந்த ஈடு பாட்டினை வெளிப்படுத்துகின்றது.

நெருக்கடி அனுபவங்கள்

பழகியவர்களிடம் எதனையும் மறைக்காது கூறும் இயல்பின ரான வ. உ. சியின் வாழ்வில் பொருள் இல்லாமையினால் உண்டாகிய இடர்ப்பாடுகளை உற்ற நண்பர்க்கு அவர் எழுதிய உரிமைக் கடிதங்கள் உணர்த்துகின்றன.

''பண்டிகை என்று பகர்ந்திடும் இத்தினம்
தண்டிகை ஏறுவோய் தந்துளேன்—ஒண்டியேன்
கொண்டிவை கண்டுநீ கூறிய செய்தெனை
அண்டிநின் றாதரிப் பாய்.''

எனத் தம் நண்பர் இலக்குமணப் பிள்ளைக்கு எழுதிய கவிதைக் கடிதம் வழியாகப்பண்டிகை கொண்டாடும் அளவிற்குக் கூடப் பண மில்லாத வறுமை நிலை வ. உ. சிக்கு வந்துள்ளது என அறிகிறோம்.

பா. சி. என்னும் நண்பர்க்கு,

"பூமருவக் கண்ட புதுமையெலாம் சொன்னேன்நின்
சேமமொடு நிற்குமரர் சேர்ந்ததமர் —சேமமெலாம்
சாற்றிடுவாய் என்னுரியர் தாகமுடன் தீர்க்குநிதி
ஆற்றிடுவாய் அன்போ டவர்க்கு."

எனத் தம் குடும்பத்தினரின் வறுமையைக் குறிப்பிட்டு அவர்கட்கு அன்புடன் உதவிடுமாறு வேண்டுகிறார்.

"என்குறை என்கடன் என்மென்மைச் சொற்களை
என்பகை காண எழுதாதே."

எனத் தம் நண்பர் ப. சு. நெல்லையப்ப பிள்ளைக்குக் கவிதை வடிவில் எழுதிய கடிதம் வறுமையிலும் அவர் நடத்திய செம்மை வாழ்வினை அறிவிக்கின்றது.

இரங்கற்பாடல்கள்

மாதருக்குள் மிக்க மதியுடைய பெண்மணியாகிய அவரின் வாழ்க்கைத் துணைவி இம் மண்ணை விட்டு மறைந்த பொழுது,

"மகராசி யென்றழைக்கும் வள்ளியம்மா ளென்றன்
முகராசி யென்கண்மு னிற்க—மிகராசி
யாயெனக்கு மென்னவர்க்கு யார்க்கு நடந்து—நின்று
போயதுவா னென்னோ புகல்."

என்று பாடிய இரங்கற் பாடலும், உயிர் நண்பரான வ. சண்முகம் பிள்ளை சிவபதம் அடைந்த பொழுது,

"என்னுயிருக் கின்னுடலா யென்னுடனென் றுங்கலந்திங்
கென்னுடலை யின்னுயிரா யீங்கியக்கி—மன்னி
யிருந்தநண்ப சண்முகநீ யீங்கென்னை நீங்க
வருந்துயரெங் ஙன்புகல்வன் மற்று."

என்று வடித்துள்ள இரங்கற் பாடலும் முறையே அவர் தம் வாழ்க்கைத் துணையைப் போற்றிய பெருந்தன்மையினையும் நட்பினை நயந்து பாராட்டும் நற்பண்பினையும் புலப்படுத்து கின்றன.

புலம்பற் பாடல்கள்

வ. உ. சி.யின் நெஞ்சில் ஊற்றம் பெற்றிருந்த விடுதலை உணர் வினை அவர் பாடிய புலம்பற் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

குருவிக்குஞ்சு, நாகணவாய்ப்புள், மாடப்புறா, குயில், காகம் ஆகியவற்றை விளித்து, அவர் சிறையில் பட்ட துன்பத்தினை

அவற்றிற்கு விளக்கம் செய்துள்ளார். கட்டினை விட்ட குருவிக் குஞ்சு காட்டில், வீட்டினை விட்ட குற்றத்தால் சிறைப்பட்டுத் துன்புறும் தம்மைப் போலத் துன்புறுகின்றதோ என வருந்து கின்றார்.

நானிலத்தில் உள்ள மக்களெல்லாம் தம் சுற்றம் நண்பருடன் உண்டு உலவி மகிழ்கின்றனரா! அல்லது தம்மைப்போல் உற்றார் உறவினரை இழந்து சிறைத் துயர் அடைகின்றனரா? என்று அறிந்து கூறுமாறு நாகணவாய்ப் புள்ளை வேண்டுகிறார். தம் அருமைச் சேயும் வாழ்க்கைத் துணைவும் வறுமையுற்று வாடு கின்றனரோ என்பதனை அறிந்து வருமாறு மாடப்புறாக்களை அழைத்துக் கூறுகிறார்.

சிறையுள்ளே பட்டுச் சிறுமையுறும் தமக்குக் கூறும் செய்தி யாது? எனக் குயிலை வினவுகிறார்.

தம் தீயூழ் அழிந்து, துன்பம் நீங்கி, இன்பம் தமக்கு வருமாறு காக்கையைக் கரையுமாறு தாமும் கரைந்து பாடுகிறார்.

வாழ்த்துப் பாடல்கள்

தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையின் விழாக்களில் தலைமையேற்றுச் சிறப்புச் சேர்த்த பாண்டித்துரைத் தேவரையும் மறைமலை அடிகளையும் வ. உ. சி. வாழ்த்திப் பாடியுள்ளார்.

> ''புவியிலுள நாடெல்லாம் புக்காயின் என்றும்
> குவிநிதிகள் பல்வகைய கொண்டு—கவினுறுநல்
> ஆவளமும் மாந்தர் அமைவுமுற்று நிற்பதுநம்
> நாவலமென் னும்பழைய நாடு.''

என்றும்,

> ''ஆரியமே ஏற்றமெனும் அன்பருயர் வள்ளுவரின்
> ஓரியலே கற்றாலும் ஓதாரங்—கீரடியில்
> நாற்பொருளும் வள்ளுவர்போல் நன்குரைக்கும் நூல்ஒன்றாங்
> கேற்படநாம் கண்டதுண்டோ இன்று.''

என்றும்,

> ''இணையில்லா மெய்ப்பொருளும் இன்னிசையும் கொண்டு
> துணையில்லார் துன்புற்றார்தோற்றார்—புணையென்னக்
> கைவசத்துற் றாதரிக்கும் காழ்தமிழ்ம தச்சேய்க்குச்
> சைவசித் தாந்தம் தலை.''

என்றும் பாடியுள்ள இவ்வாழ்த்துப் பாக்கள் வழியாக அவரின் நாட்டுப்பற்று, மொழி ஆர்வம், சைவ சமய ஈடுபாடு ஆகியவற்றை அறிய வருகிறோம்.

பல்சுவைத் துண்டுப்பாடல்கள்

> ''சிற்பொருளைத் தெய்வமெனத் தேர்ந்துணரு
> மென்குழந்தாய்
> சிற்பொருளைச் சிந்தித்துச் சீருறநீகண்வளராய்''

என்ற தாலாட்டுப் பாடலைத் தம்மைந்தன் உலகநாதனுக்காக வ. உ. சி. பாடியுள்ளார்.

மனம் ஒன்றும் நாடாது, வகை நிறுத்திக் காத்து, நாளும் இன்பம் துய்த்தலே மோனமாகும் என மோனத்தைப்புதுப்பொருள் தந்து விளக்குகிறார்.

தம் மனைவியுடன் ஆழ்வார்திருநகரிலிருந்து வந்து கொண்டிருந்த வழியில் மழை பெய்ய,

> ''நீயின்றி வானே நிலைக்குமோ விவ்வுலகந்
> தாயின்றிப் பிள்ளை தழைக்குமோ—சயுஞ்
> செயலென்றுங் கொண்டோய் சிறப்புடையாட் காகப்
> பெயலின்று நீப்பாய் பெயர்ந்து''

என்ற பாடலைப் பாடி, நிற்குமாறு மழையை வேண்டுகிறார்.

வாக்குண்டாம், நான்மணிக்கடிகை, நன்னெறி, நல்வழி ஆகிய அறநூல்கள் வ. உ. சியின் நெஞ்சைத் தொட்டதாக அவரின் துண்டுப்பாடல்கள் உணர்த்துகின்றன.

தன்னாற்றலை வெளிப்படுத்தும் பாடல்கள்

தமக்குத் தரப்பட்ட ஈற்றடிகளைக் கொண்டு வ. உ. சி. ஆறு வெண்பாக்களைப் பாடியுள்ளார்.

> ''நினைத்தபடி யாவும் நிகழ்ந்துவரக் கண்டேன்
> எனைத்தெவ்வர் வெம்சிறையுள் இட்ட—தனைத்தினமும்
> பல்கால் நினைந்தும் பயன்காணேன் என்னீசன்
> நல்கானோ அஃதொழியும் நாள்.''

என்றும்,

> ''எண்ணிறந்த செல்வநிதம் சுட்டியறி யாதீந்து
> பண்ணிறந்த பாட்டுப்போல் பாழிழந்தேன்—நண்ணிக்
> கருணையெனச் சுற்றத்தார் கைதந்தார் என்மெய்
> கருணைமொழி தாராதோ காக.''

என்றும்,

''மனித அருமுயிரும் மானுடம்பும் மிக்கப்
புனிதத் தமிழ்மறையும் பொய்யா—தனிசீர்
பொருளறமும் தந்ததுபோல் பூமியினைக் காக்கும்
பெருமைதரா தோஇப் பிறப்பு.''

என்றும்,

''பன்னீர் தருமலரும் பல்சாதி நன்மலரும்
இன்னீர்மை நல்லார் இதழ்மலரும்—விண்ணீர்மை
பூணீசர் உள்மலரும் பூண்டேன்யான் பூணேனோ
மாணீசன் தாளின் மலர்.''

என்றும் வெண்பாவின் முடிவுகளான நாள், மலர், காசு, பிறப்பு என்பவற்றையே ஈற்றுச் சீர்களாக்கிக் கவிதைச் சுவையும் பொருட் சிறப்பும் விரவிய நான்கு வெண்பாக்களை வ. உ. சி. யாத்துள்ளார்,

இங்ஙனம் வ. உ. சியின் படைப்பாக அமையும் நூல்கள் நான்கும் செய்யுள் வடிவில் அமைந்துள்ளமை சிந்திப்பதற்குரியது, உரைநடையே பெரிதும் மதிக்கப்பட்ட அவரது காலச் சூழலில் தம் படைப்பு நூல்கள் அனைத்தையும் செய்யுள் வடிவில் அமைத்துப் பாட்டிலக்கியத்துறையை வளம்படச் செய்துள்ளார்.

யாப்பு வடிவங்கள் பலவற்றைப்பயன்படுத்தியுள்ளமை அவரின் யாப்பிலக்கணப் பயிற்சியின் ஆழத்தைப் புலப்படுத்துகின்றது.

நூலாக மலர்ந்த நுவலரும் பேச்சு

1927-ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட மூன்றாவது அரசியல் மாநாட்டில் வ. உ. சி. ஆற்றிய தலைமைப் பொழிவு 'அரசியல் பெருஞ் சொல்' என்னும் தலைப்பினைத் தாங்கி நூலாக மலர்ந்துள்ளது. இத்தலைமைப் பேச்சு எழுதி யாத்த நூல் ஒன்றின் அமைப்பிற்கு ஏற்ப அமைந்துள்ளது. பேச்சின் தொடக்கமே கடவுள் வாழ்த்தாகி, அதனை அடுத்து அவையடக்கமாய் வளர்கிறது. செய்ந்நன்றி மறவாமை, செய்து காட்டும் திறமை, அரசியல் நுண்மை, ஒற்றுமை நோக்கு, எதனையும் எடுத்துக்காட்டுடன் விளக்கும் போக்கு, தமிழ் இன நாட்டம் ஆகிய அவரின் அரும் பண்புகளின் வாயில் திறவுகோலாக அவ்வெழுத்துப் பொழிவு விளங்குகின்றது.

சைவ நெறியில் அழுத்தம் பெற்றிருந்தாலும் இறை வழி பாட்டிற்குத் துணையாகப் பொது நூலாம் குறளையே வ. உ. சி. பயன்படுத்தியுள்ளார்.

''குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.'

என்ற குறள் வழியாகக் கடவுள் வணக்கம் காட்டி, அடிமையில் நலிந்துள்ள நாட்டின் அடிமையை அகற்றி, வலிமைப்படுத்து வதையே தாம் செய்ய இருக்கும் குடிமைச் செயலாகக் குறிப்பிடு கின்றார்.

செய்ந்நன்றி அறிதலின் மறுவிலா மறு உருவம் வ உ. சி. எனல் மிகையாகாது.

''வினையால் வினையாக்கிக் கோடல்''

என்பது போல் இத்தலைமைப் பொழிவு வாயிலாகத் தமக்கு உதவி நின்றாரையெல்லாம் செய்ந்நன்றி உணர்வுடன் சிந்தித்துப் பார்க்கிறார்.

வ. உ சி., நாட்டுக்குத் தன்னாட்சி வழங்குவதில் தனி நாட்டம் கொண்டவர், வள்ளுவர் காட்டும் இல்லாண்மையை நாட்டாண் மையாகக் காட்டி, அதனை ஆக்கிக் கொள்ளுதலே ஒருவனுக்கு நல்லாண்மையாகும். என நயம்பட மொழிகின்றார்.

நாட்டைச் சிதைப்பதும் சீரழிப்பதும் ஒற்றுமையின்மையே என உணர்ந்த வ. உ. சி. இந்து—முகமதியரிடையே முரண்பாடு எழுவதற்குரிய நிலைகளை எல்லாம் நீள நினைந்து, அம் முரண் பாட்டை முடிவுறச் செய்யும் வழிவகைகளையும் இவ்வெழுத்து உரை நூலில் வகுத்துக் காட்டுகின்றார்.

தமிழ்நாடு, தமிழ்மொழி ஆகியவற்றின் தகுதியினைத் தக்க வாறு வ. உ. சி. நூலாய் மலர்ந்துள்ள அவர்தம் உரையில் காட்டி யுள்ளார். தமிழ்நாடு மிகப் பரந்த பரப்புடையது. சேர, சோழ, பாண்டியர் எனப்படும் முப் பேரரசர்களும் பல சிற்றரசர்களும் கூடி ஆண்டு வந்த பெருமைக்குரிய பெரிய நாடு தமிழ் நாடாகும். தமிழ்மொழி மிகத் தொன்மையானது. கன்னடம், துளுவம், தெலுங்கு, மலையாளம் முதலிய பல மொழிகளுக்குத் தாய் மொழி தமிழேயாகும். ஒப்பிலாத் தொன்னூல் எண்ணிறந்தவற்றை இம் மொழி உடையதாகும். பேச, எழுத, பாட ஆகிய மூன்றிற்கும் இம் மொழி மிகப் பொருத்தமானதாகும் என்றெல்லாம் நாட்டுப்

பெருமையினையும் மொழிப் பெருமையினையும் மொழியும் இவர் இதுவரையில் தமிழ்நாட்டில் தமிழுக்கு எனப் பல்கலைக்கழகம் அமைக்கப்படவில்லை எனவும் வருந்துகின்றார். உள நோயைத் தீர்க்கத் தமிழ்ப் பல்கலைக் கழகம் காணத் துடிக்கும் இவர், உடல் நோயைப் போக்கச் சித்தமுறை மருத்துவப் பக்குவமே சிறந்த தமிழ்ப் பக்குவமாகும் என எடுத்துக்காட்டுகின்றார். தமிழ்ச்சித்த மருத்துவமனைகளைக் கிராமங்களில் தொடங்குவதற்குரிய முயற்சியில் ஈடுபட வேண்டும் என வ. உ. சி. அறிவுறுத்துகின்றார். சித்த மருத்துவ நூல்களெல்லாம் தமிழில் பாக்களின் வடிவத்தில் அமைந்து கிடப்பதால் அவற்றை உரைநடையில் ஆக்க வேண்டிய கடமையினையும் வெளிப்படுத்தியுள்ளார்.

முன்னோர் மொழியைப் பொன் போல் போற்றுதல் என்பதற்கு ஏற்ப நூலில் இவர் கையாண்டுள்ள மேற்கோள்கள் இவரின் இலக்கிய நாட்டத்தைப் புலனாக்கியுள்ளன. குறளில் முழுமையாகத் தோய்ந்த உள்ளம் இவர் உள்ளம். ஆதலால் குறளின் ஆட்சி, நூல் எல்லாம் விரவி உள்ளது.

நூலின் தொடக்கமே,

> ''குடிசெய்வல் என்னும் ஒருவருக்குத் தெய்வம்
> மடிதற்றுத் தான்முந் துறும்.''

என்ற குறளாய் மலர்ந்துள்ளது.

செய்ந்நன்றி அறிதல் என்னும் தலைப்பினை விளக்கப் போகும் முன்னர்,

> ''எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
> விழுமம் துடைத்தவர் நட்பு.''

என்ற குறளைத் தொடங்கியே தாம் எடுத்துக் கொண்ட தலைப்பினை விளக்கி உள்ளார். இங்ஙனம் குறளைத் தொடங்கியே ஒவ்வொரு தலைப்பையும் வ. உ. சி. தொட்டுப் பார்த்து உள்ளார்.

> ''ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
> தாக்கற்குப் பேருந் தகைத்து.''

போன்ற குறட்பாக்களையும்,

> ''பணியுமாம் என்றும் பெருமை''
> ''இரப்பான் வெகுளாமை வேண்டும்''

வ—5

போன்ற குறள் தொடர்களையும் இடையில் தம் கருத்திற்கு வன்மை சேர்க்கப் பயன்படுத்தியுள்ளார்.

"தன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—தான்தன்னை
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்."

போன்ற நாலடியாரின் பாக்கள் இடையிடையே இடம் பெற்றுள்ளன.

"இரண்டுபட்டால் உண்டு வீழ்வு
"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு."

எனப்படும் பாரதியின் வரிகளும்,

"மதியாதார் வாசல் வழி மிதிக்க வேண்டா."

எனப்படும் ஔவை மொழியும் ஆங்காங்கே மேற்கோள்களாக்கப் பட்டிருக்கின்றன. இம் மேற்கோள்களெல்லாம், வ. உ. சியின் விரிந்த நூற்பயிற்சியை விளக்கம் செய்கின்றன.

"பழம் நழுவிப் பாலில் விழுந்தது"
"ஆகாயக் கோட்டை கட்டல்"

போன்ற பழமொழிகளும் "பஞ்ச பாண்டவர்களை யான் அறியேனா? கட்டில்கால் போல் மூன்று பேர் என்று சொல்லி இரண்டு விரலைக் காட்டிப் பூமியில் ஒன்று எழுதி, அதனை அழித்து விட்ட கதை" எனப்படும் வழக்குக் கதையும் நூலில் மணக்கின்றன. வ. உ. சியின் அரசியல் சண்ட மாருதப் பேச்சி லெல்லாம் இடையிடையே தமிழ் மாருதமும் வீசித் தமிழ் நெஞ்சங்களைக் குளிர்விக்கின்றது.

கவிதைப் படைப்பின் சிறப்புக் கூறுகள்

கவிதை வகைகள்

அட்சன் என்னும் திறனாய்வாளரின் கருத்துப்படி, கவிதை தற்சார்புக் கவிதை என்றும் தற்சாராக் கவிதை என்றும் இரு வகைப்படும். தன் முகமாகவே எழுந்த தன் சொந்த அனுபவத்தின் ஒரு மாபெரும் தூண்டுதலால் உந்தப்பட்டு, உலகத்திற்குத் தன் சொந்த அனுபவத்தின் வெளியீடாகவே கவிதையைப் படைத்து வழங்கின் அது தற்சார்புக் கவிதை எனப்படும். தன் முகமாக அன்றித் தனக்கு வெளியே இருப்பதாகிய புற உலகத்தின் செயலாலும் உணர்வாலும் தீவிரமாக உந்தப்பெற்று, அவற்றோடு இரண்டறக் கலந்து, அவை வாயிலாகத் தான் கண்டவற்றைத் தன் தனித்தன்மை கவிதையின்கண் முனைந்து நில்லாதவாறு பாட்டைப் படைத்து வழங்கின் அப்பாட்டிற்குத் தற்சாராக் கவிதை என்று பெயர்.

வ.உ.சி. இவ்விருவகைக் கவிதை அமைப்பிலும் தம் கவிதைகளைப் படைத்துள்ளார். இவர் இயற்றிய ‘மெய்யறிவும்’ ‘மெய்யறமும்’ முழுமையும் தற்சாரா நிலையில் அமைந்துள்ள கவிதைகளாகும். இக்கவிதைகளில் வ.உ.சியின் தனித்தன்மை கலவாத புற உலகத்தின் செயற்பாடுகள் விரிவாக விளக்கம் பெற்றுள்ளன. இவர் படைத்துள்ள ‘தன் வரலாற்றில்’ இரு வகைக் கவிதைக் கூறுகளும் இடம் பெற்றுள்ளன. எனினும் அவரின் வாழ்க்கை வரலாற்றுத் தொடர்பான நூலாதலால் மிகப் பெரும்பான்மையான செய்திகள் தற்சார்புக் கவிதையமைப்பில் விளங்குகின்றன. ஓரோர் இடங்களில் தற்சார்பற்ற கவிதைச் செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

இவர் யாத்த தனிப்பாடல் திரட்டிலும் இருவகைக் கவிதைக் கூறுகள் இடம் பெற்றுள்ளன. ஈகை, அன்பு. உண்மை முதலிய ஒழுக்கப் பாக்களும், பதிபசுச் செயல்கள், கடவுள் உண்மை, கடவுளுக்குக் காவல் தொழிலை அளித்தல் முதலிய ஞானப் பாக்களும் தற்சாராக் கவிதைத் தன்மையைப் பெற்றுள்ளன. தம் சுற்றத்தார்களுக்கும் நண்பர்களுக்கும் வ.உ.சி. எழுதிய பாக்கள் தற்சார்புத் தன்மை பெற்று விளங்குகின்றன. தற்சார்புக் கவிதைச் செய்திகளில் பாடும் பொருளுடன் வ.உ.சி. தம்மையும் காட்டிக் கொள்கிறார். தற்சாராக் கவிதையில் பாடப்படும் பொருளை மட்டுமே காட்டியுள்ளார்.

கவிதையும் யாப்பு வடிவமும்

கவிதையின் சுவைக்கும் பெரு வாழ்விற்கும் உரிய பல்வேறு காரணங்களுள் அதன் ஒலி இயைபும் யாப்பு அமைப்பும் ஒன்றாகும். இச்சீரான ஒலி நயமாகிய யாப்பு நல்ல கவிதைக்கு ஓர் இன்றியமை யாத இலக்கணமாக இருக்கின்றது. சிலர் யாப்பு இல்லாமலேயே கவிதை எழுத முற்பட்டால் பிழை இல்லை என்று கருதுகின்றனர். ஆயின், இலக்கிய உலகில் இதுகாறும் படைக்கப்பட்டுள்ள மிகச் சிறந்த இலக்கியப் படைப்புக்களை ஆராய்ந்து பார்த்தால் ஓர் உண்மை புலனாகும். அவற்றுள் எல்லாம் ஒன்று யாப்பு முறை சிறந்திருக்கும் அல்லது ஒலி இயைபின் இனிமை நிறைந்திருக்கும். வ.உ.சி. படைத்துள்ள கவிதைகளில் யாப்பு வடிவமும் ஒலி இயைபின் இனிமையும் இணைந்தே அமைந்துள்ளன. கவிதையை அழகுபடுத்தத் துணைபுரிவது அக்கவிதையின் உருவமாகும். உருவம் என்பது கவிஞன் பாட்டை வரையும் முறையாகும். யாப்பு என்பதும் நடை என்பதும் வடிவம் என்பதும் இதனைத் தான்.

யாப்பு வடிவ வளர்ச்சி

சங்க காலத்தில் எழுந்த கலித்தொகையில் வெண்கலிப்பா, கலிவெண்பா ஆகியனவும், பரிபாடலில் பரிபாடல்களும், பட்டினப் பாலையில் ஒரு சில இடங்களில் வஞ்சிப்பாவும் இடம் பெற்றிருப்பினும் சங்க காலத்தில் எங்கும் எதிலும் ஆசிரியப்பாவின் செல்வாக்கே காணக்கிடக்கின்றது. சங்கம் மருவிய காலத்தில் வெண்பா தலை நிமிர்ந்து நின்றது. சிலப்பதிகாரக் காலத்தில் விருத்த யாப்பு மென்மையாகத் தலை தூக்கியது. பக்தி இலக்கியக் காலத்தில் விருத்த யாப்பு மிகப் போற்றப்பட்டது. திருத்தக்கத் தேவர் தொடக்கி வைத்த விருத்த வடிவம் கம்பன் காலத்தில்

கனிந்து முழுமை பெற்றது. கம்பனுக்குப் பின் சேக்கிழார், பரஞ்சோதி, வில்லிபுத்தூரார் ஆகியோரும் விருத்த யாப்பினை மிகப் பொருத்தமாய் வளர்த்தனர். சிற்றிலக்கியங்கள் புதிய புதிய உருவச் சோதனைகளில் இறங்கின. அருணகிரியாரின் சந்தக் கவிதைகள், அருணாசலக் கவிராயர், கோபாலகிருட்டிண பாரதியார் ஆகியோரின் கீர்த்தனை உருவங்கள், அண்ணாமலை யாரின் காவடிச் சிந்து போன்ற புதிய யாப்பு வடிவங்களும் தோன்றின. பிற்காலக் கவிஞர்கள் சங்கப் பாடல்களின் உருவ எல்லைக்குள்ளேயே தங்கள் குதிரையை ஓட்டவில்லை. தங்கள் கற்பனைத்திறன், உணர்ச்சி அனுபவத்திற்கு ஏற்பப் புதுப்புது உருவங்களைக் கையாண்டார்கள்.

வ.உ.சியின் யாப்புப் பயிற்சி

வ.உ.சி. கையாண்டுள்ள யாப்பமைப்பில் பாவகைகளும் இடம் பெற்றுள்ளன; பாவினங்களும் இணைந்துள்ளன. தாம் சொல்ல வரும் உணர்வுக்குத் தகப் பொருந்தும் யாப்பு வடிவத்தை வ.உ.சி. பயன்படுத்தியுள்ளார். 'தன் வரலாற்றுச் செய்திகள்' ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை முழுமையாகப் படைப்பதால் அதற்குத் தக்க வடிவம் தொடர்நிலைச் செய்யுளே என்று கருதிய வ.உ.சி. தம் வரலாறு கூறும் 'தன் வரலாற்று நூலை' ஆசிரியப் பாவில் அமைத்துள்ளார். 'மெய்யறமும்' 'மெய்யறிவும்' அறம் உணர்த்தும் நூல்களாதலால் அறத்தை வெளிப்படுத்த வெண் பாவைப் பயன்படுத்திய முன்னைய அறநூல்களைப் போன்றே வ.உ.சியும் இவ்விரு நூல்களையும் வெண்பா யாப்பில் அமைத் துள்ளார். பாடற்றிரட்டில் பா வகைகளும் பாவினங்களும் இவரின் யாப்பு முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. வெண்பா, ஆசிரியப்பா எனப்படும் பா வகைகளும் விருத்தங்கள், கட்டளைக் கலித்துறைகள் எனப்படும் பாவினங்களும் வ.உ.சியின் யாப்புப் பயன்பாட்டைப் பெற்றுள்ளன. 'வெண்பா புலவர்க்குப் புலி' என்ற மிரட்டல் பழங்கூற்றை விரட்டும் நிலையில் வெண்பாவை மிக எளிமையாகப் பாடியுள்ளார். இவர் கையாண்டுள்ள யாப்பு வடிவங்களில் வெண்பா வடிவமே முதன்மை பெற்றுள்ளது என உணர்கின்றபொழுது வெண்பா யாப்பில் கைதேர்ந்தவராக விளங்கியுள்ளார் என்பதனை அறிய முடிகின்றது. சுருங்கக் கூறின் வ.உ.சி. படைத்துள்ள கவிதைகளில் ஓசை, ஒழுங்குபட்ட வடிவம், உள்ளத்தைச் சிலிர்க்க வைக்கும் கற்பனைகள், சிந்தனைகள் ஆகியன சிறப்புற இலங்குகின்றன.

கவிதையின் செயற்பாடுகள்

'கவிதை' என்பது யாது என்பதை விடக் கவிதை என்ன செய்கின்றது எனச் சொல்லுவதே எளியதாகும். கவிதை என்ன என்பதை நாம் அறியாமல் இருக்கலாம். ஆயின் அது ஏதோ சில செயல்களை நம்மிடத்தே நமக்காகச் செய்கின்றது. கவிதையின் பொதுவான செயற்பாடுகள் வ.உ.சியின் கவிதைகளில் பொருந்தி யுள்ளமையைக் காட்டுதல் மிகப் பொருத்தமாகும். கவிதை கீழ்க் காணும் பல செயல்களைச் செய்கின்றது எனலாம்.

உணர்ச்சிகளின் ஊற்று

கவிதை உணர்ச்சிகளை ஒலி நயமும் இசை நயமும் எழ வெளிப் படுத்துகின்றது. நகை, அழுகை, இழிவு, மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை முதலான உணர்ச்சிகளைக் கவிதை இவ்வகையில் வெளிப்படுத்துகின்றது. வ.உ.சியின் கவிதைகளிலும் ஒலி நயம், இசை நயம் இணையுமாறு உணர்ச்சிகள் வெளிப் படுத்தப்பட்டுள்ளன. ஓசை நயம் சிறந்து விளங்கும் சில வரிகளைக் காட்டுவோம்;

"வல்லவை தன்னுள் வல்லவை சேரான்
நல்லவை தன்னுள் நல்லவை சொல்வான்"

"அடிப்பன், மிதிப்பன், யானுடன் ஒட்டம் பிடிப்பன்"

"நினைந்தேன் துறவினை நீக்கினேன் சிகையினை
புனைந்தேன் கௌபீனம் பொள்ளென நடந்தேன்"

"பாலர் மீள்தினம் பாரும் மீள்தினம்
சீலர் யாவரும் சேர்வோம் அத்தினம்"

"நின்றான், பார்த்தான், நினைந்தான், போயினான்".

"விள்ளடா உன்னூர் விளம்படா உன் குலம்"

என இவரது 'தன் வரலாற்று நூலில்' இடம் பெற்றுள்ள பாடல் வரிகள் ஓசை நயம் பெற்றுள்ளமை பாராட்டுதற்குரியது.

"மறனெல்லாம் ஈட்டி வலனெல்லாம் போக்கி
அறனெல்லாந் தேய்க்கும் அகம்"

என 'மெய்யறிவு' நூலில் இடம் பெற்றுள்ள இவ்வரிகள் எழுப்பும் ஓசை இன்னோசையாகும். இங்ஙனம் ஓசை நயம் சிறந்த வரிகளை இவர் கவிதைகளில் பரக்கக் காணலாம்.

சுவைக் கற்பனைச் சுடர்

கவிதை யாதானும் ஒரு நிகழ்ச்சியைக் கற்பனைச் சுவைபடக் கதை போல விளக்கும். வ.உ. சியின் கவிதைகளில் இத்தகைய சுவைக் கற்பனைகள் பல சுடர் விடுகின்றன. எனினும் ஒன்றைச் சான்றாக்கி விளக்குவாம் :

நோய்வாய்ப்பட்ட தம் மைந்தனுக்கு மருந்து கொடுக்குமாறு தம் மனைவியார் இவரை அடிக்கடித் தூண்டிய பொழுது கடவுளை வினவிப் பாடிய பாடலும் கடவுள் விடையாகச் சொல்லியதாகக் கற்பிக்கப்பட்ட பாடலும் இவர்தம் கற்பனைத் திறனை மிக அற்புதமாய்க் காட்டுகின்றன.

''கடவுளரே நுங்கருணை காட்டாது நின்றாற்
நிடமுடனாம் வாழ்வதெங்ஙன் செப்பீர்-மட மனையா
ளன்புகொண்ட புத்திரனுக் காமவிழ்த நல்கவென்று
துன்புறுத்து கின்றா டொழுது''

எனக் கடவுளை வ.உ. சி. வினவ, அதற்கு விடையாக,

''அன்புடைய மைந்தா வறியாது சொற்றனைநீ
துன்பின்பு நல்குவது தொல்கரும-மென்பது மெய்
யானாலுந் தொன்னூ லறைந்தபடி நோய்க்கவிழ்த
நானாகி னுங்கொள்ள வன்று.''

எனக் கடவுள் பாடியதாக வ.உ.சி. கற்பித்துப் பாடியுள்ள திறன் இவரின் கற்பனைச் செழுமைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

புதிய சொல்லாட்சிப் பெட்டகம்

கவிதைகள் புதிய சொற்கள், சொற்றொடர்கள் ஆகியவற்றை அறிமுகம் செய்யும் களங்களாகும். இவ்வடிப்படையில் சிந்திப்பின் வ.உ. சி. கவிதைகளில் இடம் பெற்றுள்ள எண்ணற்ற புதிய சொற்களாகிய சொல்லாட்சியை உணர முடியும் :

“சித்தப் படுத்தித் தினமும் சென்று
பிரசங்க மாரி பெய்தனன் நஞ்சிவம்''

''பார்த்த வுடனே பயணப் பட்டு''

எனச் சித்தம், பயணம் ஆகிய பெயர்ச் சொற்கள் வினைச் சொற்களின் பயனைத் தந்துள்ளன.

'' 'சீவில்' 'கிரிமினல்' என்றே செப்பிடும்
தாவா வழக்கும் தண்டமும்''

என்ற வரிகளில் சிவில், கிரிமினல் ஆகிய ஆங்கிலச் சொற்கள் தாவா வழக்கு, தண்டம் என அவற்றிற்கு ஈடான தமிழ்ச் சொற்களைப் பெற்றுள்ளன.

> ''சேர்த்தி என்னுயிர் சீக்கிரம் ''என்றான்''
>
> ':நடங்கள்' என்றனர். நானுடன் விஞ்சுவை''
>
> ''போலீஸார் வந்தெனைப் 'போவமா' என்றனர்''
>
> ''இப்பம் இதற்கெனக் கிஷ்டமிலை என்றேன்''

என்ற வரிகளில் சீக்கிரம் (விரைவு), நடங்கள் (நடந்திடுவீர்), போவமா (போவோமா), இப்பம் (இப்பொழுது) எனப்படும் வழக்குச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

> ''அத்தைச் செய்தபின் அவர்தினம் கூடி
> எத்தைச் செய்தியாம் இவரை அழிப்பேம்''

என்ற வரிகளில் அத்தை, எத்தை எனப்படும் ஆன்மீகச் சொற்கள் ஆட்சி செய்கின்றன.

> ''தடிகள் கைக்கொண்ட தடியர்கள்''
>
> ''அடுத்த ஞாயிறில் அறைந்த மூவரும்
> அடுத்தனர் என்னறை அனைத்தும் கூறினர்''

என்ற வரிகளில் தடி, அடுத்தல் என்ற சொற்களில் நிகழ்த்தப் பட்டுள்ள சொல்லாடல் சுவையூட்டுவதாய் அமைந்துள்ளது. இத்தகைய புதிய சொற்கள், சொற்றொடர்கள், சொல்லாடல் ஆகியன இவர்தம் கவிதை நூல்களில் பல்லிடங்களில் பரவிக்கிடக் கின்றன.

வெளிப்புறத் தோற்ற விந்தைக்கு விளக்கம்

உலகின் வெளிப்புறத் தோற்றங்களுக்குள் சூழ்ந்து கிடக்கும் விளக்க முடியாத விந்தைச் செய்திகளைக் கவிதை வெளிப்படுத்திக் காட்டும். வ.உ.சியும் தம் கவிதையில் இவ்வித்தையை நிகழ்த்திக் காட்டியுள்ளார். கானல் நீர், கயிறு ஆகிய வெளிப்புறத் தோற்றப் பொருள்களின் வாயிலாக விந்தைச் செய்தி ஒன்றினை வ.உ.சி. புலப்படுத்தியுள்ளார். வேட்கை இல்லாதவர் கானலை நீராகக் கண்டாலும் தொலைவில் சென்று துன்பமுறார். அது போல அகங்காரங்களில்லாது இவ்வுலகத்தில் வாழ்கின்றவர் தீய செயலைச் செய்யார் என்பது வ.உ.சியின் கருத்தாகும். இக் கருத்தினை விளக்கச் சிவஞானபோதம் குறிக்கும் பேய்த்தேரினை

யும் (கானல் நீர்) சிவஞான சித்தியார் பரபக்கம் பயன்படுத்தி யிருக்கும் கயிற்றில் அரவினையும் உவமையாக்கிக் காட்டி வ.உ.சி. தம் கருத்தை விளக்கியுள்ளார். இவ்வுவமைகளை வ.உ.சி. மூன்று பாக்களில் மூன்று வெவ்வேறு நிலைகளில் பிரித்துக் காட்டியிருப்பது அவரது ஆழமான புலமையினை அடையாளம் காட்டுகிறது :

''கானலினீர் போலுங் கயிற்றிலராப் போலுமெய்யி
லானதுல கென்றிங் கறைவருல-கானத்து
கானல் கயிறடுக்கக் காணல்போ லவ்விரண்டு
ஞானமடுக் கக்காணு நன்கு.''

''கானல் கயிறிரண்டுங் காணுங்கா னீரரவு
போனபடி மெய்காணப் போமுலகு-கானல்
கயிறுண்மை சோரவவை காணுமுல கெய்து
மெயினுண்மை சோர விரைந்து.''

''கானலினீர் காணக் கயிற்றிலராக் காணச்சேண்
போனவரு ரஞ்சுமஞர் போந்தசெயல்-மான
வுலகினைக்கா ணுந்தோறு முன்னரிய துன்ப
மிலகிமிகுங் காண்பா யினிது.'

கானல் ஒளியினது தொடர்பால் நீர்போலத் தோன்றும். கயிறு இருளினது தொடர்பால் அரவு போலத் தொன்றும். மெய்ப்பொருள் பொறிகளின் தொடர்பால் உலகம் போலத் தோன்றும். நெருங்கினால் உண்மை புலப்படும் என்ற கருத்துப் புலனாகுமாறு முதற் பாடலிலும் நீராகத் தோன்றியது கானல் என்று உணரும் போது நீர்த் தோற்றம் நீங்கி விடுதல் போலவும் அரவாகத் தோன்றியது கயிறு என்று உணரும் போது அரவுத் தோற்றம் அகலுதல் போலவும் உலகமாகத் தோன்றிய தோற்றத்தை மெய்ப்பொருள் என்று உணரும் போது உலகத் தோற்றம் நீங்கிவிடும் என்று அதே உவமைப் பொருள்களை அடுத்த பாடலில் வேறு முறையிலும், கானலில் நீரைக்காணச் சேண் போன அஞரும் கயிற்றில் அராவைக் காண அஞ்சும் அஞரும் போந்த செயலை மான, உலகினைக் காணும் தோறும் உன்னரிய துன்பம் இலகி மிகும் என்று அதே உவமைப் பொருள்களை மூன்றாம் பாடலில் பிறிதொரு பொருளிலும் வ.உ.சி. உவமை யாகக் காட்டியுள்ளமை கருதத்தக்கது.

ஏற்றமிலாச் செய்தியையும் எழிலாக்குதல்

சாதாரணச் செய்திகளையும் எழில்படக் காட்டுதல் கவிதை யின் செயற்பாடுகளுள் ஒன்றாகும். வ.உ.சியும் தம் கவிதையில்

சாதாரணச் செய்தி ஒன்றைத் தம் கவியாற்றலால் சாரமுள்ள செய்தியாக்கிக் காட்டியுள்ளார். துயிலும் பொழுது எதிர்பாரா நிலையில் தேள் கொட்டுதலும் கொட்டப்பட்டோர் அழுகையைக் கொட்டுதலும் மிக இயல்புச் செய்திகளாகும். இச் செய்தியைச் செந்தமிழ்த் தேனில் குழைத்து வ.உ.சி. படைத்துள்ளார். ஓரிரவில் ஓரிடத்தில் வ.உ.சியும் அவர்தம் துணைவியாரும் ஒன்றாய் உறங்குகையில் தேள் ஒன்று இருவரையும் நன்றாகக் கொட்டியது. வாழ்க்கைத் துணைகளின் பங்கு இன்பத்தில் மட்டும் தானா? துன்பத்திலும் அவர்களின் பங்கு தொடருமல்லவா? தான் கொட்டப்பட்டதனால் ஆன துன்பத்திற்காக வருந்தாமல் தன் துணைவர் கொட்டப்பட்டமைக்குத் தம் துணைவியார் மிக வருந்தினார் என வ.உ.சி. கூறுமிடத்துத் தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடியாக இவரின் துணைவியார் விளங்கியமையை அறியலாம். இந்நிகழ்வினைப் பின்வரும் பாடல்கள் மிகச் சிறப்புடன் உணர்த்துகின்றன :

"ஓரிரவி லோரிடத்தி லொன்றா யுறங்குகையி
னாரியையு மென்னையுமே நன்றாகக்-கூரியதோர்
செந்தேள் கொடுக்கதனாற் சீறியே கொட்டிற்றா
லெந்தேவா வெம்மையா வென்று.
இருவருமே சத்தமிட்டோ மேந்திழைதா னோவோ
பெருவருத்த நேர்ந்ததின்று பேதை-யொருத்தியையே
கொட்டிற்றா மற்றென் கொழுநனையும் கொட்டிற்றென்
றெட்டிவீழ்ந் தேங்கி யெழுந்து
என்னவரை யென்னுயிரை யென்னுடைநல் லன்பரைமற்
றென்னவிதங் கொட்டிற்றோ வென்செய்வே-னென்னத்
தியங்கினாள் தேம்பினாள் செய்தவெலா மெண்ணி
மயங்குகின்ற தென்றன் மனம்,"

இங்ஙனம் தேள் கொட்டுதலாகிய மிக இயல்பு நிகழ்வு கூட வ.உ.சியின் கவிதையில் தேன் சொட்டாய் இனிக்கின்றது.

வார்த்தைகளின் இந்திரசாலம்

கவிதை தக்க வார்த்தைகளின் வாயிலாக இந்திர நற்சால வித்தை ஒன்றை விளைவித்துக் காட்டும் தன்மை வாய்ந்ததாகும். வ.உ.சி. அடைபட்டிருந்ததோ வெஞ்சிறையாகும். அவ்வெஞ் சிறை கூட அவர் பயன்படுத்தியுள்ள வார்த்தைகளின் இந்திர சாலத்தினால் விண்ணகமாய்க் காட்சியளிக்கின்றது :

"கண்ணனூர்ச் சிறையினை நண்ணினேம் மாலையில்
கோரன் டைன்பிளாக் கோரமோர் அரங்குதான்
அளிக்கப் பட்டதென் வசிப்பிற் காக
அந்த பிளாக்கின் அழகெஜ் ஜெயிலின்
எந்த பிளாக்கிலும் இல்லையென்றறையலாம்,
நடுவில் தோட்டம்; நான்கு பக்கமும்
தொடுமரங் கொவ்வொரு டஜனும்; அவைமுன்
நன்னெடு விராந்தா நான்கும் பின்புறம்
நாலு பக்கமும் காலி நிலமும்
மூலை யொன்றில்நீர் மொள்ளும் கிணறும்.
மூலைமற்றொன்றில் மொய்ம்பார் வழியும்,
காலிநிலம் ஒன்றில் கக்குஸ்கள் பலவும்,
வேலைசெய் கைதிக்கு வேம்பின் நிழலும்,
நடுத்தோட் டத்தில் வடுவிலாக் குரோட்டன்
செடிகளும் நன்மணம் தேனோடு வீசும்
முல்லை பிச்சி மல்லிகை ரோஜா
அல்லும் பகலும் அலரும் செடிகளும்
நிறைந்திருந் தனகாண், நிலவுல கத்திலே
சுவர்க்கம் இதுவெனச் சொல்லும் படியே."

வாட்டும், வருத்தும் தன்மையதான சிறைச்சாலை, துன்பத்தின் நிழல் படியாத—படராத துறக்கமாக வ.உ.சிக்குத் தென்படுகின்றதாம். இறந்த பின் பெற வேண்டிய துறக்கத்தை வாழும் மண்ணிலேயே தாம் பெற்று விட்டதாகக் கருதும் நிலையில் அவரின் கவிதை வார்த்தைகள் இந்திர நற்சால வித்தையை நிகழ்த்திக் காட்டியுள்ளன.

சமுதாயத்தின் பயன்பாட்டுச் சிந்தனை

சமுதாயச் செம்மைக்குப் பயன்படும் நற்சிந்தனைகளை எழுப்புவதும் கவிதையின் தலையாய கடனாகும். சமுதாயச் சீர்மையை—நேர்மையை நிலை நிறுத்துவதே கவிதையின் முடிந்த பயனுமாகும். வ.உ.சியின் பாடல்கள் பல சமுதாய மேம்பாட்டிற்குரிய சிந்தனைகளைத் தாங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிறப்பெல்லாம் நற்பிறப்பல்ல. வாழ்ந்தாரெல்லாம் வாழ்ந்தார் எனக் கருதப்படார். ஒரு சிலரே நற்பிறப்பைப் பெற்றவர்கள் ஆகின்றனர். எப்பிறப்பு நற்பிறப்பு ஆகும் என வினவுவார்க்குக் கீழ்வரும் வ.உ.சியின் பாடல் விடையிறுக்கின்றது :

"உண்டிருக்க நல்லன்ன மூரினுள்ளே யோர்வீடு
கண்டிருக்க நன்மக்கள் காதலிக்கப்—பெண்டொருத்தி
கற்றுணர வோர்தோழன் காக்கவிறை நோன்புடையோன்
பெற்றபிறப் பேநற் பிறப்பு."

படித்தவர்களெல்லாம் பண்புடையராய் அமைவதில்லை; அறிவுடையராகவும் நடப்பதில்லை. எனவே தான் கல்வியுடைமையை அறிவு உடைமையினின்றும் வ.உ.சி, பிரித்துக் காட்டியுள்ளார். அறிவுடையராய் அமைவதற்கும் பண்புடையராகப் பழகுவதற்கும் கல்வி, துணைக்காரணமேயன்றி முதன்மைக் காரணம் ஆகாது. எனவே தான் படித்ததனால் ஆய பயன் என்னவென்று கேட்பார்க்கு வ.உ.சியின் கீழ்வரும் பாடல் தக்க விடை தருகிறது :

"ஆன்றோர்தங் கேண்மை யநுதினஞ்செய் சற்கருமஞ்
சான்றோர்தந் தூயகுணஞ் சார்ந்தெங்கு—மான்ற
படித்தா யிருக்கும் பரமபொருளைப் போற்றல்
படித்ததனா லாய பயன்"

உலக மாந்தர்களின் துன்பத்திற்கெல்லாம் அடிப்படைக் காரணமாய் அமைவது பந்தபாசம். பந்தபாசம் என்னும் வலையில் சிக்கிய உயிர்கள் துடிக்கின்றன. உயிர்களிடத்தில் பற்று இருக்கலாமே தவிர பந்தபாசத்தை வளர்த்தல் துன்பத்தைக் கூவி அழைத்தற்கு ஒப்பாகும். இப்பந்தபாசம் நம்மை விட்டுப் பறந்திட உதவும் வழியினை வ.உ.சியிடம் கேட்போம் :

"வானிலுள தேவர்கள் மண்ணிலுள மாந்தர்கள்
கானிலுள மாபறவை கல்லெல்லாந்—தானெனவே
சந்ததமுங் கொண்டு தனக்கயலாக் காண்கிலையேற்
பந்தமெலாம் போகும் பறந்து."

உலகில் எங்கு நோக்கினும் சூது, சூழ்ச்சி, தீது, வாது, போட்டி, பொறாமை, காழ்ப்பு, கடுமை காணப்படுகின்றன. காரணமென்ன? அன்பின்மையே காரணமாகும். உலக நாடுகளிடையே அமைதியின்மை நிலவுவதற்குரிய காரணத்தை எண்ணிப் பார்ப்பார்க்கு ஓர் உண்மை புலப்படும். இன்றைய உலகத் தலைவர்களின் மூளைகள் மோதிக் கொள்கின்றனவே தவிர இதயங்கள் ஒன்று படுவதில்லை. இதயத்தில் அன்பு ஊற்று சுரக்குமாயின் போர் என்னும் பொல்லா அரக்கன் உலகை நெருங்கான். அன்பு அறத்திற்கு மட்டும் துணையன்று; மறத்திற்கும் அஃதே துணை என்பது

வள்ளுவரின் கருத்தாகும். வள்ளுவர் சிந்தனையை வாழ்நாளி லெல்லாம் தாங்கி வாழ்ந்த வ. உ. சி. அன்பைப் பின்வருமாறு விளக்குகிறார் :

''பொருள்சேரச் செய்வதறம் பொய்யாநல் லன்பே
யருள்சேரச் செய்வதுமெய் யன்பே—மருள்சேர்க்குந்
துன்பமிலா முத்திக்குந் தூயவன்பே நன்முதலா
மன்பிலா னென்மனித னாம்.''

சமுதாயம் சீர்மைப்பட வேண்டுமாயின் அன்பினை அரியணை யில் அமர்த்திடுக. பந்த பாசத்தைப் பறந்திடச் செய்திடுக பல்லுயிரிடத்தும் அன்பு செய்திடுக. மெய்ப்பொருளாம் இறைச் சிந்தனையை என்றும் ஏற்றிடுக. இங்ஙனம் நடப்பதே படித்ததன் பயனாகும்; பெற்ற பிறப்பும் நற்பிறப்பாகும் என்பன போன்ற சமுதாயச் செழுமைக்குப் பயன்படும் சிந்தனை வளமையை இவர் பாடல்கள் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன.

தேசியக் கவிதை

தமிழ் நாட்டைப் பல்வேறு அயல் இனத்தினர் ஆண்டனர். அவர்களின் ஆட்சிக்குத் தகத் தமிழரும் தலையாட்டி நடந்தனர். தமக்கென்ற கேட்பாடோ சொந்த நாட்டுப் பற்றோ வரலாற்றுப் பார்வையில் தமிழரிடம் மிகுதியாகக் காணப்படவில்லை. இந்த நிலைமை எப்பொழுது மாறியது? வடபுல மாநிலங்களில் ஏற்பட்ட விடுதலைக் கிளர்ச்சித் தமிழகத்திலும் அனைத்துத் தரப்பினரிடை யேயும் பரவத் தொடங்கியது. உலகெங்கும் ஏற்பட்ட உரிமைக் கிளர்ச்சிகள், வெற்றிகள் துணை நின்றன. 1905இல் நிகழ்ந்த வங்கப் பிரிவினை இந்தியாவின் விடுதலைக் கிளர்ச்சிக்காரர்களை ஊக்குவித்தது. 1908இல் தொடங்கித் தமிழில் முதன் முதலாக தேசியக் கவிதைகள் வெளிவரலாயின. தேசியக் கவிதைகளுக்கு மிக அழுத்தம் தந்தவர் பாரதி எனினும் அவரின் சம காலத்தவரான வ. உ. சி. பாடிய பாடல்களிலும் தேசிய மணம் கமழாமல் இல்லை. தேசியம், தமிழ், தெய்வம், காதல், மானுடம் என்னும் ஐந்தும் தேசியக் கவிதையின் உள்ளடக்கங்களாக அமைந்தன. இவ்வைந்து உள்ளடக்கங்களையும் வ.உ.சியின் பாடல்கள் ஓரளவுத் தொட்டுப் பார்த்துள்ளன.

தேசியம்

வ.உ.சியின் நூலான 'தன் வரலாற்றின்' ஒவ்வொரு வரியும் தேசிய உணர்வை மையமாகக் கொண்டது. வ.உ.சியின் அடி

நெஞ்சில் ஆழப் புதைந்திருந்த நாட்டுப்பற்று, அப்பற்று அரும்பி வளர்ந்து, முதிர்ந்த முறை, அப்பற்றினால் அவர் சந்தித்த சோதனைகள், சோதனைகளையும் மீறி அவர் நிகழ்த்திய சாதனைகள் ஆகியவற்றை வெள்ளிடை மலையாகக் காட்டும் நூலே தன் வரலாறாகும்.

''சுதேசியம் வளர்த்ததைச் சொல்லுவேன் இனியே'' எனக் குறிப்பிடும் வ. உ. சி. சுதேசியத்தை வளர்த்த வகையினை — வழி முறையினை இந்நூலில் விரிவாக விளம்பியுள்ளார்.

''நாட்டினை நண்ணிடற்கே, நாட்டினைத் தந்தருளே, நாட்டினை நேர்குவையே, நாட்டினை நல்குவையே, நாட்டொடு சேர்ந்தருளே''

என இவர் இயற்றிய பாடற்றிரட்டு என்னும் நூலில் இடம் பெற்றுள்ள தொடர்கள் சிறைவீடு பெற்று நாட்டிற்காகப் பாடுபட விரும்பிய வ.உ.சியின் நாட்டுப்பற்றினை உணர்த்த வல்ல நயமான வரிகளாகும்.

தமிழ்ப் பற்று

தேசியத்திற்கு அடுத்ததாய் வ.உ.சியின் நெஞ்சைப் பிணித்து ஈர்த்தது தமிழ்ப்பற்றாகும்,

''மதுரைத் தமிழ்ச் சங்கம் மருவி யின்று
மதுரத் தமிழினை மனங்கொடு வளர்த்தேன்''

எனத் தாம் ஆற்றிய தமிழ்த்தொண்டினை வ. உ. சி அறிவிக்கிறார்.

''திருவள் ளுவரின் தெய்வமா மறையின்
பெருவளக் குறள்சில பேணிப் படித்தேன்
நந்தாது விளங்கும் நற்சங்க நூல்களுள்
சிந்தா மணியும் சிலப்பதி காரமும்
மணிமே கலையும் மற்றுஞ் சிலவும்
நூணிவோ டெடுத்துத் தொடங்கினேன் முடித்திலேன்
தொல்காப் பியமெனும் சொல்லுயர் நூலினை
நல்காப் பியமென நன்மனம் கொண்டு''

என வரும் வரிகளே இவரைக் கவர்ந்த தமிழ் நூல்கள் எவை என அறிவிக்கின்றன. தமிழ் மொழி இலக்கிய இலக்கண வளமுடையது என்பதனையும் வ. உ. சி. குறிப்பால் உணர்த்துகிறார்.

''எண்ணும் எழுத்தும் இடைவிடாது ஆள்க
அவைதாய் மொழிகொளின் அதைமுன் பறிக''

என்ற வரிகள் தாய்மொழிக் கல்வியின்பால் அவர் கொண்டிருந்த தாக உணர்வை எடுத்துக் காட்டுகின்றன.

"விவேக பாநு விளங்குற எங்கும்
விவேக பாநுவை வெளிவரச் செய்தேன்"

என்ற வரிகள் வ.உ.சியின் 'விவேக பானு' என்னும் இதழ் வழி ஆற்றிய தமிழ்த் தொண்டினை எடுத்தியம்புகின்றன.

"ஆதிஞா னத்திற்கும் ஆன்மஞா னத்திற்கும்
நீதிஞா னத்திற்கும் நீள்உலகில்—ஆதிமுதல்
பேர்பெற்ற நம்மொழியின் பேரறிஞர் நூல்களைப்போல்
சீர்பெற்ற நூல்களுண்டோ செப்பு."

என்ற பாடலில் தமிழின் தெய்வீகத் தன்மையை வ. உ. சி. சுட்டிக் காட்டுவதுடன் அத் தெய்வீகத் தமிழிற்கு இணையாக உலகில் வேறு எம்மொழியும் இல்லையெனக் கூறித் தமிழ் மொழியில் தனித்தகுதியினை எடுத்துக் காட்டியிருப்பது மகிழ்தற்குரியதாகும்.

தெய்வம், காதல்

வ.உ.சிக்கு முன்பே தெய்வம், தமிழிலே மிகுதியாகப் பாடப் பட்ட பொருளாகும். காதலும் மிகுதியாகப் பாடப்பட்டிருந்தது. தெய்வத்தையும் காதலையும் சேர்த்துப் பாடும் நாயக–நாயகி பாவம் முன்பே பாடப்பட்டிருந்தது. வ. உ. சி. இதில் புதுமையைச் செய்தார், பாரதியைப் போன்றே தெய்வீகம், காதல் என்ற என்ற இரண்டிலும் தேசியத்தை நுழைத்தார்.

"ஆயபழம் பேட்டை யனவரத சுந்தரவி
நாயகரே யெஞ்ஞான்று நன்றுறுநந்— தூய
வடியிணை சார வருள்புரிந் தெங்கள்
மடியினைத் தீர்ப்பீர் மகிழ்ந்து."

எனப் பேட்டைக் கணபதியிடம் நாட்டின் கவலையை ஒப்படைத்து அதைத் தீர்க்குமாறும் வேண்டுகிறார்.

"எங்குநிறை மெய்ப்பொருளே யெல்லார்தந் நெஞ்சுள்ளுந்
தங்குபர சின்மயமே தந்தருள்வா—யிங்கெனது
நாட்டிலுளார் தீதொழித்து நன்றியற்றி மேன்மையுற்று
வீட்டிலுறு நல்ல விதி."

என நன்னெறியில் நடவா நாட்டு மக்களைத் திருத்துமாறு மெய்ப் பொருளை வ. உ. சி. வேண்டுகிறார்.

''என்னுயிரே யென்னறிவே யிவ்வுலகி லெவ்வுயிர்க்குந்
தன்னுயிரா யுள்ளுள்ளே சார்ந்து நின்று—மன்னுயிர்கள்
இன்பமுறக் காத்தளிக்கு மென்சிவமே யென்னாட்டின்
துன்பமற நல்காயோ துப்பு''

என நாட்டுச் சிக்கலைத் தீர்க்கச்சிவனின் துணையை நாடுகின்றார் இங்ஙனம் இவர் தம் இறைநெறிப் பாடல்களிலெல்லாம் தேசியம் ஊடுருவி நிற்பதை உணரலாம்.

வ. உ. சி. தம் வாழ்க்கைத் துணைவியாரைக் காதலித்த அளவிற்குத் தேசியத்தையும் காதலித்துள்ளார் என்ற செய்திக்குத் தம் துணைவியார்க்கு அவர்எழுதிய கவிதை வடிவ அஞ்சல்கள் தக்க ஆதாரங்களாய் விளங்குகின்றன.

''கம்சனெனும் மன்னனது கற்புச் சகோதரியின்
வம்சமதில் நம்திருமால் வந்தவனைத்—தும்சம்
செயச்சிறையுள் புக்கதுபோல் தீவினையைத் தும்சம்
செயச்சிறையுள் புக்கேன் சிரித்து.

எனத் தாம் சிறை சென்றதற்குரிய உயர் நோக்கத்தினை உணர்த்தித் தம் துணைவியாரை வ. உ. சி. ஆற்றுவிக்கின்றார்.

''கோனாட்சி நீக்கிக் குடியாட்சி ஏற்படுத்தித்
தானாட்சி செய்வலெனச் சாற்றியோன்—மீனாட்சி
என்றழைக்க உள்மகிழும் ஏந்திழையே உற்றனையோ
இன்றழைக்கக் காணா இடர்.''

என்ற பாடலில் தான் பிறந்த குடியினை ஆட்சி செய்வதுடன் நாட்டிலும் குடியாட்சி முறையினைக் கொணர வேண்டுமென்ற தமது விருப்பத்தினை வ. உ. சி. வெளியிட்டுள்ளார்.

''என்னரும் உயிரினும் என்னுயர் உளத்தினும்
மன்னுறப் பாதியை மகிழ்ந்துனக் களித்தேன்;
பின்னுள பாதியைப் பெரியநம் தேயத்தின்
தன்னடிக் களித்தேன்: சத்தியம் இஃதே.''

என்ற வரிகள் நாட்டுப்பற்றும் அவரின் நாயகிப் பற்றும் அவர்தம் நெஞ்சில் சரி சமமாய் ஆட்சி செய்வதை வடித்துக் காட்டுகின்றன. இங்ஙனம் விடுதலறியா வீட்டுப் பற்றிலும் நாட்டுப் பற்றினை நடமிடச் செய்த நற்பண்பினர் வ. உ. சி. ஆவார்.

மானுடம்

மானுடம் பற்றிப் பாடுதல் தமிழக் கவிதையின் சிறப்புக் கூறுகளுள் ஒன்றாகும். சங்க காலத்தில் மானுடம் பற்றிய செய்திகளே

கவிதையின் பாடு பொருளாய் அமைந்தன. இடைக்காலத்தில் இறைமை பாடுபொருளாகப் பயன்பட்டாலும் மானுடம் பற்றிய செய்திகள் கவிதைகளின் குறிப்புப் பொருளாக அமைந்துள்ளன, பாரதி காலமான மறுமலர்ச்சிக் காலத்தில் மானுடம் பற்றிப் பாடுதல் கவிதையின் முதன்மைப் பொருளாயிற்று. மனித உடம்பினைப் பற்றியுள்ள நோயினை எடுத்துக்காட்டி, அது தீர்வதற்குரிய வழிவகையினையும் காட்டுகிறவனே சிறந்த மருத்துவனாவான். கவிஞனும் மானுடத்தைச் சூழ்ந்துள்ள கேடு களைக் காட்டுவதுடன் கேடுதீர்க்கும் வழிவகையினையும் சுட்டிக் காட்டுவான். வ. உ. சி. பாடியுள்ள பாடல்களில் மானுடத்தைத் தாக்கும் கேடுகள் இடம் பெற்றிருப்பதுடன் அக் கேடுகள் நீங்கப் பெறுதற்குரிய செயற்பாடுகளும் இடம் பெற்றுள்ளமையை உணரலாம். இம்மானுடக் கேடுகள் மனித வாழ்க்கை முறையின் அனைத்து நிலையினரையும் ஆட்கொண்டுள்ளமையைக் கீழ்வரும் வரிகள் தெள்ளிதிற் விளக்கும்,

''சாமிக ளுட்பலர் காமிக ளாயினர்.
தேசிக ருட்பல ராசின ராயினர்
மகந்துக ளுட்பல ரிகந்தன ரொழுக்கம்
தம்பிரான் மறமெலா மெம்பிரா னறிவர்.
போலியந் தணர்பலர் புரியா மறமிலை
அரசரு ளுளர்மறங் கரவினி லாள்பவர்.
இல்வாழ் வினருளும் புல்வாழ் வினருளர்
மாணவ ருளுமுளர் கோணல் கொண்டவர்.
உலக மென்றுநல் லொழுக்கங் கொள்ளும்?
உள்ளும் புறமு மோரியல் பூணும்?''

மானுடத்தின் வளர்ச்சியை—மேம்பாட்டைச் சிதைப்பது இன்றைய மனிதரிடையே முதிர்ந்து வரும் 'இகல்' என்னும் உணர்வேயாகும். இவ்விகலின் இயல்பு, அதனாலாகும் கேடு ஆகியன பின்வரும் வரி களில் விளக்கம் பெற்றுள்ளன.

''இகலெனப் படுவ துளமாறு பாடு
அதனிய லடுத்தவ ரழமனம் விரும்பல்;
இடருற மொழித லிடுக்கண் புரிதல்
இகலுள மென்று மெரிந்து துன்புறும்
அன்போ டட்பமோ வின்போ வுறாது
இகல்பா ராட்டுவார் தகல்காண் பரிது;
அருமைச் சுற்றமு மாக்கமு மிழப்பர்;
கேடு மழிவுங் கிளைகளாக் கொள்வர்.''

"நீதிநூல் கல்லாதும் நில்லாதும் கற்றபடி
ஓதிஇவண் அந்தங்கள் உற்றுநின்றார்—மாதின்
மயக்குண்டும் கள்ளுண்டும் வாய்ஞ்ஞானம் பேசித்
தியக்குண்டு போனார் சிதைந்து."

என்ற பாடல் இன்றைய மானுடத்தின் இழிநிலையை எடுத்துக் காட்டுகின்றது.

"நியாயமாக் கேட்குதல், நியாயமா எழுதுதல்,
தயாளமாச் சிட்சித்தல், தர்மமாக் காததல்
எங்ஙனம் காணலாம் இக்கலி யுகத்தில்?"

என்ற வரிகளில் கலியுகத்தில் மானுடக்கேடு நிகழ்தல் தவிர்க்க முடியாதது என வ. உ. சி. மானுடக் கேட்டிற்குக் காலக்கேட்டைக் காரணமாக்கிக் காட்டியுள்ளார், மானுடம் பயன்படத் தம் பண்பு நலம் துணை நின்றமையை, 'தன் வரலாறு' என்னும் அவரது நூற் செய்திகள் விளக்கமாய்க் காட்டுகின்றன.

"'இல்லை' எனுஞ்சொல் எவர்க்கும் உரைத்திலேன்
உயிர்க்கொரு துன்பமும் உள்ளேன்,"

"அன்பினும் அருளிலும் அளவு கடந்தேன்
இன்பிலும் மகிழ்விலும் இயல்பு கடந்தேன்,
சிறியவர் உரையினும் தெள்ளிய கண்டால்,
அறிவெனக் கொள்வேன்; அவரைத் துதிப்பேன்;
பழையராய் நின்றவர் பழமையை மறந்து
பிழையையே இயற்றினும் பேணி அவரொடு
சொல்லிக் காட்டுவேன்; தொடர்ந்துமே விடிப்பேன்:
நல்லியல் மொழிவேன்; நட்பினை வளர்ப்பேன்;
வெண்மைய ராயினும் வேற்றுமை இன்றி
இயலும் உதவியை இன்பொடு புரிவேன்
அயலென எண்ணேன் அன்பின் பெருக்கால்."

தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த வேதநாயகம் என்பாரை ஏதமில்லாமல் காவல்துறையினர் எண்ணிலா வழக்கில் அமிழ்த்திய பொழுது அனைத்து வழக்கிற்கும் தாமே வழக்குரைஞராகி, வாதாடி அவரை மீட்டியமை, தமிழ்த்துறை உணர்ந்த தம்பிரானான ஆறுமுகம் என்பாரை அவருக்குத் தொடர்பில்லாத கொலை வழக்கில் காவல்துறையினர் கொணர்ந்து நிறுத்திய பொழுது, அவருக்காகவும் வாதாடிப் பொய் வழக்கிலிருந்து அவரை விடுவித்தமை ஆகிய செயல்கள் வ.உ.சியின் மானுட நேயத்தை அங்கை

நெல்லிக்கனியென அறிவிக்கின்றன. மானுடத்தை அழிக்கவல்ல கொலை, களவு, கள், காமம், பொய் எனும் ஐம்பெரும் பாதகங் களிலிருந்து சமுதாயம் விடுபட்டு அருள், ஈகை, உண்மையறிவு, ஆசையின்மை, வாய்மை என்பன மானுட உலகில் ஆட்சி செய்ய வேண்டுமென்று வ.உ.சி. விழைந்தார். மானுடத்தை வளர விடாத படித் தடுக்கும் தடைக்கற்கள் சாதி, சமயம் பற்றிய உணர்வு களாகும். சாதி, சமயம் பற்றிய வ.உ.சியின் கருத்தை அவர்பாடல் வழியே அறிவது சிறப்புடையதாகும்.

"ஆதிவழி வந்துநிற்கு மாருயிர்கள் தம்முள்ளே
சாதிமத வேற்றுமைதான் சார்வதெங்ஙன்?—ஆதி
ஒருவனென்ப தெல்லோர்க்கு மொத்தமுடி வென்றால்
வருவதெங்ஙன் வேற்றுமைதான் மற்று?"

என்ற பாடல் சாதி, மத வேறுபாடுகளை எண்ணிப் பார்க்காத வ.உ.சியின் பேருள்ளத்தைப் புலப்படுத்துகின்றது.

"இவ்வுலகி னிற்கின்ற வெவ்வுயிரு மீசன்மக
வெவ்வுடலு மீசனில்ல மென்றெண்ணி—யெவ்வுயிர்க்கு
மூறொன்றுஞ் செய்யா துயர்வடைவாய் மெய்சேர்க்கு
மாறென்று காண்பா யது."

என வரும் வ.உ.சியின் பாடல் மானுடச் செழுமைக்குரிய நல்லாற்றினை அறிவுறுத்துகின்றது.

"இப்பாக்கள் யான் என்ன சமயத்தைச் சேர்ந்தவனென்பதை யும், எனது மனம் எதனை முதன்மையாகப் பற்றி நிற்கின்றதென் பதையும், யான் சிறையில் எனது காலத்தை எவ்வாறு கழித்தே னென்பதையும், எனது சுற்றத்தார்களிலும் நண்பர்களிலும் யார் யாரை எவ்வெவ்வாறு யான் நேசித்து வருகிறேனென்பதையும், எனக்கு அவர்கள் என்ன என்ன உதவிகள் செய்துள்ளார்களென் பதையும், யான் எனது சிறைவாசத்தில் எவ்வித மேம்பாட்டை அடைந்துள்ளேனென்பதையும் வெளிப்படுத்தும்" என, வ.உ.சி. இயற்றிய மெய்யறம் என்னும் நூலில் பாயிரம் பகுதியில் இடம் பெற்றுள்ள செய்திகள் மானுடம் பற்றிய வ.உ.சியின் மாண்புடைச் சிந்தனையை அறிமுகம் செய்கின்றன.

"இல்லார்க் கிரங்கிட னீ"

"ஏவரையு முன்னுயிரென் றெண்"

"என்னு ளிருந்தொளிரு மென்னறிவே யெத்திசையு
மன்னிநிற்கு எவ்வுயிரும் வாழ்க வருள்"

என வரும் வ.உ.சியின் வரிகள் மானுட மேம்பாட்டிற்கு வழிவகை காட்டுகின்றன.

சுருங்கக்கூறின், கருத்தாழம், கவிதை ஒழுங்கு, மனிதநேய உறவு, தேசியச் சிந்தனை ஆகியவற்றை வ.உ.சியின் கவிதைப் படைப்புக்களின் சிறப்புக் கூறுகளாகச் சுட்டலாம்.

இலக்கியப் பிறபணிகள்

குறிப்பிட்ட ஒரு துறையில் தான் ஒருவர் சிறப்பர் என்ற பொது உண்மை பொய்த்துப் போகும் நிலையில் வ.உ.சியின் இலக்கியப் பணி நால்வகைத் துறைகளில் வித்திட்டுள்ளது என முன்னர்க் கண்டோம். அவற்றுள் விரிவாக விளக்கம் செய்யப்பட்டுள்ள படைப்புத்திறன் நீங்கலாக எஞ்சியுள்ள உரை, பதிப்பு, மொழிபெயர்ப்பு ஆகிய மூன்று துறைகளிலும் அவர் ஆற்றியுள்ள பணிகளை விரிவஞ்சிச் சுருக்கக் காட்டுவோம்.

உரைவளப் பணி

இன்னிலை, திருக்குறளின் அறத்துப்பால், சிவஞானபோதம் ஆகிய மூன்றிற்கும் வ.உ.சி. வளமான உரை எழுதியுள்ளார்.

இன்னிலையின் உரைப் போக்கு

இன்னிலை என்னும் நூலின் ஒவ்வொரு பாடலுக்கும் அநுவயம், பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடஉரை என்னும் ஐவகைப் பகுப்பில் உரைவகுத்துச் சென்றுள்ளார். அநுவயப் பகுதியில் பாடலுக்குப் பொருள் கொள்ளும் முறையில் சொற்புணர்ப்புகளைப் பிரித்துக் காட்டியுள்ளார். பதவுரைப் பகுதியில் பாடற்பதங்களின் பொருளை விளக்குகின்றார். பொழிப்புரைப் பகுதியில் செய்திகளைத் தொகுத்துக் கூறியுள்ளார் கருத்துரைப் பகுதியில் சுருங்கிய வடிவில் திரண்ட கருத்துக்களை விளக்குகிறார், விசேட உரைப்பகுதி வ.உ.சியின் உரைத் திறனை வெளிப்படுத்தும் இடமாக விளங்குகின்றது,

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாக இன்னிலையை அடக்கியுள்ளார். மதுரை ஆசிரியரை இந்நூலின் தொகுப்பாசிரியராகக் காட்டியுள்ளார். பாரதம் பாடிய பெருந்தேவனார் இந்நூலிற்குக் கடவுள் வாழ்த்துப் பாடியதாகக் கூறியுள்ளார்.

இலக்கணக் கருத்துக்களைப் பொருத்திக் காட்டுதல், யாப்பிலக்கணத்தினைப் பாடல்களுடன் பொருந்தச் செய்தல், தேவைப்படும் அருஞ்சொற்களுக்குப் பொருளுரைத்தல், நூலாசிரியர் காட்டும் பொருள்களுக்கு நுணுகி விளக்கம் வழங்குதல். நூலின் செய்திகளுக்குப் பிற நூல்களைச் சான்றாக்கிக் காட்டுதல், விளங்கா இடங்களுக்குச் சொற்களை வருவித்துப் பொருளுரைத்தல் ஆகியவற்றை வ.உ.சியின் இன்னிலை பற்றிய உரைச்சிறப்புக்களாகச் சுட்டலாம். இச்சிறிய நூலிற்கு மேற்கோளாக அவர் பயன்படுத்தியுள்ள நூல்கள் முப்பது ஆகும்.

திருக்குறள் உரை

வள்ளுவர் வகுத்த அறத்துப்பாலில் அடங்கிய முப்பத்தெட்டு அதிகாரங்கட்கும் வ.உ.சி. உரை வகுத்துள்ளார். அறத்துப்பாலை இயல்களாகப் பகுப்பதிலும் அதிகார வைப்பிலும் குறள் வைப்பு முறையிலும் பரிமேலழகர் முறையினின்றும் வேறுபடுகின்றார். பாயிரம் பற்றிய இவரின் கருத்து, புதுமைக்கும் சிந்தனைக்கும் உரியது. கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை ஆகிய அதிகாரங்களை வள்ளுவர் இயற்றவில்லை என்னும் புதிய செய்தியினைப் புலப்படுத்தி அதற்குக் காரணங்களும் காட்டியுள்ளார். பொருள் விளங்காத அருஞ் சொற்களுக்குப் பொருளினை ஆங்காங்கே சுட்டியுள்ளார். பல குறள்கள் இவரின் புதிய உரை பெற்றுப் பொலிகின்றன. சில குறள்களுக்குத் தந்துள்ள விளக்கம் நுட்பமாய் அமைந்துள்ளது. பொருளை விளங்கிக் கொள்ள இடர்ப்படும் குறள்கட்குத் தமது சொற்களை வருவித்துப் பொருள் உரைத்துத் தெளிவுபடுத்தியுள்ளார், அருஞ்சொற் புணர்ப்புக்களைப் பிரித்துக் காட்டி அவற்றை எளிமைப்படுத்தியுள்ளார். பொருளைச் சிறக்கச் செய்யுமாறு, கொண்டு கூட்டிப் பொருள் உரைத்திருத்தலும் இன்றியமையாதவற்றிற்கு இலக்கணக் குறிப்பினைச் சுட்டியிருத்தலும் குறிப்பிடத்தக்கனவாகும். எடுத்துக் கொண்ட குறட்பாவின் பொருளை அதன்தொடர்புடைய பிறிதொரு குறட்பாவின் துணைக்கொண்டு விளக்கம் செய்துள்ளார்; இலக்கிய மேற்கோள் காட்டித் தமது உரையினை நிறுவியுள்ளார்; பரிமேலழகர் உரைப் பொருள்களில் சிலவற்றை ஏற்றுள்ளார். பலவற்றை மறுத்துள்ளார். மூலத்தில் நாற்பத்திநான்கு பாட வேறுபாடுகளை வ.உ.சி. அமைத்துக் காட்டியுள்ளார்.

சிவஞானபோதவுரை

இந்நூலிற்கு வ.உ.சி. வகுத்துள்ள உரை கல்லாதாரும் கற்றாரும் புரிந்து கொள்ளும் நிலையில் மிக எளிமையாய் அமைந்துள்ளது. சிவஞானபோதச் சூத்திரங்களின் சொற்கள், சிவஞான போதச் சூத்திரங்களுக்குச் சிவஞான சுவாமிகள் இயற்றியுள்ள சிற்றுரையின் பிண்டப் பொழிப்புரை, தமது மெய்ஞ்ஞானம், தமிழ் அகராதி ஆகியன இந்நூலிற்கு உரை எழுதத் தமக்கு உதவியதாகக் குறிப்பிடுகின்றார். மெய்கண்ட தேவரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் வார்த்திகப் பொழிப்புரை அவரால் இயற்றப்பட வில்லை என்பது வ.உ.சியின் கருத்தாகும். ஒவ்வொரு சூத்திரத்தின் சாரத்தையும் அதனதன் தலைக்குறிப்பாகத் தந்துள்ளார். சூத்திரப் பொருளைப் பொருள் என்ற சொல்லால் சுட்டுகின்றார். இலக்கணக் குறிப்பு முதலியவற்றிற்கு அகலம் என்ற சொல்லோடு தொடங்கி அவரது உரை வகுக்கப்பட்டுள்ளது. சொற்களை வருவித்துப் பொருளுரைத்தல், சொற்களைக் கொண்டுகூட்டிப் பொருளுரைத்தல், சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் பொருள் விளக்கம் தரல், எடுத்துக்காட்டுக்களால் உரைப்பொருளை ஆழப் படுத்தியிருத்தல், பாட வேறுபாடு காட்டி இருத்தல், இலக்கணக் குறிப்பினைத் தேவைப்படும் இடங்களில் சுட்டியிருத்தல் ஆகியவற்றை இந்நூலின் உரைச் சிறப்புக்களாகச் சுட்டலாம். சிவஞான போதத்திற்கு எழுந்துள்ள ஏனைய உரைகளில் காணப்படும் பல மதக்கோட்பாடுகளும் அவற்றின் கண்டனங்களும் இவரது உரை நூலில் இடம் பெறாமை குறிப்பிடத்தக்கது. நூலின் பின்னிணைப்புச் செய்திகள் அவரது சமயப் பொறையைக் காட்டுவனவாக அமைந்துள்ளன.

பதிப்புப் பணி

திருக்குறள் அறத்துப்பாலிற்கு மணக்குடவர் உரையினையும் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம், பொருளதிகாரம் ஆகியவற்றிற்கு இளம்பூரணர் உரையினையும் வ.உ.சி. பதிப்பித்துள்ளார்.

திருக்குறள் பதிப்பு

திருக்குறளுக்கு எழுந்துள்ள பழைய உரைகளுள் மணக்குடவர் உரையினை நேரிய உரையாக வ.உ.சி. கருதுகின்றார். மணக்குடவர் உரையினை அறத்துப்பாலுக்கு மட்டும் பதிப்பித்து உள்ளார். இது அவரது முதற் பதிப்பாகும். மணக்குடவர் உரையிடைக் காணப் படும் அரிய சொற்களுக்குப் பொருள் விளக்கம் தந்துள்ளார். மணக்குடவர் உரை தெளிவாகுமாறு தேவைப்படும் சொற்களை அடைப்

புக் குறிக்குள் உரையிடைப் பயன்படுத்தியுள்ளார். மணக்குடவர் விளக்கம் செய்யாத இயலிற்கு விளக்கம் தருகின்றார். உரையாசிரியர் விளக்கம் தராத குறளுக்கு உரை விளக்கம் தந்துள்ளார். சில குறள்களுக்கு மணக்குடவர் உரையினைப் பரிமேலழகர் உரையுடன் பொருத்திக் காட்டி, இரு உரைகளின் வேற்றுமைகளையும் விளக்குகின்றார். அதிகாரவைப்பு முறையில் மணக்குடவர் விடுத்த அதிகாரங்களின் வைப்பு முறையினைச் சுட்டியுள்ளார். மணக்குடவர் உரையினைப் பதிப்பித்துள்ள பிறர் காட்டாத பல புதுமைக் கூறுகளுடன் வ.உ.சியின் திருக்குறள் பதிப்பு அமைந்துள்ளது.

தொல்காப்பியம்-எழுத்து, பொருளதிகாரங்கள்

தொல்காப்பிய உரைகளில் இளம்பூரணர் உரையினைச் சிறந்ததாக வ.உ.சி. மதிக்கின்றார். எனவே தொல்காப்பியம் எழுத்ததிகாரத்திற்கும் பொருளதிகாரத்தின் அகத்திணை, புறத்திணை ஆகிய இரு இயல்களுக்கும் இளம்பூரணர் உரையினைப் பதிப்பித்துள்ளார். பொருளதிகாரத்தின் பிற இயல்களை வையாபுரியின் துணைகொண்டு பதிப்பித்துள்ளார்.

எழுத்ததிகாரப் பதிப்பின் சிறப்புக் கூறுகள்

பாட வேறுபாடுகளைச் சில இடங்களில் குறித்துள்ளார். சூத்திரங்களிடைக் கிடந்தனவும் இளம்பூரணரின் உரை விளக்கத்திடைக் கிடந்தனவுமான பொருள் விளங்காச் சொற்களுக்குப் பகரக் குறியிட்டு பொருள் தந்துள்ளார். பொழிப்புரையாகக் கொடுக்கப்பட்டிருந்த உரைப்பகுதிக்குப் பதவுரை தந்துள்ளார். நூற்பாவின் இடையில் விளக்கம் பெறா இடங்கள் விளக்கம் பெற்று அவை வ.உ.சியின் விளக்கம் எனப்புலப்படுமாறு பகரக் குறிகள் இடையே தரப்பட்டுள்ளன. நான்கு சூத்திரங்களுக்கு இளம்பூரணர் தந்துள்ள உரைவிளக்கம் நேரியதாகப்படாமையால் தமக்குப் பொருந்திய நேரிய உரையினை அச் சூத்திரங்களுக்குத் தந்துள்ளார். எழுத்ததிகாரப் பதிப்பில் சூத்திர முதற்குறிப்புக்கள் இயல் அகராதி, இயல் தோறும் உள்ள சூத்திரங்களின் தொகை ஆகியவற்றையும் தந்துள்ளார்.

பொருளதிகாரப் பதிப்பு

பொருளதிகாரத்தில் அகத்திணை, புறத்திணை நீங்கலாக ஏனைய ஏழு இயல்களில் தேவைப்படும் சூத்திரங்களுக்குப் பாட வேறுபாடு தந்துள்ளார். உரை சிதைந்த பகுதிகளில் உடுக்குறி

யிட்டுத் தம் உரையினை எழுதியுள்ளார். பொருளதிகாரத்தில் துறைகளுக்கு எடுத்துக்காட்டாக இளம்பூரணர் தந்துள்ள சில பாடல்கள் முழுமையாகக் காட்டப்படவில்லை. அங்ஙனம் முழுமை யாய் அமையாத பாடல்களில் விடுபட்ட பகுதிகளைப் பகரக் குறி யினுள் தந்துள்ளார். ஏடு திரட்டும் முயற்சி, பல உரைகளின் பயிற்சி, நூல் நுதல் பொருளில் பயிற்சி, பன்னூற் பயிற்சி, பிழை களையும் துணிவு, பாட வேறுபாட்டில் தேர்வு, சிதைவை முழுமை செய்தல், தன்னுரை தந்துதவுதல் ஆகிய பதிப்பாசிரியரின் தகுதி களைத் தமது பதிப்புப் பணியின் வாயிலாக வ.உ.சி. நிறுவிக் காட்டுகின்றார்.

மொழிபெயர்ப்புப் பணி

அனைத்து நிலைகளிலும் உலக நாடுகள் தம்முள் ஒருங் கிணைந்து ஒன்று சார்ந்திருக்கும் இந்நாளில் மொழிபெயர்ப்புப் பணி ஓர் இணைப்பு வாயிலாகப் பயன்படுகின்றது. இதனைக் கருத் திற் கொண்ட வ.உ.சியும் மொழிபெயர்ப்புத் துறையில் தம்மை ஈடுபடுத்தியுள்ளார், எனக்கருதஇடமுண்டு. இங்கிலாந்து நாட்டைச் சார்ந்தவரான சேம்சு ஆலன் என்னும் மெய்யறிவாளரின் நூல்கள் நான்கினை இவர் மொழி பெயர்த்துள்ளார்.

சேம்சு ஆலனின் ‘As a Man Thinketh’ என்னும் நூலினை ‘மனம் போல வாழ்வு’ என்று தமிழ் வழக்கிற்கு ஏற்பத் தலைப்புத் தந்து மொழி பெயர்த்துள்ளார். ‘Out from the Heart’ என்னும் நூலினை ‘அகமே புறம்’ எனத் தமிழ் வழக்கிற்கு இயையப் பெயரிட்டு மொழியாக்கம் செய்துள்ளார். ‘From Poverty to power’ என்னும் நூலின் முதற் பாதியாகிய ‘The Path of Pros" perity’ என்பதனை ‘வலிமைக்கு மார்க்கம்’ என்னும் நூலாகவும், அந்நூலின் இரண்டாம் பகுதியான ‘The way of Peace’ என்ப தனைச் ‘சாந்திக்கு மார்க்கம்’ என்னும் நூலாகவும் தமிழாக்கம் செய்துள்ளார்.

முதல் நூலில் காட்டப்பட்டுள்ள மேற்கோள் செய்யுள்கள் எத்துணை அடிகளைக் கொண்டுள்ளனவோ அத்துணை அடி களிலேயே தமிழ்ச் செய்யுள்களை வ.உ.சி. ஆக்கியுள்ளார். பிற நூல் மேற்கோள்களை மேற்கோள் அடையாளங்களுடன் காட்டி யுள்ளார். ஆயினும் சில இடங்களில் முதனூலாசிரியரின் கருத்துக் களை நன்கு விளக்குதற் பொருட்டுச் சிற்சில சொற்களைக் கூட்டி யும் குறைத்தும் மொழிபெயர்த்துள்ளார். முதனூலில் இல்லாத

அவரது சொந்தச் சேர்ப்புகளும் இடையிடையே இடம் பெற்றுள்ளன. முதனூல்களின் பழமொழிகளையும் சொற்றொடர் களையும் தமிழ்மொழி மரபிற்கு ஏற்ப மொழியாக்கம் செய்துள்ளார். அவரது மொழிபெயர்ப்பில் மிகுதியான அளவில் அழகும் மெய்ம்மையும் இணைந்து செல்வதை உணரமுடியும்.

முதனூலாசிரியர் காட்டியுள்ள சொல் இணைவுகளை வ.உ.சி. சிறப்பாகவே தமிழில் அமைத்துள்ளார் எனினும் சிற்சில இடங் களில் மொழி மரபினையும் இலக்கண முடிவினையும் பேணாது மூலத்தில் அமைந்தவாறே நேரிடையான மொழியாக்கமும் செய் துள்ளார். ஒரே சொல்லிற்குப் பொருந்தாத முறையில் பல பொருள்களையும் வழங்கியுள்ளார். மொழிபெயர்ப்பில் அவர் பயன்படுத்தியுள்ள நடை தனித்தமிழ் நடையாக அமையாது, வட சொற்கள் மிகுதியாகக் கலந்த நடையாக உள்ளது. எனினும் மொழிபெயர்ப்பாளருக்குரிய தகுதிகளை வ.உ.சி. குறைவின்றிப் பெற்றுத் தமது மொழிபெயர்ப்பினைச் செய்துள்ளார். இந்நிலை யில் பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ்மொழியில் பெயர்த்தலாகிய பணியில் தொடக்கக் காலத்தில் ஈடுபட்டவர் களுள் ஒருவராக வ.உ.சி. விளங்குகின்றார்.

வ.உ.சியும் தமிழும்

வ.உ.சியின் தமிழ்ப் புலமையினையும் அப்புலமையினால் தமிழ் உலகு பெற்றுள்ள சிறப்பினையும் பின்வருமாறு தொகுத்துக் காட்டலாம்.

தொன்மைத் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் பயிற்சியும் பழுத்த புலமையும் வ.உ.சி. பெற்றிருந்தாலும் அறநூல்களே அவரது சிந்தனையில் சிறப்பிடம் பெற்றுள்ளன. அறநூல்களுள்ளும் திருக்குறளே அவரின் கருத்தை மிகுதியாக ஈர்த்துள்ளது. இலக்கண நூல்களில் தொல்காப்பியம் அவரது கருத்தினை மிகவும் தொட்டுள்ளது. கருத்துக்களை வெளியிடக் கவிதை வடிவினையே மிகுதியும் பயன்படுத்தியுள்ளார். யாப்பு வடிவங்கள் பல அவர் கைவண்ணம் பட்டுச் சிறந்துள்ளன. அவரது படைப்பு நூல்களில் செம்பாதியும், மொழிபெயர்ப்பு நூல்கள் முழுமையும் அறம் பற்றியனவாக அமைந்துள்ளன. பழமைக் கருத்துக்களையும் பாராட்டுவதுடன் காலத்திற்கேற்ற புதுமைக் கருத்துக்களையும் காட்டும் இயல்பும் இவர்க்குரியதாகும். தமக்குப் பொருத்தமாகப் படும் கருத்துக்களைத் தக்க சான்றுடன் நிறுவிக்காட்டும் ஆற்றல் அவர்க்குண்டு. மணக்குடவர் உரை, இளம் பூரணர் உரை ஆகியன தமிழ் நெறியைத் தழுவி இருந்ததால் அவற்றைத் தமது குறிப்புரைகளுடன் பதிப்பித்துள்ளார். இன்னிலை, சிவஞானபோதம், திருக்குறள், அறத்துப்பால் ஆகியன இவரின் உரைவளம் பெற்று உயர் சிறப்படைந்துள்ளன.

வ.உ.சி. ஒப்பற்ற மனிதர். நாட்டுப் பண்பாட்டில் நன்னடையிட்டவர்; நாட்டுப் பற்றில் சீயமெனச் சிறந்து விளங்கியவர்; இறைப்பற்றில் குறைவின்றி வாழ்ந்தவர்; நாணயமான நல்ல தொழிற்சங்கத் தலைவராகவும் தொண்டாற்றியவர்; இவற்றினும் மேலாகச் சிறந்த இலக்கிய மேதையாவார்; பல நன்னூல்களின் ஆசிரியருமாவார்; அவரைப் பெற்றதால் தமிழ் பெருமை கொண்டது. தமிழை அவர் பெற்றதால் அவர் வாழ்க்கை வரலாறு சிறப்பைக் கண்டது.

முதன்மை நூல்கள்

1. சிதம்பரனார், வ.உ.,

அகமே புறம், திருமயிலை, சென்னை, மு.ப. 1914,

மெய்யறிவு, திருமயிலை, சென்னை, மு.ப. 1912

பாடற்றிரட்டு, திருமயிலை, சென்னை, மு.ப.1915.

வலிமைக்கு மார்க்கம், பெரம்பூர், சென்னை, மு.ப. 1916.

திருக்குறள்—அறத்துப்பால்—மணக்குடவர் உரைப்பதிப்பு பெரம்பூர், சென்னை மு.ப. 1917,

இன்னிலை—வ.உ.சி, விருத்தியுரை, பெரம்பூர்,சென்னை, மு.ப. 1917

மெய்யறம், பெரம்பூர், சென்னை, 1917, முதற்பதிப்பு.

மனம் போல வாழ்வு, பெரம்பூர் சென்னை, மு ப. 1920,

தொல்காப்பியம்—எழுத்ததிகாரம்—இளம்பூரணர் பதிப்பு கோயிற்பட்டி, மு.ப. 1928,

தொல்காப்பியம்—பொருளதிகாரம் (அகத்திணை, புறத்திணையியல்கள்) இளம்பூரணர் பதிப்பு, கோயிற்பட்டி, மு.ப. 1928,

சாந்திக்கு மார்க்கம், தூத்துக்குடி, மு. ப. 1934.

திருக்குறள் — அறத்துப்பால் வ.உ.சி. விருத்தியுரை, தூத்துக்குடி, மு.ப. 1935,

சிவஞானபோதம்—வ.உ.சி.உரை தூத்துக்குடி, மு.ப 1935,

14. சிதம்பரனார், வ உ. + வையாபுரிப் பிள்ளை.

தொல்காப்பியம்—பொருளதிகாரம் (அகத்திணை, புறத்திணை நீங்கலான பின் ஏழு இயல்கள்)—இளம்பூரணர் பதிப்பு, வாவிள்ள இராமஸ்வாமி, சாஸ்த்ருலு அன்ட் சன்ஸ், சென்னை, மு.ப. 1935,

15. சிதம்பரனார், வ.உ.,

சுயசரிதை, முல்லைப் பதிப்பகம், சென்னை, மு.ப. 1946,

துணை நூற்பட்டியல்

அ. இலக்கிய இலக்கண நூல்கள்

அகநானூறு கழக வெளியீடு, சென்னை-1, ஐ.ப. 1962

ஆசாரக் கோவை; கழக வெளியீடு, சென்னை ஆ.ப. 1970

ஆத்திசூடி; கழக வெளியீடு, சென்னை, ஏ.ப. 1966

ஏலாதி; கழக வெளியீடு, சென்னை, மு.ப. 1939

கலித்தொகை; கழக வெளியீடு, சென்னை, மு.ப. 1969

கொன்றை வேந்தன்; கழக வெளியீடு. சென்னை. ஏ.ப. 1964

சித்தர் பாடல்கள்; ஆர். ஜி பதிக் கம்பெனி, சென்னை, மு.ப. 1968

சிலப்பதிகாரம்; த.வை.இ. தமிழ்ச் சங்கவெளியீடு, பாகனேரி, எ.ப. 1968

சிறுபஞ்சமூலம்; கழக வெளியீடு, சென்னை மு.ப. 1936

திருக்குறள்; கழக வெளியீடு, சென்னை நா.ப. 1977

தொல்காப்பிய மூலம், பி.நா. சிதம்பரமுதலியார் அன் கோ, மதுரை மு.ப. 1922

நாலடியார்; கழக வெளியீடு, சென்னை, ஏ.ப. 1968

புறநானூறு; கழகவெளியீடு, சென்னை, ஐ.ப. 1964

புறப்பொருள் வெண்பாமாலை; கழகவெளியீடு, சென்னை, நா.ப. 1967

ஆ. பிற நூல்கள்

இரத்தினம், க. பொ; தமிழ் உணர்ச்சி; சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, மு. ப. 1988

காந்திராசன், மு.அகி., செந்தமிழர் சிதம்பரனார். புரட்சிக்கவி மலர், திருச்செந்தூர், 1987

சங்கரவள்ளிநாயகம், அ., வ.உ.சியின் வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும், சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, மு. ப. 1989,

சங்கரவள்ளிநாயகம், அ., மாநாட்டுப் பேச்சும் மாமனிதப் பண்பாடும், தமிழ் மாருதம், மதுரை, கார்த்திகை-மார்கழி-1991

சிவஞானம், ம.பொ., விடுதலைப்போரில் தமிழகம், பூங்கொடி பதிப்பகம், சென்னை, இ. ப. 1983,

சிறப்புச் சொல்லகராதி

(எண்—பக்கஎண்)

அகநானூறு 27
அகமே புறம் 11,14
அகவெளிப்பாடு 19
அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 10
அணிகளின் பயன்பாட்டு உத்தி 37
அந்தமான் தீவு 5
அபேதானந்தன் 24
அமைப்பு 16
அரசன் சண்முகனார் 13
அரசியல் பெருஞ்சொல் 63
அருணாசலம் 20
அவையடக்கம் 16
அழிவும் அன்பும் அறாமையும் 42
அறநெறிப் பாடல்கள் 55
அறம் உணர்த்தும் முறை 50
ஆசாரக் கோவை 33,35
ஆத்தி சூடி 12,52
ஆறுமுகம் 20
இடுக்கண்ணும் நகுதலும் 42
இரங்கற் பாடல் 57
இராகவன் கதை
இரா.பி. சேது 10
இராம கிருட்டினானந்தன் 24
இராமநாதபுரம் 4
இராமையா தேசிகர் 19
இல்லறமும் மேலாண்மையும் 42
இலக்கியப் பணி 7
இலாவோ 2. 15
இளம்பூரணர் 13
இறைநெறிப் பாடல் 56
இன்னிலை 14
ஈத்துவக்கும் இன்பம் 44
உடன் பாட்டு அறங்கள் 51
உடலியற் கருத்துக்கள் 31
உணர்த்தும் முறை 23
உரிமைக் கடிதங்கள் 59
உருவகம் 23
உரைவளப் பணி 4
உலகநாதப் பிள்ளை 17,18
உலகநீதி 12
உவமை 23
எண்ணும் எழுத்தும் 42, 43
எதிரதாக் காந்தல் 42
ஏலாதி 34,35.36
ஐங்குறுநூறு 27
ஐம்பெருங்காப்பியங்கள் 7
ஒட்டப்பிடாரம் 18
ஒத்துழையாமை இயக்கம் 7
ஔவை 52
கட்டபொம்மன் 4
கடலும் நால்வர் நெடுந்தேரும் 43
கடிதப் பாடல்கள் 57
கந்தசாமி, தூ.க. 10
கப்பல் குழு 1,2
கம்பர் 10
கல்கத்தா 7
கலித்தொகை 38. 52
கலெக்டர் ஆசு 15
கவிதைக் கடிதம் 59
கவிராயர் 54
கா.சு 10
காந்தியடிகள் 7
கீதை இரகசியம் 13
குடும்பநலச் சிந்தனை 57
குற்றாலச் சித்தர் 10
குற்றாலப்புராணம் 59
குறள் சொல், தொடரின் ஆட்சி 42
கொழும்பு 2
கொன்றை வேந்தன் 12. 52
கோரல் ஆலை 4
கோவைச் சிறை 5
சத்திய சோதனை 16
சட்டக்கலை 10
சண்முகம், வ. 60
சமய ஈடுபாடு 62
சாந்திக்கு மார்க்கம் 4
சாலயன் 21,23

சாலியா 2,15
சித்தர்பாடல் 34,35,36
சிலம்பு 27
சிலேடை 23,25
சிவஞான போதம் 14
சிறுபஞ்ச மூலம் 34
சீதை 9
சுதேசிய நாவாய்ச்சங்கம் 24
சுதேசியம் 24
சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி 2
சுந்தரம்பிள்ளை 59
சுப்பிரமணிய சிவா 4.5.6
சுப்பிரமணியனார், சி கே. 10
சுப்பிரமணியனார், கோ. 10
சுயசரிதை 11, 15
செல்வகேசவராயர் 14
சென்னைப் பல்கலைக் கழகம் 10
சேம்சு ஆலன் 12
சேரர் 64
சொக்கலிங்கம். தெ.ச. 15
சொற்பயன்பாட்டுமுறை 37
சொற் பயன்பாடு 29
சோமசுந்தர பாரதியார் 10
சோழர் 64
தத்துவநூல் 12
தருமசங்க நெசவுச் சாலை 24
தருமன் 9
தம் கால அறங்கள் 33
தற்குறிப்பேற்றணி 23,25. 26
தன்வரலாறு 13,16,17,23,24
தன்னிலை விளக்கப்பாடல் 51,57
திருக்குறள் 12, 13,14,27,33,38, 43,44,51
திரு.வி.க. 14
திருவிளையாடல் 2
தூத்துக்குடி 3,24,61
தூதும் ஆராய்ந்த சொல் வன்மையும் 46
தேசாபிமான சங்கம் 4
தொடை 23
தொல்காப்பியம் 13.14,52,59
தொலைவரி 2
பண்புப் படிமம் 20
பதிப்புப் பணி 11
பம்பாய் 3
பரிமேலழகர் உரை 12
பல்சுவைத்துண்டுப் பாடல்கள் 62
பழமொழி 36
பாஞ்சாலி 9
பா சி. 59
பாட்டிலக்கியத்துறை 63
பாடற்றிரட்டு
பாண்டித்துரைத் தேவர் 61
பாண்டியர் 64
பாரதியார் 2.3,5
பாலகங்காதரத்திலகர் 13
பி.ஐ.எஸ்.என். கம்பெனி 3
பிபின சந்திரபாய் 4
பின்சே 4,5
புதிய அறங்கள் 48
புதுமை அறம் 33
புதுவை 3
புராண இதிகாசங்கள் 7
புலம்பற் பாடல் 57,60
புறநானூறு 28
புறப்பொருள் வெண்பாமாலை 53
பெரிய புராணம் 10
பெரியார் 47
நல்வழி 62
நளமன்னன் 9
நளவெண்பா 12
நன்னூல் 59
நன்னெறி 62
நாட்டுப் பற்று 20
நான்மணிக் கடிகை 62
நாலடியார் 26 36
நாமக்கல் கவிஞர் 5
நிகண்டு 59
நீதி நூல்கள் 7
நெல்லைக் கலகம் 15
நெல்லையப்பர் பரலி சு. 15,16, 60
மதுரைக் காஞ்சி 26
மணக்குடவர் 12
மதுரைத் தமிழ்ச்சங்கம் 13
மயக்குவ விளக்கல் 48
ம.பொ. சி. 17,18
மரபறங்கள் 45
மரபும் பண்பில்லாமையும் 42

மரபு வழிச் சிந்தனைகள் 41
மரபுவழிச் சொற்கள் 26
மருத்துவக் கருத்துக்கள் 30
மலைபடுகடாம் 26
மறைமலையடிகள் 61
மனம் போல் வாழ்வு 11,13
மாணவர் கடமை 48
மிச் கோல் 22
மீனாட்சி சுந்தரனார் தெ.பொ.
10
முத்தி 55
முரண் 36
முரண் தொடை 23, 24, 25
முதுரை 12
மெய்யறம் 11,13,14, 41,51
மெய்யறிவு 11,13,30,35
மொழிபெயர்ப்புப் பணி 11
வடசொல்லாட்சி 28,29,37,39
வலிமைக்கு மார்க்கம் 11,14
வள்ளிநாயக சுவாமி 59
வள்ளியம்மை 13,15,19
வள்ளுவர் 34,38,44,46,47,51
வாக்குண்டாம் 62
வாழ்க்கை வரலாறு 17
வாழ்த்துப் பாடல்கள் 61
விளி 36
விளையாட்டில் விருப்பம் 19
விவேக பானு 15
வீரநெஞ்சில் ஈர நினைவு 21
வீரப் பெருமாள் 23
வெற்றிவேற்கை 12
வேதாந்த நூல்கள் 7
வையாபுரியார் 10

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

சி.ஐ.டி. வளாகம், தரமணி, (அஞ்சல்)சென்னை-600113

தொலைபேசி : 2350992

கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு வெளியீடுகள்

நாட்டுப்பற்றிலும் தமிழ்ப்பற்றிலும் தன்னிகரற்று விளங்கிய தியாகி வ.உ. சிதம்பரனாரை நினைவுகூரும் வகையில் தமிழன்பர் பலர் இணைந்து 1983-இல் இவ்வறக்கட்டளையை நிறுவனத்தில் தோற்றுவித்துள்ளனர். வ.உ.சியும் அவர்தம் படைப்புகளும், அவர்பற்றிய ஆய்வுகளும் இதன் ஆய்வுக்களமாகின்றன.

செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார்

வழக்குரைஞர் தி. நெ. வள்ளிநாயகம்; அக். 1985; vi+160; ரூ. 15

• தேசிய விடுதலைப்போரில் இவ்வீரத் தமிழரின் ஈடு இணையற்ற பங்கினையும், தமிழிலக்கிய உலகிற்கு ஆற்றியுள்ள அருந்தொண்டினையும் சிறப்புற எடுத்துக் காட்டுகிறது,

தமிழ் தந்த வ.உ. சி

முனைவர் தி. லீலாவதி; டிச. 1986; VII+118; ரூ. 15

தண்ணார் தமிழ் அளித்த தண்புனல் வ,உ.சியின் மொழித் தொண்டினை அவர்தம் உரைத்திறன் வழி விளக்குகிறது.

நாட்டுப்புறப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள்

ச. முருகானந்தம்; டிச. 1991; X+115; ரூ. 18

நாட்டுப்புற பாடல்கள் காட்டும் பல்வேறு வரலாற்றுச் செய்திகளை எல்லாம் தனித்தனியே பிரித்து எழுதுவோமாயின் நமது கடந்தகால, நிகழ்கால வரலாறு மேலும் தெளிவுபடும் எனபதற்குச் சான்றாய் நிற்கும் நூல். போர், பஞ்சம், புயல், அழிவு முதலான பல வரலாற்று நிகழ்வுகள் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன.

வ. வே. சு. ஐயர் அரசியல் - இலக்கியப்பணிகள்

பெ, சு. மணி; ஆக. 1993; XIV+262; ரூ. 45

அரசியல், இலக்கியப்படைப்பு, இலக்கிய ஆய்வு, மொழி பெயர்ப்பு எனப் பலதுறைகளில் தம்புகழ் நிறுவியுள்ள தமிழறிஞர் வ. வே. சுப்பிரமணிய ஐயரின் வீறார்ந்த செயல்களை அவர்தம் அரசியல், இலக்கியப்பணிகளாக விரித்துள்ளது.